உ

குகமயம்

முருகவேள்

பனுவல் திரட்டு

திரு. வி. உலகநாத முதலியார் அவர்கள்

தொகுத்தது

மூன்றாம் பதிப்பு

முருகவேள் புத்தகசாலை
இராயப்பேட்டை, சென்னை.

பிரமாதி௵ புரட்டாசிமீ

உரிமை
பதிவு செய்யப்பட்டது

2.00

விலை ரூ 4-0

சாது அச்சுக்கூடம்
இராயப்பேட்டை, சென்னை

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே. (உ)

திருப்பரங்குன்றம்

3. தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன—தனதான.

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்திலெ னொருதவ மிலனுன தருள்மாறு
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வருவாயே
வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா

மிருத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே
தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுநி வரர்தொழ மகிழ்வோனே
தெனத்தெ னந்தென எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே. (௩

---

4. தனனதந்த தத்தத்த தந்த
தனனதந்த தத்தத்த தந்த
தனனதந்த தத்தத்த தந்த—தனதான.

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப்ப யின்று
கடையில்வந்து தித்துக்கு ழந்தை வடிவாகிக்
கழுவியங்கெ டுத்துச்சு ரந்த
முலையருந்தி விக்கக்கி டந்து
கதறியங்கை கொட்டித்த வழ்ந்து நடமாடி
அரைவடங்கள் கட்டிச்ச தங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
அவையணிந்து முற்றிக்கி ளர்ந்து வயதேறி
அரியபெண்கள் நட்பைப்பு ணர்ந்து
பிணியுழன்று சுற்றித்தி ரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ
இரவியிந்த்ரன் வெற்றிக்கு ரங்கி
னரசரென்று மொப்பற்ற வுந்தி
யிறைவன்எண்கி னக்கர்த்த னென்றும் நெடுநீலன்

எரியதென்றும் ருத்ரற்சி றந்த
அநுமனென்று மொப்பற்ற அண்டர்
எவருமிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ
அரியதன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர்தங்கி ளைக்கட்டை வென்ற
அரிமுகுந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே
அயனையும்பு டைத்துச்சி னந்து
வுலகமும்ப டைத்துப்ப ரிந்து
அருள்பரங்கி ரிக்குட்சி றந்த பெருமாளே. (௪)

5. தந்தனந் தந்தத் தனதான
தந்தனந் தந்தத்—தனதான.

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே. (ரு)

6. தனத்தத் தந்தனம் தனத்தத் தந்தனம்
தனத்தத் தந்தனம்—தனதான.

தடக்கைப் பங்கயங் கொடைக்குக் கொண்டல்தண்
டமிழ்க்குத் தஞ்சமென் றுலகோரைத்
தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
தளர்ச்சிப் பம்பரந் தனையூசற்

கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
கலத்தைப் பஞ்சஇந் த்ரியவாழ்வைக்
கணத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங்
கழற்குத் தொண்டுகொண் டருள்வாயே
படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா
குடக்குத் தென்பரம் பொருப்பிற் றங்குமங்
குலத்திற் கங்கைதன் சிறியோனே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே. (சு)

திருச்செந்தூர்

7\. தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத் — தனதான.

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
சந்தத மும்வந்துகண் டரிவையர்க்
கன்புரு குசங்கதந் தவிரமுக் குணமாள
அந்திப கலென்றிரண் டையுமொழித்
திந்திரி யசஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்
செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெ ருகுந்தடந் தெளிதரத் தணியாத

சிந்தையு மகிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனே
கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரி குயம்புயம் பெறஅரக் கருமாளக்
குன்றிடி யஅம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே. (எ)

---

8. தானனா தந்தனம் தானனா தந்தனம்
தானனா தந்தனம்—தனதான.

காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடென்
காலினார் தந்துடன் கொடுபோகக்
காதலார் மைந்தருந் தாயரா ருஞ்சுடுங்
கானமே பின்தொடர்ந் தலறாமுன்
சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்புந்
தூயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்

ஆலகா லம்பரன் பாலதா கஞ்சிடுந்
தேவர்வா ழன்றுகந் தமுதீயும்
ஆரவா ரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதிமா யன்றனன் மருகோனே
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் செந்திலம் பதிவாழ்வே
தாவுசூ ரஞ்சிமுன் சாயவே கம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமாளே. (அ)

---

9. தனத்தந்தன தனத்தந்தன
தனத்தந்தன—தனதான.

தரிக்குங்கலை நெகிழ்க்கும்பர
தவிக்குங்கொடி மதனேவிற்
றகைக்குந்தனி திகைக்குஞ்சிறு
தமிழ்த்தென்றலி னுடனேநின்
றெரிக்கும்பிறை யெனப்புண்படு
மெனப்புன்கவி சிலபாடி
இருக்குஞ்சிலர் திருச்செந்திலை
யுரைத்துய்ந்திட அறியாரே
அரிக்குஞ்சதுர் மறைக்கும்பிர
மனுக்குந்தெரி வரிதான
அடிச்செஞ்சடை முடிக்கொண்டிடு
மரற்கும்புரி தவபாரக்
கிரிக்கும்பகன் முநிக்குங்க்ருபை
வரிக்குங்குரு பரவாழ்வே
கிளைக்குந்திற லரக்கன்கிளை
கெடக்கன்றிய பெருமாளே. (கூ)

---

10. தனத்தத் தந்தனந் தனத்தத் தந்தனந்
தனத்தத் தந்தனந்—தனதான.

நிதிக்குப் பிங்கலன் பதத்துக் கிந்திரன்
நிறத்திற் கந்தனென் றினைவோரை
நிலத்திற் றன்பெரும் பசிக்குத் தஞ்சமென்
றயற்றித் துன்பநெஞ் சினில்நாளும்
புதுச்சொற் சங்கமொன் றிசைத்துச் சங்கடம்
புகட்டிக் கொண்டிடம் பழிமாயும்
புலத்திற் சஞ்சலங் குலைத்திட் டுன்பதம்
புணர்க்கைக் கன்புதந் தருள்வாயே
மதித்துத் திண்புரஞ் சிரித்துக் கொன்றிடும்
மறத்திற் றந்தைமன் றினிலாடி
மழுக்கைக் கொண்டசங் கரர்க்குச் சென்றுவண்
டமிழ்ச்சொற் சந்தமொன் றருள்வோனே
குதித்துக் குன்றிடந் தலைத்துச் செம்பொனுங்
கொழித்துக் கொண்டசெந் திலின்வாழ்வே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே. (௧௦)

---

11. தந்தன தான தநதன தான
தந்தன தான—தனதான.

விந்ததி னூறி வந்தது காயம்
வெந்தது கோடி யினிமேலோ
விண்டுவி டாம லுன்பத மேவு
விஞ்சையர் போல அடியேனும்
வந்துவி நாச முன்கலி தீர
வண்சிவ ஞான வடிவாகி
வன்பத மேறி யென்களை யாற
வந்தருள் பாத மலர்தாராய்

எந்தனு ளேக செஞ்சுட ராகி
யென்கணி லாடு தழல்வேணி
எந்தையர் தேடு மன்பர்ச காய
ரெங்கள்சு வாமி யருள்பாலா
சுந்தர ஞான மென்குற மாது
தன்திரு மார்பி லணைவோனே
சுந்தர மான செந்திலில் மேவு
கந்தசு ரேசர் பெருமாளே. (கக)

---

12. தந்ததன தந்தனந் தந்ததன தந்தனந்
தந்ததன தந்தனந்—தந்ததான.

தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின்
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடம ணைந்துநின் றன்புபோலக்
கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களுங்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்
கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ
புண்டரிக ரண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் கொண்டபோது
பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கணும் வளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூரக்
கொண்டநட னம்பதஞ் செந்திலிலு மென்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே
கொங்கைகுற மங்கையின் சந்தமண முண்டிடுங்
கும்பமுநி கும்பிடுந் தம்பிரானே. (க௨)

திருவாவினன்குடி - பழநி

13. தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன—தனதான.

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவேனே
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதேம னோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடேமு னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர்ந னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.(கரு)

14. தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன—தனதான

மூல மந்திர மோத லிங்கிலை
யீவ திங்கிலை நேய மிங்கிலை
மோன மிங்கிலை ஞான மிங்கிலை மடவார்கள்
மோக முண்டதி தாக முண்டப
சார முண்டப ராத முண்டிடு
மூக னென்றொரு பேரு முண்டருள் பயிலாத
கோல முங்குண வீன துன்பர்கள்
வார்மை யும்பல வாகி வெந்தெழு
கோர கும்பியி லேவி ழுந்திட நினைவாகிக்
கூடு கொண்டுழல் வேனை யன்பொடு
ஞான நெஞ்சினர் பாலி ணங்கிடு
கூர்மை தந்தினி யாள வந்தருள் புரிவாயே
பீலி வெந்துய ராலி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட வாது கொண்டரு ளெழுதேடு
பேணி யங்கெதி ராறு சென்றிட
மாற னும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு முருகோனே
ஆல முண்டவர் சோதி யங்கணர்
பாக மொன்றிய வாலை யந்தரி
ஆதி யந்தமு மான சங்கரி குமரேசா
ஆர ணம்பயில் ஞான புங்கவ
சேவ லங்கொடி யான பைங்கர
ஆவி னன்குடி வாழ்வு கொண்டருள் பெருமாளே.(௧௪)

15. தனதான தந்ததன தனதான தந்ததன
தனதான தந்ததன—தனதான

சிவனார்ம னங்குளிர உபதேச மந்த்ரமிரு
செவிமீதி லும்பகர்செய் குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாஅ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ யொன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு வினைகோவே
தெவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
செகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே. (கரு)

16. தான தனதனன தான தனதனன
தான தனதனன—தனதான.

சீற லசடன்வினை காரன் முறைமையிலி
தீமை புரிபடிறன் பலநோயே
தேடு பரிசிகன நீதி நெறிமுறைமை
சீர்மை சிறிதுமிலி எவரோடுங்
கூறு மொழியதுபொய் யான கொடுமையுள
கோள னறிவிலியு னடிபேணுக்
கூள னெனினுமெனை நீயு னடியரொடு
கூடும் வகையையருள் புரிவாயே

மாறு படுமவுணர் மாள அமர்பொருது
வாகை யுளமவுலி புனைவோனே
மாக முகடதிர வீசு சிறைமயிலை
வாசி யெனவுடைய முருகோனே
வீறு கலிசைவரு சேவ கனதிதய
மேவு மொருபெருமை யுடையோனே
வீரை யுறைகுமர தீர தரபழநி
வேல இமையவர்கள் பெருமாளே. (கசு)

17. தனதத தானன தனதன தனதன—தனதான.

அருத்தி வாழ்வொடு தனகிய மனைவியு முறவோரும்
அடுத்த பேர்களு மிதமுறு மகவொடு வளநாடும்
தரித்த ஆருமெ யெனமன நினைவது நினையாதுன்
தனைப்ப ராவியும் வழிபடு தொழிலது தருவாயே
எருத்தி லேறிய இறையவர் செவிபுக வுபதேசம்
இசைத்த நாவின இதழுறு குறமக ளிருபாதம்
பரித்த சேகர மகபதி தரவரு தெய்வயானை
பதிக்கொ ளாறிரு புயபழ நியிலுறை பெருமாளே. (கஎ)

18. தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன—தந்ததான.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்

ஏறுமயில் வாகனகு காசரவ ணனென்று
ஈசனென மானமுற என்றுமோதும்
ஏழைகள்வி யாகுலமி தேதெனவி னவிலுனை
யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதோ
நீறுபடு மாழைதிரு மேனிகிரி சூலனுழை
நீலமயில் வாகியுமை தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கலேறே
சீறிவரு மாறவுண னுவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே. (கஅ)

---

19. தானந்த தனன தான தானந்த தனன தான
தானந்த தனன தான—தனதான.

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நமசி வாய வரையேறி
நாவின்ப ரசம தான ஆநந்த அருவி பாய
நாதங்க ளொடுகு லாவி விளையாடி
ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவி லாம
லோமங்கி யுருவ மாகி யிருவோரும்
ஓரந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகி னேறி
லோகங்கள் வலம தாட அருள்தாராய்
தேனங்கொ ளிதழி தாகி தாரிந்து சலில வேணி
சீரங்க னெனது தாதை ஒருமாது
சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன ஜோதி
சேர்பங்கி னமல நாத னருள்பாலா

கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடந்த மயிலி லேறு முருகோனே
காமன்கை மலர்கள் நாண வேடம்பெ ணயலி சேர்வை
காணெங்கள் பழநி மேவு பெருமாளே. (கக)

---

20. தனதனன தனதனன தானத தானத—தனதான.

ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே
உனதுபழ நிமலையெனு மூரைச் சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனெ ஞனைசப் பாடைத் தவிரேனே
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப் பெருமாளே
தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமாளே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் பெருமாளே.(உ௦)

சுவாமிமலை

21. தனனதன தானதத்த தனனதன தானதத்த
தனனதன தானதத்த—தனதான

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமணி மார்கடப்ப மணிவோனே

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே. (உக)

---

22. தான தனதன தான தனதன
தான தனதன—தனதான.

பாதி மதிநதி போது மணிசடை
நாத னருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வலம்வரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே. (உஉ)

23. தானான தானதத்த தானான தானதத்த
தானான தானதத்த—தனதான.

நாவேறு பாமணத்த பாதார மேமினைத்து
நாலாறு நாலுபற்று வகையான
நாலாரு மாகமத்தி னூலாய ஞானமுத்தி
நாடோறு நான்நினைத்து நெறியாக
நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வதற்குன் அருள்கூர
நீடார்ச டாதரத்தின் மீதேப ராபரத்தை
நீகாணெ னாவனைச்செ லருள்வாயே
சேவேறு மீசர்சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா
தேரார்கள் நாடுசுட்ட சூரார்கள் மாளவெட்டு
தீராகு காகுறத்தி மணவாளா
காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார்சு வாமிவெற்பின் முருகோனே
கார்போலு மேனிபெற்ற மாகாளி வாலைசத்தி
காமாரி வாமிபெற்ற பெருமானே. (உ௩)

குன்றுதோருடல்

24. தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன—தந்ததான.

தறையின் மானுட ராசையி னால்மட
லெழுது மாலருள் மாதர்கள் தோதக
சரச மாய்மல ரோதியி னாலிரு கொங்கையாலுங்

தளர்மி னேரிடை யாலுடை யால்நடை
யழகி னூல்மொழி யால்விழி யால்மருள்
சவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ
பறவை யானமெய்ஞ் ஞானிகள் மோனிகள்
அணுகொ ணாவகை நீடுமி ராசிய
பவன பூரக ரேசக மாகிய விந்துநாதம்
பகரொ ணாதது சேரவொ ணாதது
நினைவொ ணாதது வானத யாபர
பதிய தானச மாதிம னோலயம் வந்துதாராய்
சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய நீலக லாபம தேறிய
திறல்வி நோதச மேளத யாபர அம்புராசித்
திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீரகு றிஞ்சிவாழும்
மறவர் நாயக ஆதிவி நாயக
ரிளைய நாயக காவிரி நாயக
வடிவி னாயக ஆனைத னாயக எங்கள்மானின்
மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னார்குரு நாயக
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே. (உச)

---

25. தனதன தனன தனதன தனன
தனதன தனன—தனதான.

எழுதிகழ் புவன நொடியள வதனி
லியல்பெற மயிலில் வருவோனே
இமையவர் பரவி யடிதொழ அவுணர்
மடிவுற விடுவ தொருவேலா

வழுதியர் தமிழி னொருபொரு ளதனை
வழிபட மொழியும் முருகேசா
மலரடி பணியு மடமகள் பசலை
மயல்கொடு தளர்வ தழகோதான்
முழுகிய புனலி லினமணி தரள
முதிரொளி பவள மிகவாரி
*முறையொடு குறவர் மடமகள் சொரியு
முதுமலை யழக குருநாதா
பழகிய வினைகள் பொடிபட அருளில்
படிபவ ரிதய முறுகோவே
பருவரை துணிய வொருகை நெரிவ
பலமலை யுடைய பெருமாளே. (உரு)

பழமுதிர்சோலை

26. தனதன தான தனதன தான தனதன தான — தனதான.

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி
அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி
வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம
முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு
பெருமாளே. (உசா)

* "முறமொடு புதரில மறமகள சொரியு முதுவளி மலையில வருவோனே" என்றும் பாடம்.

27. தானதன தான தந்த
தானதன தான தந்த—தனதான.

காரணம தாக வந்து புவிமீதே
காலனணு காதி சைந்து கதிகாண
நாரணனும் வேதன் முன்பு தெரியாத
ஞானநட மேபு ரிந்து வருவாயே
ஆரமுத மான தந்தி மணவாளா
ஆறுமுக மாறி ரண்டு விழியோனே
சூரர்கிளை மாள வென்ற கதிர்வேலா
சோலைமலை மேவி நின்ற பெருமாளே. (உஎ)

---

28. தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத்
தனதன தத்தத் தத்தன தத்தத்—தனதான.

தலையயிர் கொக்குக் கொக்கந ரைத்துக்
கலகலெ னப்பற் கட்டது விட்டுத்
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டுத் தடுமாறித்
தடிகொடு தத்திக் கக்கல்பெ ருத்திட்
டசனமும் விக்கிச் சத்தியெ டுத்துச்
சளியுமி குத்துப் பித்தமு முற்றிப் பலகாலும்
திலதயி லத்திட் டொக்கவெ ரிக்கத்
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டுத்
தெளியவ டித்துற் றுய்த்துடல்செத்திட் டுயிர்போமுன்
திகழ்புகழ் கற்றுச் சொற்கள் பயிற்றித்
திருவடி யைப்பற் றித்தொழு துற்றுச்
செனனம றுக்கைக் குப்பர முத்திக் கருள்தாராய்

கலீணவி சித்துப் பக்கரை யிட்டுப்
புரவிசெ லுத்திக் கைக்கொடு வெற்பைக்
கடுகந டத்தித் திட்டென எட்டிப் பொருசூரன்
கனபடை கெட்டுத் தட்டற விட்டுத்
திரைகட லுக்குட் புக்கிட எற்றிக்
களிமயி லேச்சித் ரத்தில்ந டத்திப் பொருகோவே
குலிசன்ம கட்குப் பொற்புய முற்றக்
குறவர்ம கட்குச் சித்தமும் வைத்துக்
குளிர்தினை மெத்தத் தத்து புனத்திற் றிரிவோனே
கொடியபொ ருப்பைக் குத்திமு றித்துச்
சமரம்வி ளைத்துத் தற்பர முற்றுக்
குலகிரி யிற்புக் குற்றுறை யுக்ரப் பெருமாளே. (உ அ)

---

29. தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த—தனதான

வாதினைய டர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமதொ ழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள்பு னைந்து
மாபதம ணிந்து பணியேனே
ஆதியொடு மந்த மாகியந லங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே
நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம லைந்து திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று தொழுகேனே

சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே. (உகூ)

கயிலைமலை

30\. தானந்த தத்தந்தன தானந்த தத்ததன
தானந்த தத்ததன—தனதான

தேனுந்து முக்கனிகள் பால்செங் கருப்பிளநிர்
சீரும்ப ழித்தசிவ மருளூறத்
தீதும்பி டித்தவினை யேதும்பொ டித்துவிழ
சீவன்சி வச்சொருப மெனதேறி
நானென்ப தற்றுயிரொ டுனென்ப தற்றுவொளி
நாதம்ப ரப்பிரம வெளிமீதே
ஞானஞ்சு ரப்பமகி ழாநந்த சித்தியொடெந்
நாளுங்க ளிக்கபத மருள்வாயே
வானந்த ழைக்கஅடி யேனுஞ்செ ழிக்கஅயன்
மாலும்பி ழைக்கஅலை விடமாள
வாருங்க ரத்தனெமை யாளுந்த கப்பன்மழு
மானின்க ரத்தனருள் முருகோனே
தானந்த னத்ததன னவண்டு சுற்றிமது
தானுண்க டப்பமல ரணிமார்பா
தாளுங்கு றித்துளமை யாளுந்தி ருக்கயிலை
சாருங்கு றத்திமகிழ் பெருமாளே. (௩0)

திருத்தணிகை

31. தனத்தன தனத்தம் தனத்தன தனத்தம்
தனத்தன தனத்தம் தனதான.

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவ ருயிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெணண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே. (௩௧)

---

32. தனன தந்த தத்த தனன தந்த தத்த
தனன தந்த தத்த—தனதான.

எனைய டைந்த குட்டம் வினைமி குந்த பித்த
மெரிவ ழங்கு வெப்பு வலிபேசா
இகலி நின்ற லைக்கு முயல கன்கு லைப்பொ
டிருமெ லென்று ரைக்கு மிவையோடே

மனைகள் பெண்டிர் மக்கள் தமைநி னைந்து சுத்த
 மதிம யங்கி விட்டு மடியாதே
மருவி யின்றெ னக்கு மரக தஞ்சி றக்கு
 மயிலில் வந்து முத்தி தரவேணும்
நினைவ ணங்கு பத்த ரனைவ ருந்த ழைக்க
 நெறியில் நின்ற வெற்றி முனைவேலா
நிலைபெ றுந்தி ருத்த ணியில்வி ளங்கு சித்ர
 நெடிய குன்றில் நிற்கு முருகோனே
தினைவி ளங்க லுற்ற புனஇ ளங்கு றத்தி
 செயல றிந்த ணைக்கு மணிமார்பா
திசைமு கன்தி கைக்க அசுர ரன்ற டைத்த
 சிறைதி றந்து விட்ட பெருமாளே. (௩௨)

---

33. தனன தானனம் தனன தானனம்
 தனன தானனம்—தனதானா.

பகலி ராவினுங் கருவி யாலனம்
 பருகி யாவிகொண் டுடல்பேணிப்
பழைய வேதமும் புதிய நூல்களும்
 பலபு ராணமுஞ் சிலவோதி
அகல நீளமென் றளவு கூறரும்
 பொருளி லேயமைந் தடைவோரை
அசடர் மூகரென் றவல மேமொழிந்
 தறிவி லேனழிந் திடலாமோ
சகல லோகமும் புகல நாடொறுஞ்
 சரிகி லாதசெங் கழுநீருந்
தளவு நீபமும் புனையு மார்பதென்
 தணிகை மேவுசெங் கதிர்வேலா

சிகர பூதரந் தகர நான்முகன்
சிறுகு வாசவன் சிறைமீளத்
திமிர சாகரங் கதற மாமரஞ்
சிதற வேல்விடும் பெருமாளே. (௩௩)

34. தனதான தனதன தான
தனதான தனத்தன தான
தனதான தனத்தன தான—தனதான.

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி யதனூடே
நெடுநாளு முழைப்புள தாகிப்
பெரியோர்க ளிடைக்கர வாகி
நினைவால்நி னடித்தொழில் பேணித் துதியாமல்
தலையான வுடற்பிணி யூறிப்
பவநோயி னலைப்பல வேகிச்
சலமான பயித்திய மாகித் தடுமாறித்
தவியாமல் பிறப்பையு நாடி
யதுவேரை யறுத்துனை யோதித்
தலமீதில் பிழைத்திட வேநி னருள்தாராய்
கலியாண சுபுத்திர னாகக்
குறமாது தனக்குவி நோதக்
கவினாரு புயத்திரு லாவி விளையாடிக்
களிகூரு முனைத்துணை தேடு
மடியேனை சுகப்பட வேவை
கடனாகு மிதுக்கன மாகு முருகோனே

பலகாலு முனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறிப்
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே
பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வயித்திய நாத பெருமாளே. (௩௪)

---

35. தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன
தான தத்தன தான தத்தன—தந்ததான.

ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேனவ் அத்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதாயென்
றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவர்
ஏச விற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்
பாதம் வைத்திடை யாத ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனோடிப்
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ
ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீசமுட்டரை
யோட வெட்டிய பாநு சத்திகை யெங்கள்கோவே
ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே

மாதி னைப்புனை மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே. (௩௫)

வள்ளிமலை

36. தய்யதன தான தய்யதன தான
தய்யதன தானம்—தனதான.

ஐயுமுறு நோயு மையலுமவ வாவி
னைவருமு பாயப் பலநூலின்
அள்ளல்கட வாது துள்ளியதில் மாயு
முள்ளமுமில் வாழ்வைக் கருதாசைப்
பொய்யுமக லாத மெய்யைவள ராவி
உய்யும்வகை யோகத் தணுகாதே
புல்லறிவு பேசி யல்லல்படு வேனை
நல்லஇரு தாளிற் புணர்வாயே
மெய்யபொழில் நீடு தையலைமு நாலு
செய்யபுய மீதுற் றணைவோனே
வெள்ளையிப மேறு வள்ளல்கிளை வாழ
வெள்ளமுது மாவைப் பொருதோனே
வையமுழு தாளு மையமயில் வீர
வல்லமுரு காமுத் தமிழ்வேளே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே. (௩௬)

திரிசிராப்பள்ளி

37. தந்தானன தானன தாத்தன
தந்தானன தானன தாத்தன
தந்தானன தானன தாத்தன—தனதான.

அந்தோமன மேமம தாக்கையை
நம்பாதெளி தாகிய சூத்திர
மம்போருக ஞடிய பூட்டிது இனிமேல்நாம்
அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ னார்க்கிய
லங்காகுவம் வாஇனி தாக்கையை ஒழியாமல்
வந்தோமிது வேகதி யாட்சிபு
மிந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தானுவம் நாமென வீக்கிய சிவநீறும்
வந்தேவெகு வாநமை யாட்கொளும்
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராவெனு மார்ப்புய மறவாதே
திந்தோதிமி தீதத மாத்துடி
தந்தாதன னுதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ மறையோதச்
செங்காடென வேவரு மூர்க்கரை
சங்காரசி காமணி வேற்கொடு
திண்டாடிம காமயில் மேற்கொளு முருகோனே
இந்தோடிதழ் நாகம காப்புனல்
கங்காளமி ஞர்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திர னருள்பாலா
எண்கூடரு ளால்நெளவி நோக்கியை
நன்பூமண மேவுசி ராப்பளி
யென்பார்மன மேதினி நோக்கிய பெருமாளே.(௩௭)

38. *தானத்தத் தான தானன*
தானத்தத் தான தானன—தந்ததான.

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே
மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்துநாத
ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டுநாயேன்
யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ
ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப்பொற் பாத மேபணி கந்தவேளே
ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ரங்கவீரா
நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்றநாதா
நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர்கி ராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர் தம்பிரானே. (௩அ)

39. தனதான தானதத்த தனதான தானதத்த
தனதான தானதத்த—தந்ததான.

உருவேற வேஜெபித்து ஒருகோடி யோமசித்தி
யுடனாக ஆகமத்து கந்துபேணி
உணர்வாசை யாரிடத்து மருவாது வோரெழுத்தை
யொழியாது வூதைவிட்டி ருந்துநாளும்
தரியாத போதகத்தர் குருவாவ ரோரொருத்தர்
தருவார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ
தழலாடி வீதிவட்ட மொளிபோத ஞானசித்தி
தருமாகி லாகுமத்தை அண்டிலேனே
குருநாடி ராசரிக்கர் துரியோத னதிவர்க்க
குடிமாள மாயமிட்டுக் குந்திபாலர்
குலையாமல் நீதிகட்டி யெழுபாரை யாளவிட்ட
குறளாக மாகிநெட்டை கொண்டஆதி
மருகாபு ராரிசித்தன் மகனேவி ராலிசித்ர
மலைமேலு லாவுசித்த அங்கைவேலா
மதுராபு ரேசர்மெய்க்க அரசாளு மாறன்வெப்பு
வளைகூனை யேநிமிர்த்த தம்பிரானே. (௩௯)

---

40. தந்த தானன தான தனதன
தந்த தானன தான தனதன
தந்த தானன தான தனதன—தனதான.

ஐந்து பூதமு மாறு சமயமு
மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப

அண்ட ராதிச ராச ரமுமுயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானும் நிலவொடு வெயில்கானும்
சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது சிவயோகம்
தங்க ளாணவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ
வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட மயிடாரி
வன்கண் வீரிபி டாரி அரஹர
சங்க ராஎன மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை யுருவிய வயலூரா
வெந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாசவி கார பரவச
வென்றி யானச மாதி முறுருகல் முழைகூடும்
விண்டு மேல்மயி லாட இனியக
ரூண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்ச வீசுவி ராலி மலையுறை பெருமாளே. (௪0)

விநாயகமலை

41. தனதன தானு தனுதன தனதன தானு தனுதன
தனதன தானு தனுதன—தனதான.

சரவண ஜாதா நமோநம கருணைய தீதா நமோநம
சததள பாதா நமோநம அபிராம
தருணசு காயா நமோநம நிருபமவ் வீரா நமோநம
சமதள வூரா நமோநம ஜகதீச
பரமசொ ரூபா நமோநம சுரபதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம உமைகாளி
பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருஷ சீலா நமோநம அருள்தாராய்
இரவியு மாகாச பூமியும் மதியமும் வாழ்வா கவானவ
ரெவர்களு மீடேற வேழ்கடல் முறையோவென்
றிடர்பட மாமேரு பூதர மிடிபட வேதா னிசாசர
ரிகல்கெட மாவேக நீடயில் விடுவோனே
மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்
வசுவெனு மாகார ஈசனு மடிபேண
மயிலுறை வாழ்வே விநாயக மலையுறைவேலா மகிதர
வனசர ராதார மாகிய பெருமாளே. (௪௧)

கதிர்காமம்

42. தனதனன தான தனதனன தான
தனதனன தானத்—தனதானு.

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிருதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்

மருவுமடி யார்கள் மனதில்வினை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத திருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே. (சஉ)

---

43. தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத்—தனதான.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியுட் சிவமாகித்
துரியமே லற்புதப் பரமஞா னத்தினிற்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரு பத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே

கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளோக
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே. (௩௩)

காஞ்சி

44. தத்தத்தத் தானன தானன
தததத்தத தானன தானன
தத்தத்தத் தானன தானன—தனதான.

மக்கட்குக் கூறரி தானது
கற்றெட்டத் தான்முடி யாதது
மற்றொப்புக் கியாதுமொவ் வாதது மனதாலே
மட்டிட்டுத் தேடவொ ணாதது
தத்வத்திற் கோவைப டாதது
மத்தப்பொற் போதுப கீரதி மதிசூடும்
முக்கட்பொற் பாளரு சாவிய
அர்த்தக்குப் போதக மானது
முத்திக்குக் காரண மானது பிரமாவும்
முட்டற்கெட் டாதது நான்மறை
யெட்டிற்றெட் டாதென வேவரு
முற்பட்டப் பாலையி லாவது புரிவாயே
செக்கட்சக் ராயுத மாதுலன்
மெச்சப்புற் போதுப டாவிய
திக்குப்பொற் பூதர மேமுதல் வெகுரூபம்
சிட்டித்துப் பூதப சாசுகள்
கைக்கொட்டிட் டாடம கோததி
செற்றுக்ரச் சூரனை மார்பக முதுசோரி

கக்கக்கைத் தாமரை வேல்விடு
செச்சைக்கர்ப் பூரபு யாசல
கச்சுற்றுப் பாரப யோதர முலையாள்முன்
கற்புத்தப் பாதல கேழையு
மொக்கப்பெற் றுள்விளை யாடிய
கச்சிக்கச் சாலையில் மேவிய பெருமாளே. (சச)

---

45. தனதனத தததத தநத தனதனத தகச் தநத
தனதனத தததத தநத—தனதான.

அறிவிலாப் பித்த ருன்ற னடிதொழாக் கெட்ட வஞ்சர்
அசடர்பேய்க் கத்தர் நன்றி யறியாத
அவலர்மேற் சொற்கள் கொண்டு கவிகளாக் கிப்பு கழ்ந்து
அவரைவாழ்த் தித்தி ரிந்து பொருள்தேடிச்
சிறிதுகூட் டிக்கொ ணர்ந்து தெருவுலாத் தித்தி ரிந்து
தெரிவைமார்க் குச்சொ ரிந்து அவமேயான்
திரியுமார்க் கத்து நிந்தை யதனைமாற் றிப்ப ரிந்து
தெளியமோ க்ஷத்தை யென்று அருள்வாயே
இறைவர்மாற் றற்ற செம்பொன் வடிவம்வேற் றுப்பி ரிந்து
இடபமேற் கச்சி வந்த உமையாள்தன்
இருளைநீக் கத்த வஞ்செய் தருளநோக் கிக்கு ழைந்த
இறைவர்கேட் கத்த குஞ்சொ லுடையோனே
குறவர்கூட் டத்தி லன்று கிழவனாய்ப் புக்கு நின்று
குருவியோட் டித்தி ரிந்த தவமானைக்
குணமதாக் கிச்சி றந்த வடிவுகாட் டிப்பு ணர்ந்த
குமரகோட் டத்த மர்ந்த பெருமாளே. (சரு)

---

46. *தத்தத் தனதான தத்தத் தனதான.*

ஆற்றைக் கிரைதேடி அத்தத் திலுமாசை
பற்றித் தவியாத பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் துளைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப் பெருமாளே. (சசு)

திருவானைக்கா

47. *தான தனன தனதந்த தந்தன*
தான தனன தனதந்த தந்தன
தான தனன தனதந்த தந்தன—தனதான.

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
மேலை வெளியி லொளிரும்ப ரஞ்சுடர்
யோக சரியை க்ரியையும் புணர்ந்தவ ரெவராலும்
ஓத வரிய துரியங்க டந்தது
போத அருவ சுருபம்ப்ர பஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங்க லந்தது சிவஞானம்
சால வுடைய தவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றி யன்பர்சொ னவியோமஞ்
சாரு மனுப வரமைந்த மைந்தமெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ
வால குமர குககந்த குன்றெறி
வேல மயில எனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் களைவோனே

வாச களப வரதுங்க மங்கல
வீர கடக *புயசிங்க சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ வயலூரா
ஞால முதல்வி யிமயம்ப யந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளு மினிய கனிஙெங்க ளம்பிகை த்ரிபுராயி
நாத வடிவி யகிலம்ப ரந்தவ
ளாலி னுதர முளைபங்க ரும்புவெ
ளுவ லரசு மனைவஞ்சி தந்தருள் பெருமாளே. (சஎ)

திருவருணை

48. தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த—தனதான.

இருவினை யஞ்ச மலவகை மங்க
இருள்பிணி மங்க மயிலேறி
எனதரு ளன்பு பொழியக டம்பு
எனநித முங்கொண் டினிபாடக்
கரிமுக னெம்பி முருகனென் றண்டர்
களிமலர் சிந்த அடியேன்முன்
கருணைபொ ழிந்து முகமு மலர்ந்து
கடுகிந டங்கொண் டருள்வாயே
திரிபுர மங்க மதனுடல் மங்க
திகழ்நகை கொண்ட விடையேறிச்
சிவவெளி பொங்க வருள்குடி கொண்டு
திகழுந டஞ்செய் தெமையாளும்

* "புயமந்த்ர தந்திர வாகை பெருகு புயதுங்க" என்றும் பாடம்.

அரசியி டங்கொள் மழுவுடை யெந்தை
    அமலன்ம கிழ்ந்த குருநாதா
  அருணைவி லங்கல் மகிழ்குற மங்கை
    அமளிந லங்கொள் பெருமாளே. (௪அ)

---

49. தனதன தானனத் தனதன தானனத்
தனதன தானனத்—தனதான.

அழுதமா மாவெனப் பலர்கள் கோகோவெனக்
    கவசமா யிமழுற் றெரிமூழ்கி
  அமையு நீறுமெனச் சமயமா மூடருக்
    கறியொணு மோனமுத் திரைநாடிப்
பிழைபடா ஞானமெய்ப் பொருள்பெறு தேவினைப்
    பெரியஆ தேசபுற் புதமாய
  பிறவிவா ராகரச் சுழியிலே போய்விழுப்
    பெறுவதோ நானினிப் புகல்வாயே
பழையபா கீரதிப் படுகைமேல் வாழ்வெனப்
    படியுமா றுயினத் தனசாரம்
  பருகுமா றுனனச் சிறுவசோ ஞசலப்
    பரமமா யூரவித் தகவேளே
பொழுதுசூழ் போதுவெற் பிடிபடா பார்முதற்
    பொடிபடா வோடமுத் தெறிமீனப்
  புணரிகோ கோவெனச் சுருதிகோ கோவெனப்
    பொருதவே லாயுதப் பெருமாளே. (௪௯)

---

50. தனதனனத் தனதான
தனதனனத்—தனதான.

இரவுபகற் பலகாலும் - இயலிசைமுத் தமிழ்கூறித்
திரமதனைத் தெளிவாகத் - திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே - பரசிவதத் துவஞானா
அரனருள்சற் புதல்வோனே - அருணகிரிப் பெருமாளே. ()

சிதம்பரம்

51. தனனதன தான தனனதன தான
தனனதன தானத்—தனதானா.

கனகசபை மேவு மெனதுகுரு நாத
கருணைமுரு கேசப் பெருமாள்காண்
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்
வினவுமடி யாரை மருவிவினை யாடு
விரகரச மோகப் பெருமாள்காண்
விதிமுநிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்
சனகிமண வாளன் மருகனென வீறு
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்
சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்
இனிதுவன மேவு மயிர்தகுற மாதொ
டியல்பரவு காதற் பெருமாள்காண்
இணையிலிப தோகை மதியின்மக ளோடு
மியல்புலியுர் வாழ்பொற் பெருமாளே. (ருக)

52. தனதன தனன தனதன தனன
தனதன தனன—தனதான.

எழுகடல் மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே
விழுதிக ழுழுகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முநிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே. (டு௨)

---

53. தநதனத் தானதன தந்தனத் தானதன
தந்தனத் தானதன—தந்ததான.

நஞ்சினைப் போலுமன வஞ்சகக் கோளர்களை
நம்புதற் றீதெனநி னைந்துநாயேன்
நண்புகப் பாதமதி லன்புறத் தேடியுனை
நங்களப் பாசரண மென்றுகூறல்
உன்செவிக் கேறலைகொல் பெண்கள்மெற் பார்வையைகொல்
உன்சொலைத் தாழ்வுசெய்து மிஞ்சுவாரார்

உன்றனக் கேபரமும் என்றனக் கார்துணைவர்
உம்பருக் காவதினின் — வந்துதோணாய்
கஞ்சனைத் தாவிமுடி முன்புகுட் டேயுமிகு
கண்களிப் பாகவிடு — செங்கையோனே
கண்கயற் பாவைகுற மங்கைபொற் றோடழுவு
கஞ்சுகப் பான்மைபுனை — பொன்செய்தோளாய்
அஞ்சவெற் பேழுகடல் மங்கநிட் டூரர்குலம்
அந்தரத் தேறவிடு — கந்தவேளே
அண்டமுற் பார்புகழு மெந்தைபொற் பூர்புலிசை
அம்பலத் தாடுமவர் — தம்பிரானே. (௫௩)

---

54. தானன தத்தந் தானன தத்தந்
தானன தத்தந்—தன தான.

காவியு டுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் — தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் — திரியாதே
சீவனொ டுக்கம் பூதவொ டுக்கம்
தேறவு திக்கும் — பரஞான
தீபவி ளக்கங் காணவெ னக்குன்
சீதள பத்மந் — தருவாயே
பாவநி றத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் — தருவீரா
பாணிகள் கொட்டும் பேய்கள்பி தற்றும்
பாடலை மெச்சுங் — கதிர்வேலா
தூவிகள் நிற்குஞ் சாலிவ ளைக்குஞ்
சோலைசி றக்கும் — புலியூரா
சூர்மி கக்கொண் டாடந டிக்குந்
தோகை நடத்தும் — பெருமாளே. (௫௪)

காசி

55. தான தந்த தனதன—தன தான.

வேழ முண்ட விளாங்கனி யதுபோல
மேனி கொண்டு வியாபக மயலூறி
நாளு மிண்டர்கள் போல்மிக அயர்வாகி
நானு நைந்து விடாதருள் புரிவாயே
மாள அன்றம ணீசர்கள கழுவேற
வாதில் வென்ற சிகாமணி மயில்வீரா
கால கண்ட னுமாபதி தருபாலா
காசி கங்கையில் மேவிய பெருமாளே. (நரு)

வெள்ளிகரம்

56. தய்ய தய்ய தய்ய தய்ய
தய்ய தய்ய—தன தான.

கள்ள முள்ள வல்ல வல்லி
கையி லள்ளி பொருளீயக்
கல்லு நெல்லு வெள்ளி தெள்ளு
கல்வி செல்வர் கிளைமாய
அள்ளல் துள்ளி ஐவர் செல்லு
மல்லல் சொல்ல முடியாதே
ஐய ரைய மெய்யர் மெய்ய
ஐய செய்ய கழல்தாராய்
வள்ளல் புள்ளி நவ்வி நல்கு
வள்ளி கிள்ளை மொழியாலே
மைய லெய்து மைய செய்யில்
வையில் வெள்வ ளைகளேற

மெள்ள மள்ளர் கொய்யு நெல்லின்
வெள்ள வெள்ளி நகர்வாழ்வே
வெய்ய சைய வில்லி சொல்லை
வெல்ல வல்ல பெருமாளே. (நசு)

திருவிரிஞ்சை

57. தனன தந்த தான தனன தந்த தான
தனன தந்த தான—தனதான.

மருவு மஞ்சு பூத முரிமை வந்தி டாது
மலமி தென்று போட அறியாது
மயல்கொ ளிந்த வாழ்வு அமையு மென்த நாளும்
வகையில் வந்தி ராத அடியேனும்
உருகி யன்பி னோடு உனைநி னைந்து நாளும்
உலக மென்று பேச அறியாத
உருவ மொன்றி லாத பருவம் வந்து சேர
உபய துங்க பாத மருள்வாயே
அரிவி ரிஞ்சர் தேட அரிய தம்பி ராணும்
அடிப ணிந்து பேசி மறைமூலம்
அருளு கென்ற போது பொருளி தென்று காண
அருளு மைந்த ஆதி குருநாதா
கிரியு ரும்பர் நீடு கிரிபி ளந்து சூரர்
செருவ டங்க வேலை விடுவோனே
செயல மைந்த வேத தொனிமு ழங்கு வீதி
திருவி ரிஞ்சை மேவு பெருமாளே. (நஎ)

திருவாலங்காடு

58. தனதன தானந் தாத்த தனதன தானந் தாத்த
தனதன தானந் தாத்த—தனதான.

புவிபுனல் காலுங் காட்டி சிகியொடு வானுஞ் சேர்த்தி
புதுமன மானும் பூட்டி யிடையூடே
பொறிபுல னீரைந் தாக்கி கருவிகள் நாலுங் காட்டி
புகல்வழி நாலைந் தாக்கி வருகாயம்
பவவினை நூறுங் காட்டி சுவமதி தானுஞ் சூட்டி
பசுபதி பாசங் காட்டி புலமாயப்
படியிசை பேரென் றோட்டி அடிமையை நீவந் தேத்தி
பரகதி தானுங் காட்டி யருள்வாயே
சிவமய ஞானங் கேட்க தவமுநி வோரும் பார்க்க
திருநட மாடுங் கூத்தர் முருகோனே
திருவளர் மார்பன் போற்ற திசைமுக னோடும் போற்ற
ஜெகமொடு வானங் காக்க மயிலேறிக்
குவடொடு சூரன் தோற்க எழுகடல் சூதந் தாக்கி
குதர்வடி வேலங் கோட்டு குமரேசா
குவலயம் யாவும் போற்ற பழனையி லாலங் காட்டில்
குறமகள் பாதம் போற்று பெருமாளே. (நிஅ)

திருமயிலை

59. தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன—தனதான.

கடிய வேக மாருத விரத சூத ராபாசர்
கலக மேசெய் பாழ்முடர் வினைகேடர்
கபட வீன ராகாத இயல்பு நாடி யேநீடு
கனவி கார மேபேசி நெறிபேணுக்

கொடிய னேது மோரா து விரக சால மேழுடு
குடிலின் மேவி யேநாளு மடியாதே
குலவு தோகை மீதா று முகமும் வேலு மீரா று
குவளை வாகும் நேர்காண வருவாயே
படியி னோடு மாமேரு அதிர வீசி யேசேட
பணமு மாட வேநீடு வரைசாடிப்
பரவை யாழி நீர்மோத நிருதர் மாள வாளொடு
பழிய தாக வேலேவு மயில்வீரா
வடிவு லாவி யாகாச மிளிர்ப லாவி னீள்சோலை
வனச வாவி பூவோடை வயலோடே
மணிசெய் மாட மாமேடை சிகர மோடு வாகான
மயிலை மேவி வாழ்தேவர் பெருமாளே. (ருக)

கோடைநகர்

60. தானத்த தான தந்த தானதத தான தந்த
தானதத தான தந்த—தனதான.

வாசித்த நூல்ம தங்கள் பேசிக்கெ டாத விந்து
வாய்மைப்ர காச மென்று நிலையாக
வாசிக்க பால மன்றில் நாசிக்கு ளோடு கின்ற
வாயுப்பி ராண னென்று மடைமாறி
யோசித்த யாரு டம்பை நேசித்து ருத லைந்து
ரோமத்து வார மெங்கு முயிர்போக
யோகச்ச மாதி கொண்டு போகப்ப சாசு மண்டு
லோகத்தில் மாய்வ தென்று மொழியாதோ
வீசப்ப யோதி துஞ்ச வேதக்கு லால னஞ்ச
மேலிட்ட சூர்த டிந்த கதிர்வேலா
வீரப்ர தாப பஞ்ச பாணத்தி னல்ம யங்கி
வேடிச்சி காலி லன்று விழுவோனே

கூசிப்பு காவொ துங்க மாமற்சி காவ ரிந்த
கூளப்பு ராரி தந்த சிறியோனே
கோழிப்ப தாகை கொண்ட கோலக்கு மார கண்ட
கோடைக்குள் வாழு வந்த பெருமாளே. (சுo)

திருப்போரூர்

61. தனன தானன தானன தனன தானன தானன
தனன தானன தானன—தனதான.

திமிர மாமன மாமட மடமை யேமிட ராணவ
திமிர மேயரி குரிய திரிலோக
தினக ராசிவ காரண பனக பூஷண ஆரண
சிவசு தாவரி நாரணன் மருகோனே
குமரி சாமளை மாதுமை அமலி யாமளை பூரணி
குணக லாநிதி நாரணி தருகோவே
குருகு காகும ரேசுர சரவ ணுசக ளேசுர
குறவர் மாமக ளாசைகொள் மணியேசம்
பமர பாரப்ர பாருண படல தாரக மாசுக
பசுர பாடன பாளித பகளேச
பசித பாரண வாரண துவச ஏடக மாவயில்
பரவு பாணித பாவல பரயோக
சமப ராமத சாதல சமய மாறிரு தேவத
சமய நாயக மாமயில் முதுவீர
சகல லோகமு மாசறு சகல வேதமு மேதொழு
சமர மாபுரி மேவிய பெருமாளே. (சுக)

உத்தரமேரூர்

62. *தான தந்த தான தந்த தான தந்த தான தந்த*
தான தந்த தான தந்த—தனதான.

தோலெ லும்பு சீந ரம்பு பீளை துன்று கோழை பொங்கு
சோரி பிண்ட மாயு ருண்டு வடிவான
தூல பங்க காயம் வம்பி லேசு மந்து நான்மெ லிந்து
சோரு மிந்த நோய கன்று துயராற
ஆல முண்ட கோன கண்ட லோக முண்ட மால்வி ரிஞ்ச
னார ணங்க ளாக மங்கள் புகழ்தாளும்
ஆன னங்கள் மூவி ரண்டு மாறி ரண்டு தோளு மங்கை
யாடல் வென்றி வேலு மென்று நினைவேனோ
வால சந்த்ர சூடி சந்த வேத மந்த்ர ரூபி யம்பை
வாணி பஞ்ச பாணி தந்த முருகோனே
மாயை யைந்து வேக மைந்து பூத மைந்து நாத மைந்து
வாழ்பெ ருஞ்ச ராச ரங்க ளுறைவோனே
வேலை யன்பு கூர வந்த ஏக தந்த யானை கண்டு
வேடர் மங்கை யோடி யஞ்ச அணைவோனே
வீர மங்கை வாரி மங்கை பாரின் மங்கை மேவு கின்ற
மேரு மங்கை யாள வந்த பெருமாளே. (௬௨)

தேவனூர்

63. *தானதான தந்ததந்த தானதான தந்ததந்த*
தானதான தந்ததந்த—தனதான.

ஆறுமாறு மஞ்சுமஞ்சும் ஆறுமாறு மஞ்சுமஞ்சும்
ஆறுமாறு மஞ்சுமஞ்சும் அறுநாலும்
ஆறுமாய சஞ்சலங்கள் வேறதாகி ளங்குகின்ற
ஆரணைக மங்கடந்த கலையான

ஈறுகூற ரும்பெருஞ்சு வாமியாயி ருந்தநன்றி
யேதுவேறி யம்பலின்றி யொருதானாய்
யாவுமாய்ம னங்கடந்த மோனவீட டைந்தொருங்கி
யானவாவ டங்களென்று பெறுவேனோ
மாறுகூறி வந்தெதிர்ந்த சூரர்சேனை மங்கவங்க
வாரிமேல்வெ குண்டசண்ட விததாரை
வாகைவேல கொன்றைதும்பை மாலைகூவி ளங்கொழுந்து
வாலசோம னஞ்சுபொங்கு பகுவாய
சீறுமாசு ணங்கரந்தை ஆறுவேணி கொண்டநம்பர்
தேசிகாக டம்பலங்கல் புனைவோனே
தேவர்யாவ ருந்திரண்டு பாரின்மீது வந்திறைஞ்சு
தேவனூர்வி ளங்கவந்த பெருமாளே. (௬௩)

சீகாழி

64. தானத்தன தானன தந்த
தானத்தன தானன தந்த
தானத்தன தானன தந்த—தனதான.

ஊனத்தசை தோள்கள்சு மந்த
காயப்பொதி மாயமி குந்த
ஊசற்சுடு நாறுகு ரம்பை மறைநாலும்
ஓதப்படு நாலுமு கன்ற
னாலுற்றிடு கோலமெ ழுந்து
ஓடித்தடு மாறியு ழன்று தளர்வாகிக்
கூனித்தடி யோடுந டந்து
ஈனப்படு கோழைமி குந்த
கூளச்சட மீதையு கந்து புவிமீதே

கூசப்பிர மாணப்ர பஞ்ச
மாயக்கொடு நோய்கள கன்று
கோலக்கழ லேபெற இன்று அருள்வாயே
சேனக்குரு கூடலி லன்று
ஞானத்தமிழ் நூல்கள்ப கர்ந்து
சேனைச்சம ணோர்கழு வின்கண் மிசையேறத்
தீரத்திரு நீறுபு ரிந்து
மீனக்கொடி யோனுடல் துன்று
தீமைப்பிணி தீரவு வந்த குருநாதா
கானச்சிறு மானைநி னைந்து
ஏனற்புன மீதுந டந்து
காதற்கிளி யோடுமொ ழிந்து சிலைவேடர்
காணக்கணி யாகவ ளர்ந்து
ஞானக்குற மானைம ணந்து
காழிப்பதி மேவிய கந்த பெருமாளே. (௬௪)

வேளூர்

65. தத்தன தானதான தத்தன தானதான
தத்தன தானதான—தனதான.

எத்தனை கோடிகோடி விட்டுட லோடியாடி
யெத்தனை கோடிபோன தளவேதோ
இப்படி மோகபோக மிப்படி யாகியாகி
யிப்படி யாவதேது இனிமேலோ
சித்திடில் சீசிசீசி குத்திர மாயமாயை
சிக்கினி லாயுமாயு மடியேனைச்
சித்தினி லாடலோடு முத்தமிழ் வாணரோது
சித்திர ஞானபாத மருள்வாயே

நித்தமு மோதுவார்கள் சித்தமெ வீடதாக
    நிர்த்தம தாடுமாறு முகவோனே
  நிட்கள ரூபர்பாதி பச்சுரு வானமூணு
    நெட்டிலை சூலபாணி யருள்பாலா
பைத்தலை நீடுமாயி ரத்தனை மூதுபீறிப்
    பற்றியே சாடிவீசு மயில்வீரா
  பச்சிள பூகபாளை செய்க்கயல் தாவுவேளூர்
    பற்றிய மூவர்தேவர் பெருமாளே. (சுரு)

---

66 தான தானன தாதத தநதன
    தான தானன தாதத தநதன
    தான தானன தாதத தநதன—தனதான.

மூலா தாரமோ டேற்றி யங்கியை
    ஆறு தாரமொ டோட்டி யந்திர
    மூலா வாயுவை யேற்றி நன்சுழி முனையூடே
  மூதா தாரம ரூப்பி லந்தர
    நாதா கீதம தார்த்தி டும்பர
    மூடே பாலொளி ஆத்து மந்தனை விலகாமல்
மாலா டுடுடு சேர்த்தி தம்பெற
    நாலு வாகம சாத்தி ரஞ்சொலும்
    வாழ்ஞா னபுரி யேற்றி மந்திர தவிசூடே
  மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
    வீடே மூவொளி காட்டி சந்திர
    வாகார் தேனமு தூட்டி யென்றனை யுடனாள்வாய்
சூலாள் மாதுமை சீர்த்த சம்பவி
    மாதா ராப்பகல் காத்த மைந்தனை
    சூடோ டீர்வினை வாட்டிமைந்தரி னெமையாளுந்

தூயாள் மூவரை நாட்டு மெங்கையர்
வேளூர் வாழ்வினை தீர்த்த சங்கரர்
தோய்சா ரூபரொ டேற்றி ருந்தவ ளருள்பாலா
வேலா ஏழ்கடல் வீட்டி வஞ்சக
மூடார் சூரரை வாட்டி யந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பரி மயில்வாழ்வே
வேதா நால்தலை சீக்கொ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா மான்மக ளார்க்கி ரங்கிய பெருமாளே.

திருவீழிமிழலை

67. தனன தனன தனன தனன
தனன தனன—தன தான.

ஒருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல
ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்
முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதா ளருள்வோனே
முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ரரமேல் விடும்வேலா

திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் பெருமாளே. (சுஎ)

திருவிடைமருதூர்

68. தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானனு தான தானனு—தனதன தனதான.

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொருமொருமொ ளெனவுடல்வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய்
அவரொரு பெரியோராய்
அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவறு மரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிகள் பிறரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய்
அவியுறு சுடர்போலே
வெறுமிடிய ரொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணி யார்சொலே மேல தாயிட
விதிதனை நினையாதே

பிணுகுபிணு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோளன
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாய் ஆளி வாயராய்
பிடையுற வருநாளில்

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழுவழென உமிழுமது கொழுகொழென ஒழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய்
மனையவள் மனம்வேறாய்

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனு வாலர் சீயெனு
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள்
மனிதர்கள் பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழு
வேழை மாதரார் மோதி மேல்விழா
எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ லேலெனு வாயை ஆவெனு
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்
எரிதனி லிடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினையு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா
இமையவர் பெருமாளே. (௬௮)

வயலூர்

69. தன்ன தனத்தன தன்ன தனத்தன
தன்ன தனத்தன—தந்ததான.

என்னால் பிறக்கவும் என்ன லிறக்கவும்
என்னால் துதிக்கவும் கண்களாலே
என்ன லழைக்கவும் என்னால் நடக்கவும்
என்ன லிருக்கவும் பெண்டிர்வீடு
என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் தொந்தநோயை
என்ன லெரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் இங்குநானார்
கன்ன ருரித்தஎன் மன்ன எனக்குநல்
கர்ண மிர்தப்பதந் தந்தகோவே
கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
கண்ண டியிற்றடங் கண்டவேலா
மன்ன னதக்கனை முன்னாள் முடித்தலை
வன்வா ளியிற்கொளுந் தங்கரூபன்
மன்ன குறத்தியின் மன்ன வயற்பதி
மன்ன முவர்க்கொரு தம்பிரானே. (௬௯)

மதுரை

70. *தனதான தானத் தனதான*
தனதான தானத்—தனதான.

கலைமேவு ஞானப் பிரகாசக்
கடலாடி ஆசைக் கடலேறிப்
பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
மணமேவு வாலக் குமரேசா
சிலைவேட சேவற் கொடியோனே
திருவால வாயிற் பெருமாளே. (௭௦)

---

71. *தானதன தத்த தானதன தத்த*
தானதன தத்த—தனதான.

ஆனைமுக வற்கு நேரிளைய சுத்த
ஆறுமுக முற்ற அழகோனே
ஆதியய னுக்கும் வேதமுதல் வற்கும்
ஆரணமு ரைத்த குருநாதா
தானவர் குலத்தை வேல்கொடு துணித்த
சாரசதுர் மிக்க திறல்வீரா
தாளிணைக ளுற்று மேவியப தத்தில்
வாழ்வொடு சிறக்க அருள்வாயே
வானெழு புவிக்கு மாலுமய னுக்கும்
யாவரொரு வர்க்கு மறியாத
மாமதுரை சொக்கர் மாதுமை களிக்க
மாமயில் நடத்து முருகோனே

தேனெழு புனத்தில் மான்விழி குறத்தி
சேரமரு வுற்ற திரள்தோளா
தேவர்கள் கருத்தில் மேவிய பயத்தைத்
தீரவிடு வித்த பெருமாளே. (எக)

இராமேசுரம்

72. தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன தானதன தானதன—தனதான.

வாலவய தாகியழ காகிமத னாகிபணி
வாணிபமொ டாடிமரு ளாடிவிளை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலி வாகிமட கூடமொடு பொருள்தேடி
வாசபுழு கேடுமல ரோடுமன மாகிகமழ்
வாசனைக ளாகியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழல சிலநாள்போய்த்
தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி யுறுநாளிற்
சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுட லழிவேனோ
நாலுமுக னாதியரி யோமெனஅ தாரமுரை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகென
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு மிளையோனே
நாறிதழி வேணிசிவ ரூபகவி யாணிமுத
லீணமக வானைமகிழ் தோழவன மீதுசெறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவுபுகழ் மயில்வீரா

ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியொடு நீலிபக ரோடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில் பொடியாக
ஓகைதழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காளனவெ
யோதமறை ராமெசுர மேவுகும ராஅமரர் பெருமாளே.

திருவாடனை

73. தானன தத்ததன தானன தத்ததன
தானன தத்ததன—தனதான.

உனரு முட்பிணியு மானக வித்தவுட
லூதாரி பட்டொழிய யுயிர்போனால்
ஊரார்கு வித்துவர ஆவாவெ னக்குறுகி
ஓயாமு ழக்கமெழ அழுதோய
நானவி தச்சிவிகை மேலேகி டத்தியது
நாறுதெ டுத்தடவி யெரியூடே
நாணமல் வைத்துவிட நீறுமெ னிப்பிறவி
நாடாதெ னக்குனருள் புரிவாயே
மானக துத்திமுடி மீதேநி ருத்தமிடு
மாயோனு மட்டொழுகு மலர்மீதே
வாழ்வாயி ருக்குமொரு வேதாவு மெட்டிசையும்
வானோரு மட்டகுல கிரியாவும்
ஆனவ ரக்கருடன் வானோர்பி ழைக்கவரு
மாலால முற்றவமு தயில்வோன்முன்
ஆசார பத்தியுடன் ஞானக மத்தையரு
ளாடானை நித்தமுறை பெருமாளே. (எங)

போது

74\. தனதனன தனதனன தானான தானதன
தனதனன தனதனன தானான தானதன
தனதனன தனதனன தானான தானதன—தந்ததான.

உறவின்முறை கதறியழ ஊராரு மாசையற
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
உலகிலுள பலரரிசி வாய்மீதி லேசொரியு மந்தநாளில்
உனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை
திரள்புயமு மெழில்பணிகொள் வார்காழி னீள்விழியு
முபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமும் அந்தமார்பும்
மறையறைய அமரர்தரு பூமாரி யேசொரியு
மதுவொழுகு தரளமணி மீதேமு றாலொளிர
மயிலின்மிசை யழகுபொலி யாளாய்மு னாடியர்
வந்துகூட
மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனை யாளஇங்ஙன்
வந்திடாயோ
பிறையெயிறு முரணசுரர் பேராது பாரில்விழ
அதிரஎழு புவியுலக மீரேழு மோலமிட
பிடிகளிறி னடல்நிரைகள் பாழாக வேதிசையில்
நின்றநாகம்
பிரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிணமு முணவுசெய்து பேயோடு மாடல்செய
வென்றதீரா

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருட
கரடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியி னிளமரம தேயாகி நீடியுயர் குன்றுலாவி
கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
வொருபுறம துறவளரு மாதாபெ ருவருள்செய்
குமரகுரு பரஅமரர் வாழுடர் பேணஅருள்
தம்பிரானே. (எச)

75. தனந்த தானந் தந்தன தனதன—தனதான.

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரு முறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையு மழகிய பெருமானே. (எரு)

76. தனந்த தானந் தனதன தானன—தனதான

இசைந்த வேறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமானே.

77. தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன—தனதான.

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே. (எஎ)

---

78. தானந் தனதன தானந் தனதன
தானந் தனதன—தனதான.

உனுந் தசையுடல் தானொன் பதுவழி
ஊருங் கருவழி யொருகோடி
ஓதும் பலகலை கீதஞ் சகலமு
மோரும் படியுன தருள்பாடி

நானுன் திருவடி பேணும் படியிரு
போதுங் கருணையில் மறவாதுன்
நாமம் புகழ்பவர் பாதந் தொழுதினி
நாடும் படியருள் புரிவாயே
கானுந் திகழ்கதி ரோனுஞ் சசியொடு
காலங் களுநடை யுடையோனுங்
காருங் கடல்வரை நீருந் தருகயி
லாயன் கழல்தொழு மிமையோரும்
வானிந் திரனொடு மாலும் பிரமனும்
வாழும் படிவிடும் வடிவேலா
மாயம் பலபுரி சூரன் பொடிபட
வாள்கொண் டமர்செய்த பெருமாளே. (எஅ)

---

79. தனதனன தானதத்த தனதனன தானதத்த
தனதனன தானதத்த—தனதான.

எழுபிறவி நீர்நிலத்தி லிருவினைகள் வேர்பிடித்து
இடர்முளைக ளேமுளைத்து வளர்மாயை
எனுமுலவை யேபணைத்து விரகுழை யேகுழைத்து
இருளிலைக ளேதழைத்து மிகநீளும்
இழவுநனை யேபிடித்து மரணபழ மேபழுத்து
இடியுமுடல் மாமரத்தி னருநீழல்
இசையில்விழ ஆதபத்தி யழியுமுன மேயெனக்கு
இனியதொரு போதகத்தை யருள்வாயே
வழுவுநெறி பேசுதக்க னிசையுமக சாலையுற்ற
மதியிரவி தேவர்வஜ்ர படையாளி
மலர்கமல யோனிசக்ர வளைமருவு பாணிவிக்ர
மறையஎதிர் வீரவுக்ரர் புதல்வோனே

அழகியக லாபகற்றை விகடமயி லேறியெட்டு
அசலமிசை வாகையிட்டு வரும்வேலா
அடலசுரர் சேனைகெட்டு முறியமிக மோதிவெட்டி
அமரர்சிறை மீளவிட்ட பெருமாளே. (எகூ)

80. தானா தனந்த தானா தனந்த
தானா தனந்த—தன தான.

ஊனே றெலும்பு சீசீ மலங்க
ளோடே நரம்பு கசுமாலம்
ஊழ்நோ யடைந்து மாசான மண்டு
மூனோ டுழன்ற கடைநாயேன்
நானா ரொடுங்க நானார் வணங்க
நானார் மகிழ்ந்து உனையோத
நானா ரிரங்க நானா ருணங்க
நானார் நடந்து விழநானார்
தானே புணர்ந்து தானே யறிந்து
தானே மகிழ்ந்து அருளேறித்
தாய்போல் பரிந்த தேனே டுகந்து
தானே தழைந்து சிவமாகித்
தானே வளர்ந்து தானே யிருந்த
தார்வேணி யெந்தை யருள்பாலா
சாலோக தொண்டர் சாமீப தொண்டர்
சாரூப தொண்டர் பெருமாளே. (அ0)

81. தனதன தானன தான தனதன தானன தான
தனதன தானன தான—தனதான.

மதியணு விலாத கோபி குருநெறி யிலாத பாவி
மனநிலை நிலாத பேயன் அவமாயை
வகையது விடாத பேடி தவநினை விலாத மோடி
வரும்வகை யிதேது காய மொனநாடும்
விதியிலி பொலாத லோபி சபைதனில் வராத கோழை
வினையிகல் விடாத கூளன் எனையீயும்
மிகுபர மதான ஞான நெறிதனை விசார மாக
மிகுமுன தரூப தான மருள்வாயே
எதிர்வரு முதார சூர னிருபிள வதாக வேலை
யியலொடு கடாவு தீர குமரேசா
*இனியசொல் மறாத சீலர் கருவழி வராமல் நாளும்
இளமையது தானு மாக நினைவோனே
நதியுட னராவு பூணு பரமர்குரு நாத னான
நடைபெறு கபீர மான மயில்வீரா
நகைமுக விநோத ஞான †குறமினுட னேகு லாவு
நவமணி யுலாவு மார்ப பெருமாளே. (அக)

---

* "இனியது சொல்கிறா னேது தமிழினை யுநாடி யோதும் எளியவர் கள்வார மான கதிர்வேலா".

† "குறமகள்தெய் வானை யோடு நளினபிர மூரின் மேவு" என்றும் பாடம்.

82. தந்த தானன தானன தந்தன
தந்த தானன தானன தந்தன
தந்த தானன தானன தந்தன—தனதான.

கும்ப கோணமொ டாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூர மம்பெறு சிவகாசி
கொந்து லாவிய ராமே சுரந்தனி
வந்து பூஜைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர் பரங்கிரி தனில்வாழ்வே
செம்பு கேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ செகநாதஞ்
செஞ்சொ லேரக மாவா வினன்குடி
குன்று தோறுடன் மூதூர் விரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடு வஞ்சியில் வருதேவே
கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்பு லாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர வயலூரா
கந்த மேவிய போரூர் நடம்புரி
தென்சி வாயமு மேயா யகம்படு
கண்டி யூர்வரு சாமீக டம்பணி மணிமார்பா
எம்பி ராணொடு வாதாடு மங்கைய
ரும்பர் வாணிபொ னீள்மால் சவுந்தரி
எந்த நாள்தொறு மோர்பாக நின்றுறு துதியோதும்
இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய்ம ணந்துல
கெங்கு மேவிய தேவால யந்தொறு பெருமாளே.

உ

குருமயம்

அருணகிரிநாதர் அருளிச்செய்த

திருவகுப்பு

திருச்செந்தில் வகுப்பு

தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த தந்த
தந்த தந்த தந்த தந்த—தனதானனா.

சந்த பந்த முந்து விந்தை செஞ்சொ லின்ப்ர பந்த நந்து
சங்க மங்க லம்பொ ருந்து தமிழ்பாடியே
தஞ்ச மென்று சென்று சென்று நஞ்சு விஞ்சு நெஞ்ச வஞ்சர்
தங்கள் முன்பு நின்று நின்று மெலிவோதியே
சிந்தைநொந்து நொந்துநைந்து நைந்துவெம்பி வெம்பி யங்கி
சிந்தி யிந்த வெங்கு டம்பை யழிபோதுமா
சிங்க முன்பு குந்த தந்தி யின்கு லங்க லங்கு பண்பொ
சிந்த துன்ப மென்றொ ழிந்து கரையேறுவேன்
அந்த ரங்க ளண்ட ரண்ட மண்ட லங்கு லுங்க நின்ற
சைந்த சைந்து பந்தெ ழும்ப அசுராதியோர்
அங்க டங்க டுண்ட துண்ட கண்ட பந்தி சண்டை வந்த
லைந்து ருண்டு மண்டை சிந்த அடர்கோபனே
கந்த சந்த நுங்கு கும்ப கொங்கை யிந்தி ரன்ம டந்தை
கங்க ணம்பு ரந்த வென்றி யணிநேயனே
கம்பு மஞ்ச முந்தி கழ்ந்தி ருந்தி டுந்தி றஞ்செ றிந்து
கஞ்ச நன்ற லர்ந்த செந்தின் முருகேசனே. (க)

சீர்பாத வகுப்பு

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன தனதான தானதன.

உததியிடை கடவுமர கதவருண குலதுரக
வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென அதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவி னிருளகல வொருசோதி வீசுவதும்
உடலுமுட லுயிருநிலை பெறுதல்பொரு ளெனவுலக
மொருவிவரு மனுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
யுணர்வுவிழி கொடுநியதி தமதூடு நாடுவதும்
உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவு
முழலுவன பரசமய கலையார வாரமற
உரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ
வுளபடியை யுணருமவ ரநுபூதி யானதுவும்
உறவுமுறை மனைவிமக வெனுமலையி லெனதிதய
வுருவுடைய மலினபவ சலராசி யேறவிடும்
உறுபுணையு மறிமுகமு முயரமரர் மணிமுடியி
லுறைவதுவு முலைவிலதும் அடியேன் மனோரதமும்;

இதழிவெகு முககமல நதியறுகு தறுகணர
இமகிரண தருணவுடு பதிசேர்ச டாமவுலி
இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென
இமையமயில் தழுவுமொரு திருமார்பி லாடுவதும்
இமையவர்கள் நகரிலிறை குடிபுகுத நிருதர்வயி
றெரிபுகுத வுரகர்பதி யபிஷேக மாயிரமும்
எழுபிலமு நெறுநெறென முறியவட குவடிடிய
இளையதளர் நடைபழகி விளையாடல் கூருவதும்

இனியகனி கடலைபய றொடியல்பொரி யமுதுசெயு
மிலகுவெகு கடவிகட தடபார மேருவுடன்
இகலிமுது திகிரிகிரி நெரியவளை கடல்கதற
வெழுபுவியை யொருநொடியில் வலமாக வோடுவதும்
எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
யிரலைமரை யிரவுபக லிரைதேர்க டாடவியில்
எயினரிடு மிதணதனி லிளகுதினை கிளிகடிய
இனிதுபயில் சிறுமிவளர் புனமீ துலாவுவதும

முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகால தூதர்கெட
முடுகுவது மருணெறியி லுதவுவது நினையுமவை
முடியவரு வதுமடியர் பகைகோடி சாடுவதும்
மொகுமொகென மதுபமுரல் குரவுவிள வினதுகுறு
முறியுமலர் வகுளதள முழுநீல தீவரமும்
முருகுகமழ் வதுமகில முதன்மைதரு வதும்விரத
முனிவர்கரு தரியதவ முயல்வார்த பேபலமும்
முருகசர வணமகளி ரறுவர்முலை நுகருமறு
முககுமர சரணமென அருள்பாடி யாடிமிக
மொழிகுழற அழுதுதொழு துருகுமவர் விழியருவி
முழுகுவதும் வருகவென அறைகூவி யாளுவதும்
முடியவழி வழியடிமை யெனுமுரிமை யடிமைமுழு
துலகறிய மழலைமொழி கொடுபாடு மாசுகவி
முதலமொழி வனநிபுண மதுபமுக ரிதமவுன
முகுளபரி மளநிகில கவிமாலை சூடுவதும் ;

மதசிகரி கதறிமுது முதலைகவர் தரநெடிய
மடுநடுவில் வெருவியொரு விசையாதி மூலமென
வருகருணை வரதனிக லிரணியனை நுதியுகிரின்
வகிருமட லரிவடிவு குறளாகி மாபலியை

வலியசிறை யிடவெளியின் முகடுகிழி படமுடிய
 வளருமுகில் நிருதனிரு பதுவாகு பூதரமும்
மகுடமொரு பதுமுறிய வடுபகழி விடுகுரிசின்
 மருகனிசி சரர்தளமும் வருதார காசுரனும்
மடியமலை பிளவுபட மகரசல நிதிகுறுகி
 மறுகிமுறை யிடமுனியும் வடிவேல னீலகிரி
மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதுர
 வசனிபயி ரவிகவுரி யுமையாள்த்ரி சூலதரி
வனசைமது பதியமலை விசையைதிரி புரைபுனிதை
 வனிதையபி நவையனகை யபிராம நாயகிதன்
மதலைமலை கிழவனறு பவனபய னுபயசதுர்
 மறையின்முதல் நடுமுடியின் மணநாறு சீறடியே. (௨)

வேல் வகுப்பு

தனதகதன தனததன தனததன
 தனதத்தன தனதததன தனததன
 தனத்ததன தான

பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
 கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
 விழிக்குநிக ராகும்
பனைக்கைமுக படக்கரட மதத்தவள
 கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
 தெறிக்கவர மாகும்
பழுத்தமுது தமிழ்ப்பலகை யிருக்குமொரு
 கவிப்புலவ னிசைக்குருகி வரைக்குகையை
 யிடித்துவழி காணும்

பசித்தலகை முசித்தழுது முறைப்படுத
லொழித்தவுண ருரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கஅருள் நேரும் ;
சுரர்க்குமுனி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்குமரி தனக்குநரர் தமக்குமுறு
மிடுக்கண்வினை சாடும்
சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி
யொளிப்பவலை யடக்குதழ லொளிப்பவொளி
ரொளிப்பிரபை வீசும்
துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கஇடர்
நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையு
மெனக்கோர் துணை யாகும்
சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை
யடுத்தபகை யறுத்தெறிய வுறுக்கியெழும்
அறத்தைநிலை காணும் ;
தருக்கிநமன் முருக்கவரி னெருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிக ராகும்
தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும்
தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும்
சலத்துவரு மரக்கருடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை யெனச்சிகையில்
விருப்பமொடு சூடும் ;

திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடிது
குடித்துடையு முடைப்படைய அடைத்துதிர
நிறைத்துவிளை யாடும்
திசைக்கிரியை முதற்குலிச னறுத்தசிறை
முளைத்ததென முகட்டினிடை பறக்கவற
விசைத்ததிர வோடும்
சினத்தவுண ரெதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும்
திருத்தணியி லுதித்தருளு மொருத்தன்மலை
விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயில்
நடத்துகுகன் வேலே. (௯)

பெருத்தவசன வகுப்பு

தனத்த தனதன தனத்த தனதன
தனத்த தனதன தனத்த தனதன.

அருக்க னுலவிய சகத்ர யமுமிசை
யதிற்கொள் சுவையென அனைத்து நிறைவதும்
அவஸ்தை பலவையு மடக்கி யகிலமு
மகிழ்ச்சி பெறவினி திருக்கு மவுனமும்
அசட்டு வெறுவழி வழக்க ரறுவரு
மரற்று வனபொருள் விகற்ப மொழிவதும்
அழுக்கு மலவிருள் முழுக்கி னுழல்வதை
யடக்கி யவநெறி கடக்க விடுவதும் ;
எருக்கு மிதழியு முடிக்கு மிறைகுரு
வெமக்கு மிறையவ னெனத்தி கழுவதும்
இரட்டை வினைகொடு திரட்டு மலவுட
லிணக்க மறவொரு கணக்கை யருள்வதும்

இருக்கு முதலிய சமஸ்த கலைகளு
மிதற்கி தெதிரென இணைக்க அரியதும்
இறக்க வெனவெதிர் நடக்கும் யமபடர்
கடக்க விடுவதொ ரியற்கை யருள்வதும்;
நெருக்கு வனவுப நிடத்தி னிறுதிகள்
இரப்பு கடையினி விருப்பை யுடையதும்
நெருப்பு நிலம்வெளி மருத்து வனமென
நிரைத்த நெறிமுறை கரக்கு முருவமும்
நினைப்பு நினைவது நினைப்ப வனுமறு
நிலத்தில் நிலைபெற நிறுத்த வுரியதும்
நிலைத்த அடியவர் மலைத்த லதுகெட
நிவிர்த்தி யுறஅனு பவிக்கு நியமமும்;
உருக்கு திருவருள் திளைத்து மகிழ்தர
வுளத்தொ டுரைசெய வொளித்து விடுவதும்
ஒளிக்கு மொளியென வெளிக்கு வெளியென
வுயிர்க்கு முயிரென நிகழ்ச்சி தருவதும்
உரத்த தனிமயி லுகைத்து நிசிசர
ரொளிக்க அமர்பொரு சமர்த்த னணிதழை
உடுத்த குறமகள் மணக்கு மறுமுக
னுருத்த னருளிய பெருத்த வசனமே. (௪)

திருஞான வேழ வகுப்பு

தனன தத்தன தனன தத்தன
தனன தத்தன தான தானன.

சடலை பட்டலை யுடலெ னப்படு
தருமசித்திர கூட மானவை
தவிர நிட்களவெளியி னிற்பன
சமய தர்க்கவி ரோத வாதிகள்
தகர வெற்றுவ புகர்ம தக்கிரி
தனையு ருக்குவ ஆசை யாணவ
தளையி யற்கையை விடந டிப்பன
சனன முற்றிய சாத மாமெழு ;
கடல்க டப்பன படுகொ லைச்சமர்
கடக மப்படி சாய மோதுவ
கருவி னைத்தரு மிருவி னைத்தொடர்
கழல்ப தத்தன யோக சாதகர்
களைப றிப்பன கிளையெ னப்படு
கவலை சுற்றிய காடு சாடுவ
கருணை மெய்த்தவ திருவ ருட்கன
கவள மொக்குவ காம ராசனை ;
அடல்கெ டுப்பன அகில கற்பனை
யரண ழிப்பன கோப மானவை
அவிய நற்பொறை யெனுந திப்பிர
ளயமி றைப்பன லோப மோகிதம்
அவைமு றிப்பன மதமு ழுத்தறி
யடிப றிப்பன ராச தாதியின்
அதிகு ணத்ரய மதிலி டிப்பன
அளவில் தத்துவ தூளி வீசுவ ;

திடமு டைச்சிறை மயிலு கைத்தெழு
சிகரி குத்திய வேலை நீள்சுனை
தினமு முற்பல மலர்தி ருத்தணி
யிறைதி ருப்புகழ் பாடு நாவலர்
திரள்ப்ரி யப்பட இனித ளிப்பன
செயலொ ழித்தரு பூதி மீமிசை
திகழு மற்புத மவுன நிர்க்குண
சிவம யத்திரு ஞான வேழமே. (ரு)

திருக்கையில் வழக்க வகுப்பு

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன
தனத்தன தனத்தன தனத்தன தனத்தன.

தருக்குவ செருக்களம் வெருக்கொள அதிர்ப்பன
தடக்கர நிமிர்த்துய ருடுக்குல முதிர்ப்பன
தடித்தெழு குலப்புவி நடுக்குற அதிர்ப்பன
தமழுச்செவி படைப்பன திரட்கயிலை யொப்பன
சதுர்த்தச தலத்தையு மெடுத்தக டவுட்பணி
சகஸ்ர பணபத்தியு மொடுக்குற நடப்பன
சமுத்ரம தனத்தில முதத்துட னுதிப்பன
தரத்தன தலைச்சுர நதிப்புனல் குளிப்பன ;
அருக்கர் பதமுட்பட மிதித்திடு பதத்தன
அறப்படு கொலைத்தொழில் புறப்படு முகத்தன
அரக்கர்ப டைகெட்டுமு றியப்பொரு பதத்தன
அயற்கும மரர்க்குமொரு பொற்பதி யளிப்பன
அளித்தவ முதுக்கவ ளமொக்குவ னமுத்தெறி
யலைக்கடல் கலக்குவ குலக்கிரி குலுக்குவ
அடித்தெழு பொருப்பினை நெருப்பெழ விழிப்பன
அதிக்ரம கமப்ரவு டவிக்ரம மதத்தன ;

மருக்குல வுகற்பக வனத்தலர் பறிப்பன
வளைத்தெழு தருக்களை மொளுக்கென முறிப்பன
மதிப்பிள வெனச்செருகி வைத்தென மணிச்சதுர்
மருப்பின இமைப்பற விழித்தந யனத்தன
வளைத்தகி ரியைப்பொடி படுத்தி யிபமெட்டையும்
அலைத்தவ ணடிப்பட மடப்பிடி யணைப்பன
மழைப்புயல் கிழிப்பன புனற்பசி தணிப்பன ;
மணிக்கண கனப்பண மதத்ரயம் விதிர்ப்பன
திருத்திய புனத்திடை வனத்தழை யுடுத்தினி
திருப்பவள் விருப்புறு வரைப்புயன் வினைப்பகை
செருப்பவ னினைத்தவை முடித்தருள் க்ருபைக்கடல்
சிவத்தக மலச்சர வணத்தறு முகப்பொருள்
செகத்ரய முகிழ்த்தவு தரத்திரி புரைக்கொரு
திருப்புதல் வனுப்பல கிரிப்பெயர் தரித்தருள்
திருத்தணி மலைக்கிறை திருப்புகழ் படிப்பவர்
சிறப்பொடு பெறத்தரு திருக்கையில் வழக்கமே.

சேவகன் வகுப்பு

தனதன தனன தனதன தனன
தனதன தனன தனத்தா தனனா.

இருபிறை யெயிறு நிலவெழு வுடலி
மிருள்படு சொருப முடைக் கோவிடவே
இறுகிய கயிறு படவினை முடுகி
யெமபடர் பிடரி பிடித்தே கொடுபோய் ;
அருமறை முறையின் முறைமுறை கருதி
யதரிடை வெருவ வொறுத்தால் வகையால்
அறிவொடு மதுர மொழியது குழறி
யலமரு பொழுதி லழைத்தால் வருவாய் ;

ஒருபது சிரமு மிருபது கரமும்
விழவொரு பகழி தொடுத்தோன் மருகா
உரமது பெரிய திரிபுர மெரிய
வுயர்கன கிரியை வளைத்தோர் புதல்வா ;
மருவள ரடவி வனிதையர் பரவ
மரகத விதணி லிருப்பாள் கணவா
வளைகடல் கதற நிசிசரர் மடிய
மலையொடு பொருத முழுச்சே வகனே. (எ)

கடைக்கணியல் வகுப்பு

தனதன தனந்த தத்த தனதன தனந்த தத்த
தனதன தனந்த தத்த—தானன

அலைகடல் வளைந்து டுத்த எழுபுவி புரந்தி ருக்கு
மரசென நிரந்த ரிக்க வாழலாம்
அளகைய ரசன்ற னக்கு மமரர ரசன்ற னக்கு
மரசென அறஞ்செ லுத்தி யாளலாம்
அடைபெறு வதென்று முத்தி யதுமது ரசெந்தமிழ்க்கு
மருள்பெற நினைந்து சித்தி யாகலாம்
அதிரவ ருமென்று முட்ட அலகில்வி னைசண்டை நிற்க
அடலெதிர் புரிந்து வெற்றி யாகலாம் ;
இலகிய நலஞ்செய் புட்ப கமுமுட னிறம்வெ ளுத்த
இபஅர செனும்பொ ருப்பு மேறலாம்
இருவர வர்நின்றி டத்து மெவரெவ ரிருந்தி டத்து
மொருவனி வனென்று ணர்ச்சி கூடலாம்
எமபடர் தொடர்ந்த ழைக்கி லவருடனெதிர்ந்து ளுட்க
இடியென முழங்கி வெற்றி பேசலாம்
இவையொழி யவும்ப லிப்ப தகலவி டுமுங்கள் வித்தை
யினையினி விடும்பெ ருத்த பாருளீர் ;

முலையிடை கிடந்தி ளைப்ப மொகுமொகெ னவண்டி னரப்ப
முகையவிழ் கடம்ப டுத்த தாரினன்
முதலிபெ ரியம்ப லத்துள் வரையச லமண்ட பத்துள்
முனிவர்தொழ வன்று நிர்த்த மாடினன்
முனைதொறு முழங்கி யொற்றி முகிலென விரங்க வெற்றி
முறைநெறி பறந்து விட்ட கோழியான்
முதியவு ணரன்று பட்ட முதிய குடர்நன்று சுற்று
முதுகழு குபந்த ரிட்ட வேலினன்;
மலைமரு வுடைம்பு னத்தி வளருமி ருகுன்ற மொத்தி
வலிகுடி புகுந்தி ருக்கு மார்பினன்
மழலைகள் விளம்பி மொய்த்த அறுவர்மு லையுண்டு முற்றும்
வடிவுடன் வளர்ந்தி ருக்கும் வாழ்வினன்
மலையிறை மடந்தை பெற்ற வொருமத லையென்றுதித்து
மலையிடி யவுந்து ணித்த தோளினன்
மயிலையு மவன்றி ருக்கை அயிலையு மவன்கடைக்க
ணியலையு நினைந்தி ருக்க வாருமே. (அ)

சிவலோக வகுப்பு

தனதன தனதன தனதன தனதன தந்தன
தந்தந் தாத்தன தந்தந்—தனதானன.

உரகமு மிதழியு முதகமு முடுபதி யும்புனை
யும்பஞ் சாட்சரர் பங்கின் கொடிதாளினில்
உலகமு மலைகளு முததியு முயிருமட ங்கவொ
டுங்கும பார்ப்பதி மைந்தன் கமலாலயன்
உபநிட முடிவினு மிடபம தனிலுமு யங்கிவ
யங்குஞ் சீர்ப்பதி யொன்றென் றவிதாவென
உறைவிடு படையின னடலுடை நிசிசரர் தண்டமு
டைந்தங் கார்ப்பெழ வங்கம் பொருசேவகன்;

வநபதி சுரபதி சரவண மடுவினில் வந்தருள்
கந்தன் கார்த்திகெ யன்செங் கழுநீர்மலர்
மருவிய குருபரன் வனசரி பதயுக கஞ்சம்வ
ணங்கும் பாக்யக தம்பன் கருணாகரன்
வடதரு விலையிலும் வெகுமுக மவுலிய னந்தனெ
னுஞ்செஞ் சேக்கையி லுங்கண் டுயின்மாறிரு
மருமக னிமையவர் வழிபடு மணியணி கிங்கிணி
பண்கொண் டார்த்திசை கொஞ்சும் பதகுடிகை;
அருவுரு வொழியவொ ரபினவ வடிவரு ளுந்தனி
யந்தந் தீக்ஷையெ னுங்குண் டலபூஷணம்
அணியய மெனுமொரு சிவிகையொ டதிகுண மஞ்சினு
மஞ்செசான் ருக்கிய தென்பொங் கரியாசனம்
அறநெறி முறைமையி லொழுகிய வழகிய பண்பெனு
மம்பொன் சேர்த்தக லிங்கஞ் சயசாரமும்
அவனவ ளதுவென மொழியவு மிலதொரு வன்பிணி
யுங்கொண் டாக்கமு மின்பங் களுமேதரும்;
இரவலர் மிடிகெட வுதவிய விதரண கங்கண
மிங்கங் காப்பிலெ னுஞ்சுந் தரகாகளம்
எனதறு துறவினு முயர்கொடை யவிரத சங்குல
கெங்குங் கேட்டுவ முங்கும் பொறைமாமுர
சிமையவர் கணமுனி கணமுட னினிதுப்ர பஞ்சமி
றைஞ்சுங் கீர்த்திது ரங்கந் திறல்வாரணம்
இருவினை கெடவொரு நிராமய பரமவு னந்தரு
மின்பந் தேக்கிய அன்பின் சிவலோகமே. (௯)

உ

குகமயம்

அருணகிரிநாதர் அருளிச்செய்த

கந்தரலங்காரம்

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவரு கிற்சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையில்
தடபட டெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல் [னுஞ்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்க்ரு பாகரனே. (க)

அழித்துப் பிறக்கவொட் டாஅயில்வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப்புகையெழப் பொங்குவெங்கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே. (உ)

தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரெளஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே. (ங)

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்

சோரநிட் டுரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே. (௪)

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே. (௫)

பெரும்பைம்புனத்தினுட்சிற்றேனல்காக்கின்றபேதை கொங்
விரும்புங்குமரனைமெய்யன்பினுன்மெல்லமெல்லவுள்ள [கை
அரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்தஅன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே.

சளத்திற் பிணிபட்ட சட்டுக் கிரியைக்குட் டவிக்குமென்றன்
உளத்தில் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே. (௭)

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்தொ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே. (௮)

தேனென்று பாகென் றுவமிக்கொ ணாமொழித்தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே. (௯)

சொல்லுகைக்கில்லையென் றெல்லாமிழந்துசும்மாவிருக்கும்
எல்லையுட் செல்லஎனை விட்டவா இகல்வேலனல்ல [செவ்வாய்
கொல்லியைச்சேர்க்கின்றசொல்லியைக்கல்வரைகொவ்வைச்
வல்லியைப்புல்கின்றமால்வரைத்தோளண்ணல்வல்லபமே. ()

குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு வடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட வத்தூளின் வாரி திடர்பட்டதே. ()

படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப்பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே. (கஉ)

ஒருவரைப் பங்கி னுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே. (கங)

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே. ()

தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபான்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே. (கரு)

தடுங்கோள்மனத்தைவிடுங்கோள்வெகுளியைத்தானமென்
இடுங்கோளிருந்தபடியிருங்கோளெழுபாருமுய்யக் [றும்
கொடுங்கோபச்சூருடன்குன்றந்திறக்கத்துளைக்கவைவேல்
விடுங்கோனருள்வந்துதானேயுமக்குவெளிப்படுமே. (கசு)

வேதா கமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்

சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே. (கஎ)

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்கள் நுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே. (கஅ)

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் துளைத்த வைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லாமொ ருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே. (கசு)

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே. (உ0)

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிங் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே. (உக)

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் றலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருக னுமையாள் பயந்த இலஞ்சியமே. (உஉ)

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே. (உஙு)

தின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே.

தண்டா யுதமுந் திரிசூல முமவிழத் தாக்கி யுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாஅந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறுங் கர்மிகளே. ()

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே. (உஎ)

வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே.(உஅ)

கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே.(உகூ)

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற நீசெந்தி லோன்திருக்கை

வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே. ()

பொக்கக் குடிலிற் புகுதா வகைப்புண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே. (௩௧)

இளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
துளைத்துப்புறப்பட்டவேற்கந்தனே துறந்தோருளத்தை
வளைத்துப்பிடித்துப்பதைக்கப்பதைக்கவதைக்குங்கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்றவென்னையெந்நாள்வந் திரட்சிப்பையே.

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமா ளவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே. (௩௩)

பொட்டாக வெற்பைப் பொருத கந்தாதப்பிப்போனதொன்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப் [றற்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே. ()

பத்தித் துறையிழிந் தானந்த வாரி படிவதினால்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே. ()

சுழித்தோடுமாற்றிற்பெருக்கானதுசெல்வந்துன்பமின்பங்
கழித்தோடுகின்றதெக்காலநெஞ்சேகரிக்கோட்டுமுத்தைக்
கொழித்தோடுகாவிரிச்செங்கோடனென்கிலைகுன்றமெட்டுங்
கிழித்தோடுவேலென்கிலையெங்ஙனேமுத்திகிட்டுவதே. (௩௬)

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேல்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டுடு.டுடுடுடு டுண்டுடுண்டு [தனே
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந்தீர்த்தெனை யுன்னிலொன்றா
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயி லேறிய மாணிக்கமே. (௩௧)

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மன மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே. ()

பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே.()

நிணங்காட்டுங்கொட்டிலைவிட்டொருவீடெய்திநிற்கநிற்குங்
குணங்காட்டியாண்டகுருதேசிகனங்குறச்சிறுமான்
பணங்காட்டுமல்குற்குருகுங்குமரன்பதாம்புயத்தை
வணங்காத்தலைவந்திதெங்கேயெனக்கிங்ஙன்வாய்த்ததுவே.()

கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்

புலியார்ப் பெழுத்தொட்ட போர்வேல் முருகனைப் போற்றியன்பாற்
குலியாக் கரங்கள்வந் தெங்ஙகே யெனக்கிங்ஙன் கூடியவே. ()

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கை நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே. ()

ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிருபூத வீட்டி லிராமலென் றானிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவ னிட்டூர சூர குலாந்தகனே. (சரு)

நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மநோது க்க மானது மாய்வதற்கே. (சசு)

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மானந்த சாகரத்தே. (சஎ)

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே. (சஅ)

சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே. (சகூ)

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்
கடிக்கும் பிரான்மருகா கொடுஞ்சூரன் நடுங்க வெற்பை [ன்று
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே. (௫௦)

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே. ()

சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வ மீபணி பாசசங் க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே. (௫௨)

வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தால்
தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே. (௫௩)

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே. (௫௪)

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யாரென் செய்வார்யமதூதருக்கே.

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக் .

குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவ னூர்க்குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே. (ருசு)

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை யோம்இறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய வுடம்பிதுவே. (ருஎ)

நெற்றுப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக் கையும்வெந்து சங்க்ராம வேலும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவேந்த்ர லோக சிகாமணியே. ()

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடும் மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே. (ருகூ)

சிந்திக்கிலேனின்று சேவிக்கிலேன்தண்டைச்சிற்றடியை
வந்திக்கிலேனொன்றும்வாழ்த்துகிலேன்மயில்வாகனனைச்
சந்திக்கிலேன்பொய்யைநிந்திக்கிலேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமுங்காயக்கிலேசமும்போக்குதற்கே. (சுO)

வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித் தவாபஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே. (சுக)

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியும் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனு மேருவுமே. (சுஉ)

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வேலனைச் சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே. ()

பட்டிக் கடாவில் வருமந்த காலனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெருமாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே. (கூச)

வெட்டுங் கடாமிசைத் தோன்றும்வெங் கூற்றன் விடுங்கயிற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள் [றால்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே. (கூரு)

நீர்க்கு மிழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்கும ரற்கன் பிலாதவர் ஞானம் மிகவுநன்றே. (கூசு)

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே. (கூஎ)

சாடுஞ் சமரத் தனிவேல் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண் டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே. (கூஅ)

தந்தைக்குமுன்னந்தனிஞானவாளொன்றுசாதித்தருள்
கந்தச்சுவாமியெனைத்தேற்றியபின்னர்க்காலன்வெம்பி

வந்திப்பொழுதென்னையென்செய்யலாஞ்சததிவாளொன்றினுற்
சிந்தத்துணிப்பன்தணிப்பருங்கோபத்திரிசூலத்தையே. (௬௬)

விழிக்குத்துணை திருமென்மலர்ப்பாதங்கள்மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே. ()

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் னாஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே. ()

சேந்தனைக்கந்தனைச்செங்கோட்டுவெற்பனைச்செஞ்சுடர்வே
வேந்தனைச்செந்தமிழ்நூல்விரித்தோனைவிளங்குவள்ளி [ல்
காந்தனைக்கந்தக்கடம்பனைக்கார்மயில்வாகனனைச்
சாந்துணைப்போதுமறவாதவர்க்கொருதாழ்வில்லையே. (௭௨)

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே. (௭௩)

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டுமவிழ்ந்தஅன்பாற்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங் கொடியஐவா
பராக்கறல் வேண்டும்மனமும் பதைப்பறல்வேண்டுமென்றால்
இராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே. (௭௪)

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மானந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே. (௭௫)

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே. (எசு)

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேரவெண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்குநெஞ்சே.

கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண்டாடுவீர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரும் மாளிகையும் பணச்சாளிகையும்
ஆர்கொண்டு போவரையோ கெடுவீர்நும் மறிவின்மையே.

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்கும ராஅம ராவதி காவலனே. (எகூ)

மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே. (அ0)

தாரா கணமெனுந் தாய்மா ரறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகல்அந்த காவந்த போதுயிர் வாங்குவனே. (அக)

தகட்டிற் சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு ளாய்புண்ட ரீகனண்ட

முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட திட்டூர சூர பயங்கரனே. (அஉ)

தேங்கிய அண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே.

மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும்போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே.

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகஎளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே.

வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே. (அசு)

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே. (அஎ)

வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்று வாய்கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கை யலகைகொண் டாடப் பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலாயு தந்தொட்ட நிர்மலனே. (அஅ)

பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே. (அக)

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே. (கூ0)

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.(கூக)

தொண்டர் கண்டண்டி மொண்டுண்டிருக் குஞ்சுத்த ஞானமெனுந்
தண்டையம் புண்டரிகந் தருவாய்சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங்கொண்டுபண்டண்டரண்டங்கொண்டுமண்டிமிண்டக்
கண்டுருண்டண்டர்விண்டோடாமல்வேல்தொட்டகாவலனே.

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா லுலகமுங் கேட்டதுவே. (கூங)

தெள்ளிய வேனலிற் கிள்ளையைக் கள்ளச்சிறு மியெனும்
வள்ளியை வேட்டவன் றாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளியகெண் டையைத் தொண்டையைத் தோதகச்சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்டநெஞ்சே. (கூச)

யான்றா னெனுஞ்சொல் லிரண்டுங்கெட் டாலன்றி யாவருக்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க் [குந்
கின்றான் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே. (௯௫)

தடக்கொற்ற வேள்மயி லேயிடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே. (௯௬)

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தனந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே. (௯௭)

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே. ()

தாவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோற்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே. (௯௯)

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட் டியவா கிரௌஞ்சவெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே. (௧௦௦)

நூற்பயன்

சலங்கா ணும் வேந்தர் தமக்குமஞ் சார்யமன் சண்டைக்கஞ்
சலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார் [சார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவி தான்கற் றறிந்தவரே.

சில பிரதிகளிலே அதிகமாகக் காணப்பட்ட பாக்கள்

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

இராப்பக லற்ற விடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே.

செங்கே ழடுத்த சிவனடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினு மங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க வென்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே.

கொள்ளித் தலையி லெறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தில் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே.

சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் றனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமார னாறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

உ

குகமயம்

அருணகிரிநாதர் அருளிச்செய்த

கந்தரநுபூதி

காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரஆ னைபதம் பணிவாம்.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே. (க)

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறஎன் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. (உ)

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டஇடந்
தானோ பொருளா வதுசண் முகனே. (ங)

வளைபட் டகைம்மா தொடுமக் களொனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. (௪)

மகமா யைகளைந் திடவல் லபிரான்
முகமா றுமொழிந் துமொழிந் திலனே
அகமா டைமடந் தையரென் றயருஞ்
சகமா யையுள்நின் றுதயங் குவதே. (௫)

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந் தமரும் புமதோ
பணியா வெனவள் ளிபதம் பணியுந்
தணியா அதிமோ கதயா பரனே. (௬)

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. (௭)

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள்பே சியவா
குமரன் கிரிரா சகுமா ரிமகன்
சமரம் பொருதா னவநா சகனே. (௮)

மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரிசென் றொழிவேன்
தட்டூ டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே. (௯)

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்

தார்மார் பவலா ரிதலா ரியெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. (௧௦)

கூகா எனஎன் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே. (௧௧)

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறஎன் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே. (௧௨)

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. (௧௩)

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநா சியொடுஞ் செவியாம்
ஐவாய் வழிசெல் லுமவா வினையே. (௧௪)

முருகன் குமரன் குகனென் றுமொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே. (௧௫)

பேரா சையெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோ கதுரந் தரனே. (௧௬)

யாமோ ரியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேன் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே. (கஎ)

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா அநகா அபயா அமரா
பதிகா வலசூ ரபயங் கரனே. (கஅ)

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென் றொருபா விவெளிப் படினே. (ககூ)

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதே சமுணர்த் தியவா
விரிதா ரணவிக் ரமவே ளிமையோர்
புரிதா ரகநா கபுரந் தரனே. (உ0)

கருதா மறவா நெறிகா ணஎனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே. (உக)

காளைக் குமரே சனெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே. (உஉ)

அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ

வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. (உரு)

கூர்வேல் விழிமங் கையர்கொங் கையிலே
சேர்வே னருள்சே ரவுமெண் ணுமதோ
சூர்வே ரொடுகுன் றுதொளைத் தநெடும்
போர்வே லபுரந் தரபூ பதியே. (உச)

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலே றியசே வகனே. (உரு)

ஆதா ரமிலே னருளைப் பெறவே
நீதா னொருசற் றுநினைந் திலையே
வேதா கமஞா னவிநோ தமனோ
தீதா சுரலோ கசிகா மணியே. (உசு)

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலே றியவா னவனே. (உஎ)

ஆனா அமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகி யவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. (உஅ)

இல்லே யெனுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியா மைபொறுத் திலையே
மல்லே புரிபன் னிருவா குவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. (உகூ)

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததெனை யுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. (௩௦)

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யெனஎன் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. (௩௧)

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவே டர்குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடுவா கையனே. (௩௨)

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந் தவரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. (௩௩)

சிங்கா ரமடந் தையர்தீ நெறிபோய்
மங்கா மலெனக் குவரந் தருவாய்
சங்க்ரா மசிகா வலசண் முகனே
கங்கா நதிபா லக்ருபா கரனே. (௩௪)

விதிகா ணுமுடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழலென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. (௩௫)

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்

வேதா முதல்விண் ணவர்சூ டுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. (௩௬)

கிரிவாய் விடுவிக் ரமவே லிறையோன்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோ டுமகந் தையையே. (௩௭)

ஆதா ளியையொன் றறியே னையறத்
தீதா ளியையாண் டதுசெப் புமதோ
கூதா ளகிரா தகுலிக் கிறைவா
வேதா ளகணம் புகழ்வே லவனே. (௩௮)

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவே டணையென் றுமுடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே. (௩௯)

வினையோ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோ டுதிரிந் தவனே. (௪௦)

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே. (௪௧)

குறியைக் குறியா துகுறித் தறியும்
நெறியைத் தனிவே லைநிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியா மையுமற் றதுவே. (௪௨)

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூ திபிறந் ததுவே. (சங)

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. (சச)

கரவா கியகல் வியுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே. (சரு)

எந்தா யுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. (சசு)

ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. (சஎ)

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும்வே லவனே. (சஅ)

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ

மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையுங் க்ர்பைசூழ் சுடரே. (௪௯)

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞா னசுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. (௫௦)

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. (௫௧)

உ

குகமயம்

அருணகிரிநாதர் அருளிச்செய்த

கந்தரந்தாதி

சிந்தா குலவ ரிசைப்பேரு மூருநஞ் சீருமென்றோர்
சிந்தா குலவ ரிடத்தணு காதரு டைமதலை
சிந்தா குலவரி மாயூர வீர செகமளப்பச்
சிந்தா குலவரி மருக சூரனைச் செற்றவனே

(கருத்து) கோழிக் கொடியோனே! பச்சை மயில் வீரனே! வாமனாவதாரங் கொண்ட மால் மருகோனே! சூரசங்காரனே! லௌகீக வாழ்வை நித்தியமாய் நம்பி மனம் வருந்துவோர்பாற் சேராதிருக்க எனக்கருள்செய். (௧)

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரண மஞ்சலென் றுண்டது நீண்ட கன்மச்
செவிக்குன்ற வாரண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்
செவிக்குன்ற வாரண வள்ளிபொற் றுண்மற்றென் றேடுவதே.

(க-து) நாகமலையில் வாழும் முருகப்பெருமானே! உன் திருப்புகழை யான் கேட்டறிந்த மாத்திரத்தில் நினது கோழிக் கொடி என் உயிரை அபயங்கொடுத் தாண்டுகொண்டது; உன் வேலாயுதம் பிறப்புக்கிடமான பேராசையை யொழித்துவிட்டது; உன் தேவிமாரது திருவடியுங் கிடைத்தது; அடியேன் தேடவேண்டியதென்ன இருக்கின்றது? (௨)

தீவர கந்தரி தாம்பகி ராருற வானசெம்பொன்
தீவர கந்தரி யாரொரந்த போரினிற் செச்சையவிந்
தீவர கந்தரி சிந்துரை பாக சிவகரண
தீவர கந்த ரிபுதீ ருனதடி சேமநட்பே.

(க - து) வெட்சி மாலையையும் செங்கழுநீர் மாலையையும் அணி கின்றவனே! வள்ளி தெய்வயானை பாகனே! சிவகரணம் எய்தப் பெற்றவர்களுக்கு அனுக்கிரகஞ் செய்கின்றவனே! எனக்குறவினர் பொன் விளையுந் தீவி லிருப்பவராயினும், வறுமையால் வருந்துங் காலத்தில் அந்த அரித்து தீய்ந்த வரகையாவது உதவவல்லரோ? ஆதலின் உனது திருவடியே பொக்கிஷமும் உறவுமாம். (௩)

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

(க - து) கான்யாறோடும் புனத்திலிருந்த வள்ளிநாயகியாரி டத்து அன்புகூர்ந்த செந்தில் நாயகனே! அசுரர்குலாந்தகனே! சேந்தனே! என்று துதிக்கின்றவர்களுக்கு நவக்கிரகங்களின் வக்கி ரோதயத்தால் உண்டாகுந் தீமையில்லை. (௪)

தீட்டப் படாவினி யுன்றலென் சென்னி கறைப்பிறப்பில்
தீட்டப் படாவி யவரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்
தீட்டப் படாவி தழுகா சலன்சிறை விட்டவன்றாள்
தீட்டப் படாவி வனையே நினைவன் றிசாமுகனே.

(க - து) பிரமதேவரே! இனி யென்னை யுதிரநிறைந்த கருக் குழியில் அழுந்துவோரைப்போல் நினையாதே! இந்திரனது சிறை யைத் தவிர்த்தாண்ட குமாரக்கடவுளது பாததாமரையை யடையும் பொருட்டு அவனையே தியானித்துக்கொண் டிருக்கிறேனாதலால் எனது தலை யுன்கையால் இனி யெழுதப்பெறாது. (௫)

சிவசிவ சங்கர வேலா யுததினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய்பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே.

(க - து) முழுமுதற் பொருளான பரமசிவனது மைந்தனாகிய வேலாயுதத்தை யுடையோனே! தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளி நாயகனே ! மயிலேறும் வீரனே ! மாவடிவாய்நின்ற சூரனைவென்ற தீரனே! நின் திருவருளின் பிரகாசத்தினால் எனது கோபமென்னும் மிருகம் பொறுமையென்னும் ஆயுதத்தால் அழிந்த தன்மைய தாயிற்று (சு)

சேந்த மராத்துடர் தானவர் சேனையைத் தெண்டிரைக்கண்
சேந்த மராத்துடன் கொன்றசெவ் வேல திருமுடிமேற்
சேந்த மராத்துட ரச்சூடி மைந்த திளைத்திளைத்தேன்
சேந்த மராத்துட ரின்னுரி யென்னுமிச் சேறுபுக்கே.

(க - து) கடப்பமாலை அணியுஞ் சேந்தனே ! சமுத்திரத்தின் கண் மாமரமாய்நின்ற சூரனோடு அசுரர் கிளையை யழித்த வேலாயுதனே! சந்திரனையும், கங்கையையும், அரவாபரணத்தையும் தரித்த பரமசிவனது மைந்தனே ! என்னைச் சூழ்ந்திராநின்ற சுற்றத்தார், மனைவி, மனை என்னுஞ் சேற்றில் கிடந்து வருந்துகின்றேன் ; இனி யேனு மென்னைக் காப்பாற்றவேண்டும். (எ)

உ

குகமயம்

குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த

திருச்செந்தூர்க்

கந்தர் கலிவெண்பா

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையுந்—தேமேவும்
நாதமுநா தாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமாய்—ஆதிநடு
அந்தங் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த
குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்
கநாதியா யைந்தொழிற்கு மப்புறமா யன்றே
மநாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தநாதருளின்
பஞ்சவித ரூப பரசுகமா யெவ்வுயிர்க்குந்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய்—எஞ்சாத
பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியில்
இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோல்—முந்துங்
கருவின்றி நின்ற கருவா யருளே
உருவின்றி நின்ற வுருவாய்த்—திரிகரணம்

ஆகவரு மிச்சை யறிவியற்ற லாவிலய
போகஅதி காரப் பொருளாகி—யேகத்
துருவு மருவு முருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவா—யிருள்மலத்துள்
மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்
தந்த அருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்
ஆறத்து வாவுமண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்
ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள்—தீர்வரிய
கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித் துழலத் திரோதித்து—வெந்நிரய
சொர்க்காதி போகமெல்லாந் துய்ப்பித்துப் பக்குவத்தால்
நற்கா ரணஞ்சிறிது நண்ணுதலுந்—தர்க்கமிடுந்
தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத்தெரிந்து நாட்டுவித்து—முன்னால்
விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்—தருள்பெருகு
சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்
தாலோகந் தன்னை யகற்றுவித்து—நால்வகையாஞ்
சத்திநி பாதந் தருதற் கிருவினையும்
ஒத்துவருங் கால முளவாகிப்—பெத்த
மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி—யுலவா
தறிவுக் கறிவாகி யவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்

கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு—திருநோக்கால்
ஊழ்வினையைப் போக்கி யுடலறுபத் தெட்டுநிலம்
ஏழுமத்து வாக்க ளிருமூன்றும்—பாழாக
ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்
அடிஞானத் தாற்பொருளு மான்மாவுங் காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்—போக்கும்
வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா இன்ப—மருவுவித்துக்
கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வன்மழுவு மானுமுடன் மால்விடைமேல்—மின்னிடத்துப்
பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்ததனைய தெய்வ வடிவாகி—மூத்த
கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் துண்ணின்
றொருமலத்தார்க் கின்ப முதவிப்—பெருகியெழு
மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேயிருத்தி
ஆன்றபர முத்தி யடைவித்துத்—தோன்றவரும்
யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக—ஞானந்
திருவுருவா இச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை யலரா—இருநிலமே
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே—மின்னுருவந்
தோய்ந்தநவ ரத்னச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியுந்—தேய்ந்தபிறைத்

துண்டமிரு மூன்றுநிறை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்
கருள்பொழியுங் கண்மலரீ ராறும்—பரிதி
பலவு மெழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயுஞ்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்—வின்மலிதோள்
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூ ரனைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமுஞ்—சூழ்வோர்
வடிக்கும் பழமறைக ளாகமங்க ளியாவும்
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்
பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோக மளிக்கும் முகமதியுந்—தாகமுடன்
வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையுங்—கொந்தவிழ்ந்த
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசைலம் பன்னிரண்டும்—ஆரமுதந்
தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்—ஓவாது
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கி லொருகரமும்—மொய்த்த

சிறுதுடிசேர் கையுமணி சேர்ந்ததடங் கையுங்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையுந்—தெறுபோர்
அதிர்கே டகஞ்சுழற்று மங்கைத் தலமுங்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்—முதிராத
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணைந்த
அம்பொன் மணிப்பூ ணகல்மார்பும்—பைம்பொற்
புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைநா ணுங் கச்சை யழகுந்—திருவரையும்
நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமுஞ்—சோதி
இளம்பரிதி நூறா யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்—உளந்தனிற்கண்
டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே—யோதியவைந் [கும்
தோங்காரத் துள்ளொளிக்கு முள்ளொளியா யைந்தொழிற்
நீங்காத பேருருவாய் நின்றோனே—தாங்கரிய
மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்—பந்தனையால்
ஒத்த புவனத் துருவே யுரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா—வைத்த
கலையே யவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்—பலகோடி
அண்ட முருவாகி யங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் கரணமாய்த்—தொண்டுபடும்
ஆவிப் புலனுக் கறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்து மெங்கோவே—மேவ
வருமட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானந்
தருமட்ட யோகத் தவமே—பருவத்

தகலாத பேரன் படைந்தோ ரகத்துட்
புகலாகு மின்பப் பொருப்புஞ்—சுகலளிதப்
பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீதானந்
தேரின்ப நல்கும் திருநாடும்—பாரின்பம்
எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்
ஈறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமும்—ஏறுமதந்
தோய்ந்து களித்தோர் துதிக்கையினாற் பஞ்சமலங்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ
பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையுங்—காரணத்துள்
ஐந்தொழிலு மோவா தளித்துயர்ந்த வான்கொடியும்
வந்த நவநாத மணிமுரசுஞ்—சந்ததமும்
நீக்கமின்றி யாடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி யசைத்தருளு மாலையும்—தேக்கமழ்ந்து
வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே—தேசுதிகழ்
பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி—யாங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ டதோமுகமுந்—தந்து
திருமுகங்க ளாறுகிச் செந்தழற்க ணாறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவனம்
எங்கும் பரக்க இமையோர்கண் டஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தா—லங்கண்
எடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்—அடுத்ததொரு

பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்—போதொருசற்
றன்னவளுங் கொண்டமைதற் காற்றாள் சரவணத்திற்
சென்னியிற்கொண் டுய்ப்பத் திருவுருவாய்—முன்னர்
அறுமீன் முலையுண் டழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்—குறுமுறுவற்
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுதலும்
அன்னவள்கண் டவ்வுருவ மாறினையுந்—தன்னிரண்டு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யா றொன்றாக மேவுவித்துச்—செய்ய
முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்
துள்ள முவப்ப வுயர்ந்தோனே—கிள்ளைமொழி
மங்கை சிலம்பின் மணியொன் பதிற்றோன்றுந்
துங்க மடவார் துயர்தீர்ந்து—தங்கள்
விருப்பா லளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு—நெருப்பிலுதித்
தங்கட் புவன மனைத்து மழித்துலவுஞ்
செங்கட் கடாஅதனைச் சென்றுகொணர்ந்—தெங்கோன்
விடுக்குதியென் றுய்ப்பஅதன் மீதிவர்ந்தெண் டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா—படைப்போன்
அகந்தை யுரைப்பமறை யாதி யெழுத்தொன்
றுகந்த பிரணவத்தி னுண்மை—புகன்றிலையாற்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே—மட்டவிழும்

பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே—கொன்னெடுவேற்
றூரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே—சீரலைவாய்த்
தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்
கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திரனுஞ்
சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே—காரவுணன்
வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்க ளோற்படையுஞ் சங்கரித்துப்—பானு
பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்—சகமுடுத்த
வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்—போரவுணன்
அங்கமிரு கூறு யடல்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலும்—அங்கவற்றுட்
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
வேறி நடாத்து மிளையோனே—மாறிவரு
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே—மூவர்
குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே—மறைமுடிவாஞ்
சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவுந்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே—பொய்விரவு

காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு
கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே—யுள்ளமுவந்
தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே—நாறுமலர்க்
கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே—சந்ததமும்
பல்கோடி சன்மப் பகையு மவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி
பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பிசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையுந்—தீதகலா
வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலும்—அவ்விடத்திற்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்ச மகற்றும் அயில்வேலுங்—கச்சைத்
திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீரா
றருள்விழியு மாமுகங்க ளாறும்—விரிகிரணஞ்
சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறும்
எந்தத் திசையு மெதிர்தோன்ற—வந்திடுக்கண்
எல்லாம் பொடிபடுத்தி யெவ்வரமுந் தந்துபுகுந்
துல்லாச மாக வுளத்திருந்து—பல்விதமாம்
ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை

எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்—தொழுக்கமுடன்
இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்—தம்மைவிடுத்
தாயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஐந்து வயது வரையும் ஊமையா யிருந்து ஐந்தாம் வயதிலே திருச்செந்தூர் முருகக் கடவுளது திருவருளினால் இக்கலிவெண்பாவை அருளிச்செய்தார். கல்வியில் விருப்பமுடையவர்கள் இக்கலிவெண்பாவைத் தினந்தோறும் நியமமாக அன்புடன் பாராயணம் பண்ணக் கடவர்கள்.

உ

குகமயம்

குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

செங்கீரைப் பருவம்

இருக்கோ லிடும்பரி புரக்கோல முந்துதலி லிட்ட பொட்டுஞ்சுட்டியும், எரிமணிப் பட்டமுங் கட்டுபொன் னரை ஞாணு மிளஞாயி றுதயஞ்செயும்,—உருக்கோல முஞ்சூழி யக்கொண்டை யும்முச்சி யுச்சியும் வாளிமுத்தும், ஒள் ளொளி ததும்புங் குதம்பையுங் கண்டுகண் டேடரிக் கண் களிக்கும்,—மருக்கோல நீலக் குழற்றைய லாட்கரு மருந்தா யிருந்ததெய்வ, மகக்கோல மேழுதிர் கிழக்கோல மாய்க்குற மடந்தைமு னடந்துமறறத், — திருக்கோல முடனொரு மணக்கோல மானவன் செங்கீரை யாடியருளே, செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள செங்கீரை யாடி யருளே. (க)

வேறு

செம்பொ னடிச்சிறு கிண்கிணி யோடு சிலம்பு கலந் தாடத், திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திக ழரை வடமாடப்,—பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ் சிறு பண்டி சரிந்தாடப், பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்,—கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக், கட்டிய சூழியு முச்சியு முச்

சிக் கதிர்முத் தொடுமாட,—அம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை, யாதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங் கீரை. (௨)

விரல்சுவை யுண்டு கனிந்தமு தூறிய மெல்லிதழ் புல ராமே, விம்மிப் பொருமி விழுந்தழு தலறியுன் மென்குரல் கம்மாமே,—கரைவுறு மஞ்சன நுண்டுளி சிந்திக் கண்மலர் சிவவாமே, கலுழ்கலு ழிப்புன லருவி படிந்துடல் கருவடி வுண்ணாமே,—யுருவ மணிச்சிறு தொட்டி லுதைந்துநி னெண்பத நோவாமே, யொருதா ளுந்தி யெழுந்திரு கையு மொருங்கு பதித்துநிமிர்ந்,—தருள்பொழி திருமுக மசைய அசைந்தினி தாடுக செங்கீரை, யாதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை. (௩)

தாலப் பருவம்

மாலி மயத்து மடப்பிடி பெற்று வளர்த்த இளங் களிறே, மழவிடை யேதிரு மாமடி கட்டென வைத்த கவுத்து வமே,—மூல மெனக்குல நான்மறை யோலிடு முழுமுத லேமுவா, முக்கட் கனிகனி யுஞ்சுவை யேதனி முத்திக் கொருவித்தே,—காலை யிளங்கதி ருக்கெதிர் முதிருங் கதிர் செம் பவளமுடன், கதிர்முத் திட்டு வணங்கக் கன்னல்கொல் கமுகுகொ லெனவளருஞ்,—சாலி வயற்றமிழ் வேளூ ரதி கேள் தாலோ தாலேலோ, சங்கத் தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ. (௪)

உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட வொளி விடு முழுமணியே, யுயர்மறை நூற்கலை முடிவின் முடிந்திடு மொழுகொளி மரகதமே,—விண்ணொடு மண்ணை விழுங்கி யருட்கதிர் விரியு மிளஞ்சுடரே, மெய்ப்புலன் வேய்ந்து சமைந்ததொர் வீட்டை விளக்கும் விளக்கொளியே,—புண்

ணிய நாறுமொர் பெண்கனி கனியும் புனித நறுங்கனியே, புள்ளூறு ரெனஎம துள்ளத் தடநிறை புத்தமு தக்கடலே,— தண்ணொளி பொங்கிய கருணை நிதியே தாலோ தாலேலோ, சங்கத் தமிழின் றலைமைப் புலவா தாலோ தாலேலோ. (௫)

சப்பாணிப் பருவம்

கடலைச் சுவற வடித்து மிடித்துக் கனவரை துகள்கண் டுங், கடிதிற் றிரிய வகுப்பதை யொப்பக் காரவு ணக் கடலின்,—உடலிற் பெருகிய குருதிக் கடல்பிண வோங்கலொ டோங்க அமைத், தொட்டிய வொட்டல ரிற்பிற கிட்டவ ரொழியப் பிறரையெலாங்,—தடவுத் தாழியின் மத்தெறி தயிரிற் றத்துதி ரப்புனலில், தசைசுடர் நிணமொடு மூளை குழம்பச் சமர்விளை யாடல்செயுங்,—குடுமிச் சுடர்வடி வேலைத் தொட்டவ கொட்டுக சப்பாணி, கொழிதமிழ் வேத புரிக்கும ரேசன் கொட்டுக சப்பாணி. (௬)

வேறு

வளரிள வனமுலை மலைமக ளுக்கொர்த வப்பேறே, மறி திரை பொரநிமிர் கருணைகொ ழித்தபெ ருக்காறே,—அளி யுமி னமுதெழு வெளியினில் வைத்தசு வைத்தேனே, யற முதுதவமொடு வளரவ ளர்த்திடு நற்றூயே,—களிமயில் கடவிவி ணடையமு டுக்கிய புத்தேளே, கலைமறை யெனு முரல் வரியளி மொய்த்தம லர்க்காவே,—தெளிதமிழ் பழகிய மதவலி கொட்டுக சப்பாணி, தினகர புரிவரு தனிமுதல் கொட்டுக சப்பாணி. (௭)

முத்தப் பருவம்

பொழியுங் கருணைப் பெருவெள்ளப் புணரி பெருகி யலையெறியப், பொங்கி யெழுந்த பெருங்காதற் புளகம்

போர்ப்பப் போதுசெயும்,—விழியு மனமுங் குளிர்தூங்க விரிநீர்ச் சடிலத் தொருவனிரு, வீணைக் குதவுந் திருச்செவி கள் விருந்தாட் டயர விரைகொழித்து,—வழியுங் கொழுந் தேன் பிழிந்திட்டு மதுர அமுது குழைத்தூற்று, மழலை ததும்பப் பழமறையை வடித்துத் தெளித்த வார்த்தை யொன்று,—மொழியும் பவளச் செங்கனிவாய் முத்தந் தருக முத்தமே, மும்மைத் தமிழ்தேர் கந்தபுரி முருகா முத்தந் தருகவே. (அ)

வேறு

வடிவி னழகு மெழுத வரிய புயமு நறிய செச்சையும், மருமம் விரவு குரவு மரையின் மணியு மணிகொள் கச்சை யும்,—கடவு மயிலும் அயிலு மொழுகு கருணை வதன பத்ம முங், கமல விழியும் விழியு மனமு மெழுதி யெழுதி நித்தலு,— மடிக ளௌனவு னடிகள் பணியு மடிய ரலது மற்றும்வே, றமரர் குழுவு மகில மறையு மரியு மயனு மூற்றுநின்,—முடியு மடியு முணர வரிய முதல்வ தருக முத்தமே, முனிவர் பரவு பரிதி புரியின் முருக தருக முத்தமே. (க)

வருகைப் பருவம்

செம்பொற் கருங்கழ லரிக்குரற் கிண்கிணி சிலம்பொடு கலின்கலினெனத், திருவரையி லரைமணி கிணின்கிணி னெனப்பொலந் திண்டோளின் வளைகலிப்ப,—அம்பொற் பகட்டுமார் பிற்சன்ன வீரமு மாரமுந் திருவில்வீச, அணி மகர குண்டலம் பரிதிமண் டலமென்ன அலர்கதிர்க் கற்றை சுற்றப்,—பைம்பொற் சுடர்ச்சுட்டி கட்டுரு ழியமுடன் பட்டமொளி விட்டெறிப்பப், பங்கய மலர்ந்ததிரு முகமண் டலந்தொறும் பனிமுறுவல் நிலவரும்பக்,—கும்பப் படாமுலை

மலைப்புதல்வி செல்வக் குமாரநா யகன்வருகவே, குரவுகமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுரு பரன்வருகவே.

அங்கைத் தலத்தம்மை செங்கண் புதைத்தற் கடங் காமை யாரெலம்பிரான், அலர்விழிகள் பொத்தலு மிருட்படல மூடவுள் ளஞ்சிநின் றேங்கவங்கிச்,—செங்கைத் தலங் கொண் டெடுத்தணைப் பாட்குந் திருத்தாதை யார்க்குமுத் தந், திருமுகமொரா றுங் கொடுப்பக் கதுப்பிற் றெறித்துமுத் தந்தருகெனுங்,—கங்கைக்கு நல்கா தெழுந்தலறி யோடலுங் கண்ணீர் துடைத்தெடுத்துக், கான்மலரு நீவித்தன் மார்புற அணைக்குமக் கவுமாரி யருண்மாரியிற்,—கொங்கைக் குடங் கொட்டு பாலருவி யாடுங் குமாரநா யகன்வருகவே, குரவு கமழ் தருகந்த புரியிலருள் குடிகொண்ட குமரகுரு பரன் வருகவே. (கக)

வேறு

உலகு குளிர எமது மதியி லொழுகு மமுத கிர ணமே, யுருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழுந லுதயமே,—கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே, கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே,—அலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி னிலயமே, யறிவு ளறிவை யறியு மவரு மறிய வரிய பிரமமே,—மலையின் மகள்கண் மணியை யனைய மதலை வருக வருகவே, வளமை தழுவு பரிதி புரியின் மருவு குமரன் வருகவே. (கஉ)

அம்புலிப் பருவம்

சொற்றரு பெரும்புலவர் கலையமுது கொளவிருந் தோகைமேல் கொண்டருளிஞய், தோற்றிமுன் பொங்கிமலை போலவலை மோதுமச் சோதிவே லையுமுகந்தாய்,—குற்ற மில் குணத்தைக் குறித்தவிர வலர்முகங் கோடா தளித்தல்

செய்தாய், கோகனக நாயகன் வரக்கூ விடுங்குக் குடங் கொடிய தாகவைத்தாய்,—உற்றிடு மிதழ்க்குமுதம் விண்டு தண் டேனொழுக வொளிநிலா நகைமுகிழ்த்தாய், உன் செய்கை யெம்பிரான் றன்செய்கை போலுமா லுனையுமிவ னெவ்வாறிரான்,—அற்பொறி களத்தவ னளித்தகும ரேச னுட னம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழைய வரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (கரு)

ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப தொரு தெய்வ முண்டெனவெடுத், துரையா லுணர்த்துவதை யொழியவெவ ரெவர்கட்கு மூன்கண் ணுளக்கண்ண தாம்,—விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள் வேண்டிய வரங்கொடுப்பான், மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவியில் வேறில்லை யென்றுணர்தியாற்,— பொழியாத புயல்தங்கு புவனமுந் திசைமுகப் புத்தேள் பெரும்புவனமும், பொன்னுலகு மண்ணுலகு மெவ்வுலகு வேண்டினும் பொருளன் றிவற்குமற்றை,—யழியாத வீடுந் தரக் கடவ னிவனுட னம்புலீ யாடவாவே, யழகுபொலி கந்தபுரி தழையவரு கந்தனுட னம்புலீ யாடவாவே. (கச)

சிற்றிற் பருவம்

கொழுநாண் மலர்க்கற் பகமுநறைக் குரவு நாறு நறுங் குஞ்சிக், கோமான் மகனே நங்கள்குலக் கொழுந்தே யென்று குறையிரந்து,—தொழுவா னவர்த முடிசூட்டுஞ் சோதி முடியிற் றுகளெழுநின், துணைத்தாள் வண்டற் றுறைப்புழுதித் தூளி படினும் படுகசுடர்க்,—கழுவா மணியு திலவுமிரி கதிர்நித் திலமு முமையம்மை, கண்ணி லுறுத்த வடிகேணின் காலி லுறுத்தல் கடனன்றாற்,—செழுநான்

மறையின் பெருஞ்செல்வச் செருக்கே சிற்றில் சிதையேலே,
செங்கெற்பழனப் புள்ளூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

சிறுபறைப் பருவம்

விளைக்கும் பெரும்புவன மொக்கக் கரைத்தகடை வெள்ளஞ் சுருங்கவீங்கி, வேதண்ட மெட்டினொடு மூதண்ட கூடத்தும் விளையாடி யுலகமேழும்,—வளைக்குங் கருங்கடல் பெரும்புறக் கடலொடும் வாய்மடுத் தெதிரெடுப்ப, வரு புனற் காவேரி வளநாட னாடொறு மதிக்கடவு ளேறியேறி, யிளைக்கும் பளிக்கறை முயற்கறை யறக்கானு மிளநிலா வெள்ள மூழ்கி, யெறிதிரைப் பாகீ ரதிப்புனல் குடைந்திடு மிடைக்கொடி நகிற்கொடியெனத்,—திளைக்குந் துகிற்கொடி முகிற்கொடிசெய் வேளூர சிறுபறை முழக்கியருளே, தென் கலைக் கும்பமைய வடகலைக் குந்தலைவ சிறுபறை முழக்கி யருளே. (கசு)

வேறு

மழைமுகில் பிளிறு முழக்கென விரிசிறை மடமயி லினமகவ, மால்கட லோலிடு மொலியென விரக மடந்தை யர் மனநெகிழப்,—பழமறை யார்ப்பென வாகுதி வேட் டெழு பண்ணவ ருள்மகிழப், பரநா தத்தொலி யெனவனு பூதி பலித்தவர் நெக்குருக,—அழலவிர் சோதியெம் ஐயன் நடஞ்செய ஆயிரம் அங்கையினோ, ரண்ணல் துவைத்திடு குடமுழ வொடுசுட ராழி யவன்கொட்டு,—முழவென அமரரு முனிவரு மார்ப்ப முழக்குக சிறுபறையே, முத் தமிழ் பயில்பரி திப்பதி முருகன் முழக்குக சிறுபறையே. ().

வம்பி னெனப்புல வோரை யழைத்திடு வண்கொடை முரசமென, வடகலை தென்கலை யொடுபயி லுங்கவி வாணர்க ளோடிவர,—அம்மென் மடப்பிடி பொன்னுல கீன்ற அணங்கை மணம்புணரும், அணிகிளர் மணிமுர சென்ன

வெமையமெ டம்மை மனங்குளிரத்,—தெம்முனை சாய்தரு சமர்வினை யாடிச் செங்கள வேள்விசெயுந், திறன்முர செனஇமை யவர்விழ வயரச் செழுநகர் வீதிதொறும்,— மும்முர சமுமதிர் காவிரி நாடன் முழக்குக சிறுபறையே, முத்தமிழ் பயில்பரி திப்பதி முருகன் முழக்குக சிறுபறையே.

சிறுதேர்ப் பருவம்

கள்ளவிழ் நறுங்கொடிகள் கமுகிற் படர்ந்துபூங் கற்பகத் தும்படர்தலாற், காமன் பெருஞ்செல்வ மன்னவர்கள் குழுமியக் கமுகின் கழுத்தில்யாத்த,—வொள்ளொளிய செம்மணிப் பொன்னூசல் பன்முறை யுதைந்தாட ஆடுந்தொறும், ஒண்கமு கொடுந்துணர்ப் பைங்கற் பகக்காடு மொக்கவசை யத்தலையசைத்,—தள்ளிலை யலங்கல்வே லெம்பிரா னைப்பாடி யாடுகின் றாரெனத்தா, மலர்மாரி பொழிவபோ லங்கற் பகத்தெய்வ மம்பொன்மலர் மாரிதூர்க்குந்,—தெள்ளுதமிழ் விரிபுனற் காவிரித் திருநாட சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (கக)

வாராட்டு தடமுலைப் பாலொழுகி வழிவதென மணிமுறுவல் நிலவுகாலும், மழலைவாய் முத்துண்டு முச்சிமோந்துந் திரு மடித்தலத் தினிலிருத்திப்,—பாராட்டி யுந்தமது கண்மணிப் பாவைநின் படிவமா கக்காட்டியிப், பாலரொடும் விளையா டெனப்பணித் துந்தங்கள் பார்வைகளி யாடச்செயுந்,—தாராட்டு மதிமுடித் திராத வினைதீர்த்த தம்பிரானுந்தம்பிரான், தழலுருவி லொருபாதி குளிரவொரு புறநின்ற தையலு மகியும்வைத்துச்,—சீராட்டி விளையாடு சேனுபதிக்கடவுள் சிறுதே ருருட்டியருளே, திருவளர வளர்கந்த புரிவள ரிளங்குமர சிறுதே ருருட்டியருளே. (உ0)

உ

குகமயம்

சேந்தனார் அருளிச்செய்த

திருவிசைப்பா

(ஒன்பதாந் திருமுறை)

திருவிடைக்கழி

பண் - பஞ்சமம்

மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம் வவ்வினான் மலைமகள் மதலை, மேலுலாந் தேவர் குலமுழு தாளுங் குமரவேள் வள்ளிதன் மணாளன், சேலுலாங் கழனித் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த னென்னுமென் மெல்லிய லிவளே. (க)

இவளைவா ரிளமென் கொங்கைபீர் பொங்க எழில்கவர்ந் தானிளங் காளை, கவளமா கரிமேற் கவரிசூழ் குடைக்கீழ்க் கனகக்குன் றெனவருங் கள்வன், திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, குவளைமா மலர்க்கண் நங்கையா னைக்குங் குழகன்நல் லழகன்நங் கோவே.

கோவினைப் பவளக் குழமணக் கோலக் குழாங்கள்சூழ் கோழிவெல் கொடியோன், காவல்நற் சேனையென் னக்காப் பவனென் பொன்னை மேகலை கவர்வானே, தேவினற் றலைவன் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, தூவிநற் பீலி மாமயி லூருஞ் சுப்பிர மண்ணியன் றானே. (௩)

தானமர் பொருது வானவர் சேனை மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன், மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை மறைநிறை சட்டறம் வளரத், தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, கோனமர் கூத்தன் குலஇளங் களிறென் கொடிக்கிடர் பயப்பதுங் குணமே. (௪)

குணமணிக் குருளைக் கொவ்வையாய் மடந்தை படுமிடர் குறிக்கொளா தழகோ, மணமணி மறையோர் வானவர் வைய முய்யமற் றடியனேன் வாழத், திணமணி மாடத் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன் கணபதி பின்னிளங் கிளையே. (௫)

இளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட ஆண்டகை கேடில்வேற் செல்வன், வளையிளம் பிறைச்செஞ் சடையரன் மதலை கார்நிற மால்திரு மருகன், இளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, முளையிளங் களிறென் மொய்குழற் சிறுமிக் கருளுங்கொன் முருகவேள் பரிந்தே. (௬)

பரிந்தசெஞ் சுடரோ பரிதியோ மின்னோ பவளத்தின் குழவியோ பசும்பொன், சொரிந்தசிந் தூரமோ தூமணித் திரளோ சுந்தரத் தரசிது வென்னத், தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, வரிந்த வெஞ் சிலைக்கை மைந்தனை யஞ்சொல் மையல்கொண் டையுறும் வகையே. (௭)

வகைமிகு மசுரர் மாளவந் தழிஞை வானமர் விளைத்த தா ளாளன், புகைமிகு மனலிற் புரம்பொடி படுத்த பொன்

மலை வில்லிதன் புதல்வன், திசைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, தொகைமிகு நாமத் தவன்றிரு வடிக்கென் றுடியிடை மடல்தொடங் கினளே.

தொடங்கினள் மடலென் றணிமுடித் தொங்கற் புற விதழாகிலு மருளான், இடங்கொளக் குறத்தி திறத்திலு மிறைவன் மறத்தொழில் வார்த்தையு முடையன், திடங் கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற் கீழ் நின்ற, மடங்கலை மலரும் பன்னிரு நயனத் தறுமுகத் தமுதினை மருண்டே. (௯)

மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப் பொழில் வளர் மகிழ்திருப் பிடவூர், வெருண்டமான் விழியார்க் கருள் செயா விடுமே விடலையே யெவர்க்குமெய் யன்பர், தெருண்ட டவை திகர்வாழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக் கண் ணுடைக் கோமளக் கொழுந்தே. (௧௦)

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத் தாய்மொழி யமரர்கோ மகனைச், செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன் வாய்ந்தசொல் லிவைசுவா மியையே, செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற, எழுங்கதி ரொளியை யேத்துவார் கேட்பா ரிடர் கெடு மாலுலா மனமே. (௧௧)

உ

குகமயம்

நக்கீரதேவர் அருளிச்செய்த

திருமுருகாற்றுப்படை

(பதினோராந் திருமுறை)

முதலாவது

திருப்பரங்குன்றம்

இணைக்குறளாசிரியப்பா

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்

பல்காசு நிரைத்த சில்கா ழல்குல்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த இணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியும் அறியா மரன்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்

பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதின் பிணர்மோட்
டுருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்தொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபே ருருவி னொருபே ரியாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்

கள்கமழ் நெய்த லூதி யெல்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரிய னதாஅன்று—

இரண்டாவது

திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டும் மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்
டைவே றுருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனன்னேர் பெழுதரு வாள்நிற முகனே
மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுகம்
ஆர்வல ரேத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே யொருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்

திங்கள் போலத் திசைவிளக் கும்மே யொருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே யாங்கம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்
ஆரந் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க் கேந்திய
தொருகை உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை
அங்குசங் கடாவ வொருகை யிருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப வொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே யதாஅன்று—

மூன்றாவது

திருவாவினன்குடி

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கு முருவினர் மானின்
உரிவை தைஇய வூன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்றம் நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புகப்
புகைமுகந் தன்ன மாசில் தூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்
றழலென வுயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
எருத்த மேறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
ஏமுறும் ஞாலந் தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி யசைதலு முரிய னதாஅன்று—

நான்காவது

திருவேரகம்

இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கில் நவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரிய னதாஅன்று—

ஐந்தாவது

குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர

விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை யணைத்த கூந்தல்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்குல் திளைப்ப வுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கிற் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதொ றாடலும் நின்றதன் பண்பே யதாஅன்று—

ஆறாவது
பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்

வேலன் தைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்புஞ்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடும் மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பி யைதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியன்நகர்
ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலு மறிந்த வாறே
ஆண்டாண் டாயினு மாகக் காண்டக

முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவன் அங்கை யேற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும் இசைபே ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையி னேத்தி யானாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனன் நின்னொடு

புரையுந ரில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்தோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
அஞ்ச லோம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருள்நிற முந்நீர் வளைஇய வுலகத்
தொருநீ யாகத் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த
தண்கம ழலரிறால் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்

கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலோ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

நேரிசை வெண்பா

குன்ற மெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய்என் உள்ளத் துறை. (க)

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல். (உ)

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
துளைத்தவே லுண்டே துணை. (ங)

இன்ன மொருகா லெனதிடும்பைக் குன்றுக்கும்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்

பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். (ச)

உன்னை யொழிய வொருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரை யான் பின்செல்லேன்—பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. (ரு)

அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன். (சு)

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். (எ)

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி. (அ)

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். (கூ)

நக்கீரர் தாம்உரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறும் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான்நினைத்த எல்லாம் தரும். (கO)

உ

குகமயம்

சிதம்பரசுவாமிகள் அருளிச்செய்த

திருப்போரூர் சந்நிதிமுறை

பிள்ளைத்தமிழ்

செங்கீரைப் பருவம்

மும்மையுல கெங்கும் பரந்தொளி பரப்பிடு முதற்பரை யெடுத்த ணைத்து, மூதருட் புனிதநீர் நிறையஆட் டிப் பெருமை மொய்த்தநித் தியவா டையான்,—மெய்ம்முழுது மொத்தியிரு வேறற்ற வத்துவித வெண்ணீ றணிந்து மிளிரும், வீறுபூ ரணநிலப் பொட்டுமிட் டுப்பெரிய மெய்ஞ்ஞான தீப தட்டால்,—அம்மருவு மாலத்தி சுற்றிமற் றிச்சையுட னைஞா னங்கிரி யையென், றருள்செவிலி யாயரங் கருகிலுற வாறு றகன்றசிவ வாரி யிலெழுஞ்,—செம்மையா ரமுதம் புகட்டவள ருங்குழவி செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவரு குமரசர வணமுருக செங்கீரை யாடி யருளே. (க)

அஞ்சக் கரப்பரத் தொட்டிலிற் சதுர்வேத மானவட மொருநா லையும், ஆதியுட னிச்சைஞா னங்கிரியை நாமமுற் றருள்வளர்ந் தொளிர்சத்திகள்,—தஞ்சக் கரங்கொடு பிடித் தங் கசைத்திடத் தருபரையு மாதி சிவனுந், தாமுள மகிழ்ந்துறச் சோமனென நிலவுபொழி தவளயா னைக்கடவுளும்,—விஞ்சக் கரம்புனையு முதல்வர்பதி னொருவரும் விபுதர்களு மரிபிரமரும், வேணிமுனி வருமருள் ஞானமுனி

வராதி வியனுலக ரும்பரவவே,—செஞ்சக் கரப்பரிதி யெனநிலவு போரூர செங்கீரை யாடியருளே, திமிரமல மகல வரு குமரசர வணமுருக செங்கீரை யாடியருளே. (உ)

தாற் பருவம்

கஞ்சனை யன்று முனிந்து சிவந்தருள் கையாய் தாலேலோ, காமனை வென்றவர் தோளி லுலாவிய காலாய் தாலேலோ,—மஞ்சன் மகன்கன வின்சொல் வழங்கிய வாயாய் தாலேலோ, மஞ்சள் வடஞ்செறி குஞ்சரி கொங்கை கொள் மார்பா தாலேலோ,—விஞ்சுறு மன்பினர் பந்தனை கொன்றொளிர் விழியாய் தாலேலோ, வேடுவர் மங்கை யுளங் குடி தங்கிய மெய்யாய் தாலேலோ,—தஞ்சென வந்தவ ருஞ் சிடு சமரபு ராதிப தாலேலோ, சரவண பவனே குரவணி தருசண் முகனே தாலேலோ. (௩)

சப்பாணிப் பருவம்

குலிசக் குழுச்சுலவு பூனதக் கிம்புரிக் கோடு நாலுடைய வெள்ளைக், குஞ்சரக் கும்பமிசை கொட்டல்போ லச்சிவன் குவவுப் புயங்கொட் டல்போல்,—மலைபெற்ற பைம்பிடிப் பாலுண்டு முத்தமிழ் மதம்பொழிபு மந்தநாளின், மன்னுதத் துவமணியின் மும்மைப் பதங்களை வகுத்தறி வுறுத்து முறை போற்,—கலகப் பிணக்குடைச் சமயப் பெரும்பறவை கடியு மொரு கருவி யதுபோற், கருதரிய பதிமுதல் திரிபொருளு நிசமெனக் கைக்குறிப் பறிவித் தல்போல்,—தலைமைத் தமிழ்ச்சங்க மளவிட்ட விரகருக சப்பாணி கொட்டி யருளே, தடமலையை நிகர்கரிகள் திரிசமர புரிமுருக சப்பாணி கொட்டி யருளே. (ச)

முத்தப் பருவம்

பூவே பூவிற் பரிமள மேயப் பூநிறை சுவைநறவே, பொங்கும் கடலே கடலி லுதித்தெழு புனிதத் தெள்ள முதே,—காவே காவிற் கொஞ்சும் பஞ்ச வனக்கட வுட் கிளியே, கண்ணே கண்ணுறு பாவாய் பூவாய் கனியே கனி ரசமே,—தேவே தேவர்சி ரோமணி யேயென் சீருயி ரேயுயி ரிற், செம்பொரு ளேயரு ளேமுழு மணியே மணியிற் றேசி கமே,—மூவா மறையே மறையின் பொருளே முத்தந் தந் தருளே, முத்தமிழ் நற்சம ரப்பதி நாயக முத்தந் தந்தருளே.

வருகைப் பருவம்

பூதம் புலன்பொறிகள் கரணங் குணம்பகுதி புகலரு கலாதிசுத்தம், பொருவிலிரு மாயையுங் காணவரு மாணவப் பொங்கிருளு மூடுருவியே,—பேதங் கலந்துயிர்ப் போதங் கலந்துகலை பேசொணு நோமை வெளியாய்ப், பேரா யிரங் கோடி சூரியரு மட்கப் பிறங்கியெழு ஞானவொளியாய்,— ஏதங் கடந்துட் புறம்பாகி யாவைக்கு மின்பபரி பூரண மதாய், இலகருட் சத்தியே சத்தியா கக்கையி லெடுத்தஞா னச்சேவகா,—மாதர் கனங்கண்மும் மாரிபொழி போரூர மாயூர குகவருகவே, மலிபுவன முழுவதுங் கிடுகிடென நொடியில்வலம் வருகந்த வேள்வருகவே. (சு)

வேறு

கருத்தே புகுந்து கதிகாட்டுங் கண்ணே வருக மெய்ஞ் ஞானக், கரும்பே வருக கருணைபொழி காரே வருக ஆனந் தப்,—பெருக்கே வருக யாங்கள்பெறும் பேறே வருக மறை சொல்கிளிப், பிள்ளாய் வருக பிறங்கு தெய்வப் பெருமாள் வருக குறமடந்தை,—தருக்கே வருக மிடியகற்றுந் தருவே

வருக மன்பதைக்கோர், தஞ்சேவருக எமையளிக்குந் தாயே வருக பவப்பிணிக்கு,—மருந்தே வருக சமரபுரி வாழ்வே வருக வருகவே, மறையின் சிரமெய்ப் பொருளான வள்ளல் வருக வருகவே. (எ)

அம்புலிப் பருவம்

மயிலுமயி லுங்கொண்டு வன்பகை தணிக்கலாம் மலரடித் தோணி கொண்டுன், மாறுத பவசலதி யேழுங் கடக்கலாம் வானுலகு தொழவாழலாம்,—வெயிலொளியு நிகரலவெனப்புகல மெய்ஞ்ஞான மிக்கவொளி பெற்றுய்யலாம், வீடகத் துலையா திருந்தமு தருந்தலா மிகுதுகட் சிறைகடியலாங்,—குயிலனைய மொழியார் முகத்தினுக் கொப்பெனக் கூறுத பெருமை யுறலாங், கொடியகய நோயகன் றெப்பொழுது மொல்காத குலிசமென வடிவுபெறலாம்,—மயிலை முளரிக்கரங் கொண்டசே வகனுடன் அம்புலீ யாடவாவே, அருமறையி னெறிநிலவு சமரபுரி முருகனுடன் அம்புலீ யாடவாவே. (அ)

சிற்றிற் பருவம்

தேமாங் கனியி னடுப்பமைத்துத் திகழூன் கழிந்த வலம்புரியிற், செந்தே னுலைப்பெய் தரவீன்ற செழுமா மணி வெங் கனல்மூட்டிப்,—பூமா தளையின் விதையரிசி புகட்டிச் சமைத்துக் கதலிமடற், பொங்கப் பிழியு மதன்கனியும் பொருந்த வளவிக் கறியட்டுக்,—காமா தவிப்பூம் பந்தரிடைக் கயற்கண் ணுய மிழைத்தவண்டல், கருதும் புவன கோடியெல்லாங் கரந்தும் படைத்துங் காக்குமொரு,—சீமா னுனக்கோ ரிலக்கோசொல் சிறியேஞ் சிற்றிற் சிதையேலே, தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றிற் சிதையேலே. (கூ)

விதையா யிருக்குமைந் தெழுத்தும் வேதா கமமு முத் தமிழும், விளங்குஞ் சரியா திகள்நான்கும் வீறு கியமெய்ச் சிவமதமுஞ்,—சுதையா தரிக்குந் திருநீறுஞ் சோதி நயனத் திருமணியுந், துகள்தீர் பத்தி விதிநெறியின் தொடர்புஞ் செடி தீர் மெய்யடியார்,—இதயா லயத்தைப் பிரியாதாங் கிருள்தீர் ஞான மணிவிளக்கும், இலங்கு மவுனந் துளும்பாத இன்ப வளனுஞ் சந்ததமுஞ்,—சிதையா தளிக்கு மோரிறையே சிறி யேஞ் சிற்றில் சிதையேலே, தேரூர் வீதிப் போரூரா சிறி யேஞ் சிற்றில் சிதையேலே. (கo)

அடியார் நிமலத் திருவகத்து ளன்பு பொறுமை யவா வறுத்தல், அடுப்பாங் கமைத்து மலக்காட்டத் ததிக ஞானக் கனல்மூட்டி,—மடியா திருந்த வுயிர்க்கலசம் வழிய அருட்பே ருலைவார்த்து, மாறாப் பெருமைச் சிவானந்த மதுரச் சோறு தினம்பொங்கி,—விடியாச் சீவ போதஇருள் வீய மவுனச் சுடர்விளக்கு, விளக்கி யிருந்த படியிருந்து மேலாஞ் சிற்றில் விளையாடுஞ்,—செடிதீ ரகத்தோர் புகழ் வாலை சிறுவா சிற்றில் சிதையேலே, தேரூர் வீதிப் போரூரா சிறியேஞ் சிற்றில் சிதையேலே. (கக)

சிறுபறைப் பருவம்

ஆறுசம யக்கடவுள் வேறுவே றின்றியா னொருவனே யங்கங்கிருந், தன்பர்க்கு முத்திதரு வித்தென்றி யாவர்க்கு மறிவித்த வதன மணியே,—வீறசுரர் துஞ்சவெஞ் சிறை விண்டு வானவர்கள் விண்ணகத் தமுதருந்த, வெற்றிமுர சன் றுனது சேனைவா ரிதியிடை வியப்புற முழங்கு முறை போல்,—மாறுபடு காமாதி வெம்படை கடுஞ்சிட மலச்சிறை கழன்று ஞான, மாவிண்ண கத்திருந் தானந்த வமுதெனது வாய்மடுத் துண்ண அறிவில்,—தேறுமறை நாதமென நினது

முளா ரிக்கரச் சிறுபறை முழக்கி யருளே, செறிகலப மயில் முதுகி னுதயசின் மயதூய சிறுபறை முழக்கியருளே. (கஉ)

சிறுதேர்ப் பருவம்

உலகினொடு சரவசர மெவையுமா யொன்றினொடு மொரு பற் றிலாத பொருளாய், உறுமறிவை யறிவிடத் தெழுகின்ற சிற்றசைவி னுயிருலகு மயலில் பரமும்,—இலகுமவை யெங் ஙன மெனிற்கருது மறிவொன்ற தெழுநினைவு சுட்டு பொரு ளென், றிவையோ ரிரண்டையு மிணைத்தும் பிரித்து மியக்கி வரு பொருளொன்றுமாங்,—கலகமுறு மந்தநிலை யின்றுகின் முப்பொருளு மின்று பரகதியு மிதுவே, காணென்று கடை யேனை வாவென்று முடிமீது கஞ்சமல ரடிதரித்தென்,—சிலை மனங் கனிசெய்த குமரசற் குரவனே சிறுதே ருருட்டி யருளே, சிமயமொய்த் திடுமிமய மயில்வயிற் றுதயமணி சிறுதே ருருட்டி யருளே. (கங)

அலங்காரம்

எல்லார்க்கு மேலவன் நீயென் றறிந்துனை யேத்தியன்பாய்ப்
பொல்லாக் கருமலந் தீர்ந்தான் பொதியப் புகழ்முனிவன்
சொல்லாற் புனைதொங்கல் நக்கீரன் சாத்தித் துனிகடந்தான்
நல்லார்க் குநல்ல வனேசம ராபுரி நாயகனே. (க)

கொங்கண ராரிய ரொட்டியர் கோசலர் குச்சரராஞ்
சிங்களர் சோனகர் வங்காள ரீழர் தெலுங்கர் கொங்கர்
அங்கர் கலிங்கர் கன்னடர் துருக்க ரனைவருமே
தங்கள்தங் கட்கிறை நீயென்பர் போரிச் சரவணனே. (உ)

விருந்துண்டு பின்னைக் குபசாரஞ் செய்யும் விதத்தினைத்துப்
பொருந்துஞ் சரோருகத் தேனுண்டு முத்தமிழ் போரியிலோர்

மருந்துண் டதன்பெயர் செவ்வே ளஃதென் மலப்பிணியுந்
திருந்து முடற்பிணி தன்னையும் போக்கிடுஞ் சித்தமிதே. (ங)

வண்டுகிண் டக்கஞ்சம் விண்டுதண் தேன்சிந்த வால்வளைகள்
கண்டயின் றின்புறும் போரூர் முருகன் கழலிணைக்கே
தொண்டுவந் தின்புறு வோர்பாத தாமரைத் தூளென்சென்னி
கொண்டுவந் தேன்மலம் விண்டேன் பரகதி கூடினனே. (ச)

ஏதங் கருதினர் சென்மினென் றேயு மிதங்கருதும்
போதஞ் சிறந்தவர் வம்மினென் றேயும் புகல்வனபோல்
வாதஞ் செறியக் கொடியாடும் போரி வரதன்றண்டை
நாதங்கள் யோகியர் யோகினிற் காண்குறு நாதங்களே. (ரு)

மதிகொண்ட பூச்சக்ர வாளக் குடையின் வருநிழற்கீழ்த்
துதிகொண்ட யானைப் பிடர்மேல் வருமச் சுகந்தனினும்
நதிகொண்ட பேரன்பி னுற்போரி வேலனை நண்ணியின்பக்
கதிகொண்ட மேலவர் கால்தலை தாங்கல் கனசுகமே. (சு)

அளகா புரியன்ன பட்டணத் தேசுறை யால்வனைந்த
களவார் முகில்படி மாடத்தி னூடு களித்தலினும்
புளகா டவியெழ மெய்ப்போரி வேலனைப் போற்றியுய்வார்
வளவார் புறந்திண்ணை வைகுத லேதமின் மாசுகமே. (எ)

ஆறு சமயருந் தம்மிலொவ் வாதிங் கலைவதென்னே
தேறு மறிவின ரெல்லா மறிந்துந் தெளிந்திலரே
பேறு தருந்தெய்வம் யாவைக்கும் யான்பெருந் தேவனென்றே
வீறு முகங்கொண்டு போரூர் முருகன் விளக்கியதே. (அ)

வேதனெங் கேயவன் றாதையெங் கேவிண்ணில் நண்ணுபுரு
கூதனெங் கேமிகு தேவரெங் கேகுறை யாததவப்
போதரெங் கேயற மாதியெங் கேதிருப் போரியில்வாழ்
நாதனெங் கோனவ ரைப்போலச் சூரையு காடிடிலே. (கூ)

அஞ்ஞா னத்தாலடி யேன்பிழை செய்யினு மாரருள்
சேர், மெய்ஞ்ஞானத் தாய்பொறுத் தாட்கொள்ள வேண்டும்
வியன்மறைதேர், செஞ்ஞானத் தார்புகழ் போரூர் முருக
செகமுயிராம், பொய்ஞ்ஞானக் கூட்டத்துக் குட்புற ளுகிய
பூரணனே. (கo)

நெஞ்சைக் கலக்குறுஞ் சேலோ ரிரண்டுடை நேரிழையார்
வஞ்சக் கலவிமெய் யென்றே மயங்கினை வன்னெஞ்சமே
துஞ்சற்கும் வந்து பிறத்தற்கு மேதது சொற்கதிசேர்ந்
துஞ்சற்கு நீதிருப் போரூர்க் குகனை யுறப்பணியே. (கக)

கொலையாதி செய்தவ ராயினு மன்பு குணம்பொறுமை
இலையா முளத்தின ராயினும் போரி யிசைந்துகுண
மலைபோ லிருந்த வடிவே லனைவந்து வாழ்த்தினரேல்
தொலையாமெய்ஞ் ஞான மடைவார்முன் மேவுந் துயரிலரே.

இமையாக் கருங்கண் முலையான மாதரை யெண்ணியெண்ணிச்
சுமையாகப் பாவஞ் சுமக்குநெஞ் சேயிது துன்புகண்டாய்
சமையாதி யாறு முடையோர்க்கு வீடு தரும்பெருமான்
நமையாட்கொள் போரிக் குமரேசன் சேவடி நாடின்பமே.

நன்மை நினைத்துன் திருவடி சேர நயக்குமென்னைப்[னேன்
புன்மை நினைத்துளங் கொண்டேகநொந்தனன்பொய்ம்மையி
மும்மை யளிக்குறு மின்ப னம்போரி முருகப்பிரான்
செம்மை யளிக்கும் நினைவினி வேண்டுஞ் சிறியனுக்கே. (கச)

மெய்வேடம் பூண்டவர்க் குள்ளும் புறனும் விளங்குபிரான்
பொய்வேடம் பூண்டன னென்றாலுங் காத்தனை பூங்கணையால்
எய்வேட னல்வருந் தாதெனை யாளினி யேய்ந்ததினை [டலே.
கொய்வேட மானை மணந்தோய்தென்போரிக்குணக்கொண்

அருண கிரிப்பெயர் மெய்ஞ்ஞானநாதன்சொல்லால்வனைந்த
பொருளை நதிக்கிரி யான்புகழ் மாலை புனைபுயனே [தோ
கருணை மிகுத்தென்னை யாண்டாய்க்கு மீண்டுகைம் மாறுள
தருண வசத்தின னேசம ராபுரிச் சண்முகனே. (க௬)

மாலோன் விருந்தையை யுண்டாக்கிக் கொண்டிலன் மாமலரோன்
மேலான நன்சிர மொன்றாக்கிக் கொண்டிலன் மீதுயர்ந்த
நாலா மறைபுகழ் போரூரன் சம்பந்த நாமங்கொண்டே
நூலா மிடைமயி லாக்கினன் என்னை நொடியினிலே. (க௭)

உள்ளுறு புன்னினை வெல்லா மொழிந்திங் குணர்வரிய
கள்ளிரு ளன்ன அஞ்ஞான முந் தீர்ந்து நலனுதவுந்
தெள்ளிய பேரரு ளூடே கலந்தின்பு சேர்ந்திருப்பக்
கள்ளநெஞ் சேற்கும்வருமோ தென்போரியங் காங்கெயனே.

எல்லாப் பொருள்களுந் தானாகித்தானென்றி லெய்வதின்றாய்ச்
சொல்லாற் கருத்ததனாற் சென்று கூடருஞ் சோதியதா
மல்லா ரணப்பொருள் நாயேற்கு மீய மதித்திகொல்லோ
நல்லார்க் கினிய குகனேதென் போரியென் னாயகனே. (க௯)

எண்ணிய எண்ணிய வாறே சிறியனுக் கீந்தருளும்
புண்ணியனேநின் மகிமையையோர்ந்திலன்பொய்யவனேன்
கண்ணுறு மாமணி யேகருத் தூறுங் கனிரசமே
தண்ணளி மாமுகி லேபோரி மேவிய சண்முகனே. (௨௦)

எண்ணிலி காலத்தின் பின்னரிக் காய மினிதளித்தாய்
நண்ணுறு மீதினு மெய்ப்பத்தி யீந்திலை நாயடியேன்
பண்ணிய பாவமென் றேகும் பரகதி யென்றடைவேன்
விண்ணுறு தேவருஞ் சூழ்போரி வாழ்கின்ற வேலவனே. ()

மாலை

இல்லறத்தா னல்லே னியற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லே னுயினேன் - சொல்லறத்தின்
ஒன்றேனு மில்லே னுயர்ந்ததிருப் போரூரா
என்றேநா னீடேறு வேன். (௧)

இன்போ ரனுவா யிடரதற்கு மாமலையாம்
புன்போகம் வேண்டிப் புலம்பாதே—யென்போடே
உள்ள முருகவரு மொண்போரூ ரையனருள்
வெள்ளமுற நெஞ்சே விரும்பு. (௨)

மெய்ப்பொருளா நின்னை விரும்பியின்ப மேவாது
பொய்ப்பொருளை நாடியிடர்ப் போந்தேனைச்—செப்பரிய
மட்டழகார் சோலை மலிந்ததிருப் போரூரிற்
கட்டழகா காத்தாள் கடன். (௩)

இடர்களையு மின்பக் கரும்பை யெமது
தொடர்பிறவி நீக்குந் துணையைத்—தொடர்பாகி
உள்ளும் புறம்பு மொளிவீசும் போரூரில்
தெள்ளுமணி யைநெஞ்சே சேர். (௪)

பொருப்பெனவே பஞ்சின் பொதியெனினுஞ் சின்ன
நெருப்பணுகின் நீறுரு மாப்போல்—விருப்பமுடன்
உன்னைத் தொடர்வார்க் குறுபவநோய் போரூரா
பின்னைத் தொடரா பிறந்து. (௫)

கண்ணிற் கருமணியே கற்பகமே கற்றோர்கள்
உண்ணிற்குமோரொளியே யோர்பொருளே-யெண்ணிற்கும்
போரூ ரிறையே புனிதநிறை யானந்தச்
சீரூரில் நாயேனைச் சேர். (௬)

வேல்கண்டேன் தோளில் வியன்சதங்கை மொய்த்திருந்த
கால்கண்டே னாறுமுகங் கண்டேனே—நீல்கொண்ட
மாயூரங் கண்டேன் வளமைதரு போரூரிற்
போயூரங் கண்டேன் புகுந்து. (எ)

தாயா மெனக்குரிய தாதையாஞ் சற்குருவாந்
தேயாக் கருணைபொழி தெய்வமாம்—மாயப்
பொருள்நீக்கு மன்பர் புனிதவீ டேற
இருள்நீக்கும் போரூ ரிறை. (அ)

கேட்டதெல்லாம் பாலிக்குங் கேடிலாத் தாதாவும்
வீட்டுநெறி காட்டும் வியன்குருவும்—நாட்டமென
உண்ணின்று நாயேற் கொளிகாட்டுஞ் சிற்பரனும்
எண்ணின்ற போரூ ரிறை. (கூ)

மூவாசை கொண்டு முசிக்குநெஞ்சே போரூரில்
தேவாசை கொள்ளத் தெரியாதோ—தேவாசை
கொண்டாயேல் நந்துங் குறைகளெல்லா மிக்கணமே
விண்டாயே கண்டாயே வீடு. (கo)

பேய்போந் துயரம்போம் பித்தம்போம் போகாத
நோய்போம் மிடிபோ நுவலுங்கால்—தாய்போல
நன்னிதியைப் போல நயந்ததிருப் போரூரன்
சந்நிதியைக் கண்டளவே தான். (கக)

குமரா நமாவென்று கூறினோ ரோர்கால்
அமரா வதியாள்வ ரன்றி—யமராசன்
கைபுகுதார் போரூரன் கால்புகுவார் தாயுதரப்
பைபுகுதார் சேரார் பயம். (கஉ)

அம்புலியே போரூர்வந் தாறுமுகங் கண்டாயோ
நம்புமடி யார்சபையை நண்ணினையோ—எம்பரனைப்

பண்ணளியாற் பாடினையோ பாற்கடல்போ லேவிளங்குந்
தண்ணளிநிற் கேதுகாண் சாற்று. (கங)

ஆணிப் பொனென்கோ அருளாழி தானென்கோ
மாணிக்க மென்கோ மதியென்கோ—பேணிப்
பணிவா ரிருள்போக்கும் பானுவென்கோ போரூர்க்
கணியாகுந் தெய்வத்தை யான். (கச)

எத்திக்குந் தானா யிருந்தடியே னுள்ளத்தே
தித்திக்குந் தேனளிக்குஞ் செட்டியாங்—கொத்தி
அரவமணிப் பைதூக்கி யாடு மயிலேறிக்
குரவமணி போரூர்க் குகன். (கரு)

அன்புந் தருநல் லருளாழி யுந்தரும்பே
ரின்புந் தருமெண் ணியதருமே—மன்பதையைக்
காக்கும்போ ரூரான் கடையேனைத் தன்னடியான்
ஆக்கும்போ ரூரா னறிந்து. (கசு)

நோவுரை யானெம்மை நோவக்கண் பார்த்திடான்
சாவ நினையான் தளரவிடான்—பாவனைய
சொல்வாய்க் குறத்தி துணைபிரியாப் போரூரன்
நல்வாய்ப் பரையனெஞ்சே நாடு. (கஎ)

ஆசையு மன்பு மபிமா னமுமுனது
பூசையிலே வைக்காது பொய்க்காளாய்—பேசரிய
பெண்ணாசை யாகி பிடித்துழன்றேன் போரூரா
எண்ணாது நின்னை யிருந்து. (கஅ)

கைவிட்டால் நாயேனைக் காப்பா ரொருவரில்லை
பொய்விட்டார் போற்றும் புனிதனே—மையிட்ட
கண்ணா ரிருவர் கலந்தபுயத் தழகா
தண்ணார்போ ரூரா தரித்து. (கக)

எப்போது மென்முடியுன் இன்பத் திருப்பாத
மெய்ப்போதின் கீழிருக்க வேண்டுமே—மெய்ப்போத
வேதா வணங்கவரும் வித்தகா போரூரி
னூதா மயில்வா கனே. (உ௦)

உண்ணாத போகமில்லை யுற்பவியாக் காலமில்லை
நண்ணாத தேகமில்லை நாயினேம்—உள்நாடிப்
பண்டுவந்த துன்பமறப் பார்தொழுபோ ரூரானைக்
கண்டுவந்து நெஞ்சே கருது. (உக)

ஆறு முகம்வாழி ஆறிரண்டு தோள்வாழி
தேறுபதம் வாழியிரு தேவிமார்—வீறுபுடை
வாழிவேல் வாழிமயில் வாழிபோ ரூரா
வாழி சகம்வாழி மகிழ்ந்து. (உஉ)

வண்ணத்தாழிசை

ஓதுங்கலை யாவும்மன மோடாது நிறுத்தி
யுன்பாத நிழற்கீழுற வுயர்நன்கென வோத
வாதஞ்சொலி யேதஞ்சொலி மனமோடு சுழன்ற
மதியின்றிய சிறியேனுனை வந்தண்டுவ தென்றோ
தீதின்றிய குறநாயகி சேருந்திரு மார்பா
சிவனார்தரு குமராவுமை சிறுவா அரிமருகா
தாதொன்றிய வனசத்தட மீதொன்றிய எகினந்
தண்மாலையில் வண்காவடை சமராபுரி யானே. (க)

எளியேனையொ ரடியானென இன்பத் திருவுள்ளத்
தெண்ணிச்சிறு நாயேனுள நண்ணச் சுகவாரிக்
களியேயுல கெங்கும் மிலைதல்லா திலையென்றே
காட்டிப்பின் மறைத்தாயென்கண் மாயம்மிலை தென்றே

அளியேயருள் வெளியேயுயி ரொளியே மறைமுடியின்
அஞ்சொற்புகழ் பஞ்சப்பிர ணவமேோதிய கிளியே
தளிரேயன கையார்மயி லெனவே நடமாடுஞ்
சசிவெண்சுதை மாடஞ்செறி சமராபுரி யானே. (உ)

மட்டுவிருத்தம்

ஆதரவா யடியவருக் கருள்சுரக்கும் ஐங்கரத்தோ னன்பு கூர்ந்து, மாதவமே யெனவழைத்துப் புயத்தணைக்கத் திருவுளத்து மகிழுங் கோவே, ஏதமுறு தடியேனைக் காத் தளிப்ப துன்கடனு மிசைப்ப தென்னே, போதமலர் கற் பகமே போரூர்வா ழாறுமுகப் புனித வேளே. (க)

உவமையறு பவசலதி கடத்தியிம்மா னிடப்பிறப்பி லுதிக்கச் செய்து, நவமருவு முனதுபத நாடவைத்தா யதை மறந்தே னுயி னேனே, கவலையெலா மற்றுனது திருவடிக்கீ ழிருக்கவினிக் கருணை செய்யாய், புவனைகர தலமணியே போரூர்வா ழாறுமுகப் புனித வேளே. (உ)

உளமர்கண்ட கனவினைப்போ லுரைப்பரிய சிவாநுபவ முணரா நின்ற, காமருளூா ளிகள்பரவு முனதுசே வடிநா யேன் காண்ப தென்றோ, தேமருவு மலர்க்கூந்தல் தெய்வ இளம் பிடிநோக்கஞ் சேருந் தோளாய், பூமகளுக் கணிகாட் டும் போரூர்வா ழாறுமுகப் புனித வேளே. (௩)

பெருங்கழி நெடில் விருத்தம்

சோம கிரணப் பெருங்கருணை சுரந்த முகங்க ளோரா றுஞ், சுருதி வழுத்தும் பன்னிரண்டு தோளும்நீபத் தொடை மார்பும்,—காமர் நிறச்செம் பட்டாடைக் காட்சி மருங்குஞ் சிறுசதங்கை, கலித்த வுபயத் திருத்தாளுங் கடையேன் துதிக்கப் பணிப்பாயே,—சேம நிதியே சுரர்பதியே தெய் வத் தருவே மலர்மருவே, செறிபூ ரணமே யாரணமே சிறியே னுயிருக் கோருயிரே,—பூம னறியாப் பிரணவத் தின் பொருளைப் பகரும் பூங்கிளியே, போற்று மடியார்க் கோரருளே போரூர் முருகப் பெருமாளே. (க)

மறையா கமத்தின் நெறிப்படியே வணங்கு மவரி னொருவ னல்லேன், மனுபே ரன்பு தழைத்துநினை வந்திப் பாரி னொருவ னல்லேன்,—இறைவா நினது புரணசுக நேசித் தவரி னொருவ னல்லேன், நீசனேன்நின் திருப்பாத நிழற்கு முரித்தே னுவனோ,—சிறையார் தோகை மிசைத் தோன்றுந் தேவே யமரர் பணிகோவே, சிவனார் புயத்தி லணைத்தேந்துந் தெய்வக் குதலை மொழிக்குருந்தே,— பொறையா லுயர்ந்த பெரியோர்கள் புந்திச் சுவையாஞ் செந்தேனே, புனித நிறைந்த செவ்வேளே போரூர் முருகப் பெருமாளே. (உ)

எண்ணி லாத நெடுங்கால மெண்ணி லாத பலபிறவி, யெடுத்தே யிளைத்திங் கலைநீங்கி யிம்மா னிடத்தில் வந் துதித்து,—மண்ணின் வாழ்க்கை மெய்யாக மயங்கி யுழன்ற லடியேனுன், மாறுப் பெருமை தரும்பாத வனசத் துணையென் றடைவேனோ,—கண்ணின் மணியே யுயிர்க் களியே கருணைப் புயலே சுகக்கடலே, கச்சித்தா யுச்சியை மோந்து கண்ணோ டணைக்குந் திருத்தாளா,—புண்ணியோ

ரெண்ணிய கரும்பே பொழிமும் மதவா ரணமுகத்தோன், பொற்பார் துணையே யற்புதனே போரூர் முருகப் பெருமானே. (௩)

சீல மிகுந்த பத்திநெறி தினமு மாறு நடையினராய்ச், செலுத்தா நெறியிற் பொறிவழியிற் செல்லா திருந்த வுளத்தினராய்க்,—கோலஞ் சிறந்த படியேநற் குணமுஞ் சிறந்தோ ராகியுனைக், கூடு மடியார் போலெனையுங் குறித்தாட் கொண்டாய் நீயன்றோ,—நாலு வேதந் தொழுதேத்து நாத முடியிற் பேரொளியே, நம்பு மடியார்க் கின்ப மெல்லா நல்குந் தேவே கயவர்தமைப்,—போலுந் திரிந்தே னுளம் புகுந்த போதானந்தப் பெருங்கடலே, புவியீ டேற மயிலேறும் போரூர் முருகப் பெருமானே. (௪)

மன்ன ராவா ருறுசுகமும் வானோர் மகிழ்ந்து பெறுசுகமும், மணிப்பைந் நாகத் தவர்சுகமு மற்றை யோர்க ளடைசுகமும்,—பன்னு மிடத்திற் சிவத்தெழுந்த பரமா னந்த லேசமெனப், பகர்ந்தாய் குருவா யெழுந்தருளிப் படிறேன் மறந்திங் குழல்கின்றேன்,—கன்ன லெழுந்த தெளிசாறே கட்டுமாவின் றீங்கனியே, கதலிக் கனியே நற்பலவின் கனகச் சுளையே கதிமுளையே,—பொன்னம் பொருப்பே யென்விருப்பே போதச் சுகமே கிஞ்சுகமே, புரண வெளியே யுள்ளொளியே போரூர் முருகப் பெருமானே. (௫)

ஓசை புரிந்து நன்னூலா லுணரத் தகுவ வெலாமுணர்த்தி, யுறுபே ரருளா ரியனாகி யுபதேசங்கள் பல மொழிந்தீண்,—டாக மருவு முயிர்க்குயிரா யறியா தனயாவையு முணர்த்தி, யடியேன் றனையிங் காண்டு கொண்ட அருளுக்கோர் கைம்மா றுளதோ,—வாகை புனைவே லிறையோனே வழுத்து நாலு மறையோனே, வானோர்க் குறுசே

ஞபதியே மலய முனிவன் குருபதியே,—பூக மலிந்த செங் குலைக்காய்ப் புடையிற் சிகரக் கயல்பாயும், பொருவின் மதச் சூழல்செறி போரூர் முருகப் பெருமானே. (௬)

அலையி லாத சாகரம்போ லனிலஞ்சேரா விளக்கது போல், அருங்க லிரும்பொன் சமமாகி யான தராசின் நுனி யதுபோல்,—நிலையொன் றியநற் சமாதியுற்று நின்தாட் கம லத் தொழும்பிரச, நிறைவா ரிதியிற் புகுந்ததனில் நேசித் தடியே னிருப்பேனோ,—விலையின் மகுடத் திருமுடியாய் மிளிர்குண் டலங்கள் செறிகாதா, வியன்கே யூரத் திருத் தோளா விருஞ்சுருஞ் சதங்கை சூழ்தாளா, புலையுங் கொலையுங் களவு மில்லாப் புனிதத் தவத்தோர் தொழுதேத்தும், புராரி குமரா வுமைசிறுவா போரூர் முருகப் பெருமானே. (௭)

குயிற்பத்து

பற்பல் விதப்பூச் சோலை புகாதே பரிபூ ரணமா மேகச் சோலையில், எற்பெற நீயெந் நாளு மகிழ்ந்தங் கிதுவது வென் றொன் றையுநா டாமே, செப்பம தாய்நின் னையுநா டாமே சீரரு ளேவடி வாகி யிருந்து, குப்புகழ் போரூ ரப்பனை நாடிக் கூவாய் வரநீ கூவாய் குயிலே. (௧)

இன்றைக் கெனவுந் நாளைக் கெனவும் எண்ணேன் மயிலிறை யின்னமு தூட்டும், பொன்றப் படுசுக துன்புக முன்னிப் பூரிப் பொடுவாட் டங்க ளுறாதே, ஒன்றைக் கரு தியி தென்ன தெனாதே யுயர்கதி யின்பைக் கருதிக் கருதிக், குன்றைப் பொருதடு போரூ ரிறையைக் கூவாய் வரநீ கூவாய் குயிலே. (௨)

நிராசை யுடனரு ளேவடி வாயந் நின்மல னிருசே வடி நிழல் தங்கிப், புராதன மாய்நிக ழூறுமா னந்தப் பொங்குர சச்செங் கனிநனி துய்ப்பப், பராபர னேகுக னேமயி லோனே பண்ணவ னேவிண் ணவனே யென்று, குராவணி வோனைப் போரூ ரிறையைக் கூவாய் வரநீ கூவாய் குயிலே.

கிளிப்பத்து

எனையொரு பொருளா யுளமதனி லெண்ணியருள் பொழி யுஞ் சுகமுகிலைக்; கனைகட லமுதைச் செந்தேனைக் கன்னலை ரசதா ளிக்கனியை, நனைவழி பலவின் பொற்சுளையை நசை தரு கட்டுமாங் கனியைப், புனைமதில் சூழ்போ ரூரிறையைப் பூங்கிளி சொல்லுதி தீங்கறவே. (க)

ஆறு சரோருக முகனென்று மணிதிகழ் பன்னிரு புய னென்றும், பேறுத வும்பத யுகனென்றும் பெயர்வே லொளி ரும் கரனென்றுந், தேறுமுளத்தினர் வாழ்வென்றுந் தேவர் தமக்கொரு கோவென்றும், வீறுயர்போரூர் நாயகனை விளம் பாய் கிளியே கலங்காயே. (உ)

முருகா குமரா சரணென்றும் முதிரா வயதாய் சர ணென்றும், நிருபா திகனே சரணென்றும் நிமலா குகனே சரணென்றும், அருகா வொளியே சரணென்றும் அருளே பொருளே சரணென்றும், மருவார் பொழில்சூழ் போரூர் வாழ் மயிலோ னைக்கிளி புகல்வாயே. (ங)

இன்பக் கடலே சரணென்றும் எண்குண மலையே சர ணென்றும், அன்பர்க் கமுதே சரணென்றும் ஆருயிர் முதலே சரணென்றும், அன்புக் கறிவே சரணென்றும், வளர்பிர ணவமே சரணென்றுங், கொன்பெற் றுறுபோ ரூரிலைறயைக் கோலக்கிளியே யோதுவையே. (ச)

வண்டுவிடு தூது

தாதினைத் தேனொடுங் கூட்டியே சந்தனம் பூசிய வண்டுகாள், ஆதரித் தென்னைமு னுண்டவ னாறுமுகப் பெருமானுடன், பேதைமைப் பான்மைய ளாயினும் பிச்சியை யொத்தவ ளேனுமியான், மூதருட் பேரமு தாழிவாய் மூழ்கிடப் பேசுமின் நீவிரே. (க)

நீல நிறப்பொறி வண்டுகாள் நித்தலுங் கைதொழு வேனுமை, ஏல வுரைத்த மொழிகளை யெல்லா மயர்த்து விடாதுநீர், சால நிகழ்த்திடும் போரிவாழ் சண்முக வேலனுக் குங்களைப், போலு மெனக்குற வுண்டுகொல் பொங்கருள் றுங்களுக் கீவலே. (உ)

கட்டளைக்கலிப்பா

விண்ணி லேயெழு மிந்திர சாபத்தை மேக மின்னலை யொத்தெழு காயங்கள், எண்ணிலாத எடுத்திளைத் தேனை யென் றின்ப வாரியில் வைத்திளைப் பாற்றுவாய், கண்ணிலே கண்ட சித்தொளிக் காட்சியே கருத்தி லேகண்ட இன்பசந் தோடமே, தண்ணி லாமுடி வேணியர் செல்வமே சமர மாபுரிச் சண்முக வேலனே. (க)

காலன் செங்கட் கடாவினி லேறியே கயிறு வீசிப் பிடியா முனமெனை, வேலுஞ் செங்கையி லேந்தி மயில்மிசை விரைவில் வந்துவந் தஞ்சலென் றருளுவாய், ஆல முண்ட களத்த ரிடத்துறை யரிவை கொஞ்சுறக் கொஞ்சுபைங் கிள்ளையே, தாலம் பாளை மதுகருட மேந்திய சமர மாபுரிச் சண்முக வேலனே. (உ)

கொச்சகக் கலிப்பா

பாலுக்குள் வெண்ணெயெழு பான்மைபோ லென்னுளத்
சீலத்தை யெல்லாந் தெளிவிப்ப தெந்நாளோ [தின்
வேலுக் கரசே விறன்மா மயிற்கரசே
தாலத் தரசே சமரபுரி நாயகமே. (க)

காமர்குறப் பெண்மானுங் காமுறுதெய் வப்பிடியுங்
கோமளவீ ராறுபுயக் குன்றிலுறச் சேர்ப்போனே
ஓமெனும் வித்துள்ளே யுதித்ததரு வேயெனையுந்
தாமரைத்தாட் சேராய் சமரபுரி நாயகமே. (உ)

கும்பமுனிக் கின்பமெல்லாங் கொள்ளைகொள்ளத் தந்தருள்நீ
வம்பனேற் கின்பம் வழங்குவது முண்டாமோ
செம்பதுமக் காடலர்ந்த தேசுதரு பேரழகா
சம்புதவு மைந்தா சமரபுரி நாயகமே. (ந)

விருத்தக் கலித்துறை

அறிவொளியே யறிவோ ரமுதேபுவி யாதியெலாம்
பிறிவரு பூரணமே சுரரோது பெரும்பொருளே
பொறிவழி செலுமென் பிழைகுறி யாது பொறுத்தாளாய்
தறையுயிர் வாழ்தர நிலவிய சமரப் பதியானே. (க)

நல்லா ரல்லார் செய்தொழில் செய்யும் நாயடியேன்
எல்லாம் வல்லார் பதநின் பதமல ரென்றடைவேன்
தொல்லா ரணமுத லெல்லா மோது சுகாதீதா
சல்லாப விநோதத்தாய் சமரப் பதியானே. (உ)

உனலரு மன்பினர் நினையும் படிவம துடையோனே
நினைவு கடந்தவ ரறிவெழு சுகமாய் நிறைவோனே

எனையுமோ ரன்பின னெனவுந் திருவுள மெண்ணுதியோ
தனபதி யளகையில் நிலவிய சமரப் பதியானே. (ங)

வானவர் முனிவரர் பாதல ருலகர் வணங்கியசாம்
பூனத நூபுர வோசை முழங்குரு பொற்பாதா
ஞான பராவமு துண்குவ தென்றினி நாயடியேன்
தானவர் நூறிட வேல்விடு சமரப் பதியானே. (ச)

பெருங்கழி நெடில் விருத்தம்

விலகிய கலக விழிமட வார்த மென்முலைக் குவட்டிடை யிழிந்து, மிகுமய லாசை வெம்புலி பாய மெய்மறந் துனதருள் நினையாப்,—புலயிலி யிவனென் றெனையிக ழாதுன் புனித செஞ் சரோருக மிணைந்த, பொற்பினிற் றிகழு மற்புத பாதம் பொருந்திடத் திருந்தருள் புரியாய்,—பலகலை முழுது மறி தரு புலவ பரகதி நெறிதரு குரவ, பதகரை முடுகி யடுமொரு வீர பணிசுர ரெணியடை நிருப,—தலமதி விரவி வரவொரு தொனிசெய் தழைசிறைச் சேவலம் விருத, சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை குகனே. (க)

சிகரியி னுதய பரிதியின் மணிகள் திகழுறு மகுடமோ ராறுந், திரளுடு பதியின் முகங்களோ ராறுந் திருவிழி மலர்களீ ராறுங்,—ககனமு டுருவு கனகமால் வரையிற் கதித் தெழு புயங்க ளீராறுங், கடிகம ழுபய பதங்களு மெனது கருத்தினுற் றிருக்குநா ளுளதோ,—நிகரறு முரகன் முடி நெற நெறெனு நிகழ்வட வரைகிடு கிடென, நிலவிய வுலகை யொருநொடி யதனில்நிலைபெறவுலவுசீ ரடியாய்,—தகைபெறு குரவர் மடவர லியானை தந்தருள் மடவரல் கணவ, சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை குகனே. (உ)

அவகதி புகுது நினைவுட னியங்கி யடர்வுறு விடய மென் கடுவை, அயின்றயின் றநந்த நாளெலாங் கழித்த அறிவிலுன் மத்தனேன் றன்னைச்,—சிவகதிக் குரிய னெனத் தெளி வித்துத் திரிமல மயக்கவேர் களைந்து, திகழுறு மயல்சே ரிரும்புநீ யென்னைத் திருவடிச் சேர்க்குநா ளுளதோ,—கவனவாம் புரவி யேழுறப் பூண்ட கடிரதக் கடவுளுக் குடைய, கதிரெனத் தோன்று மயிலுடைக் குமர கந்தநந் தாமணி விளக்கே,—தவநதி பெருகுஞ் சடிலவா னந்தத் தண்கட லுதித்தவா ரமுதே, சததள கமல மருவிய வயல்சூழ் சமரமா நகருறை குகனே. (ங)

குறுங்கழி நெடில் விருத்தம்

உனதுதா யுலக சராசர மெவையு மொருங்குடன் பூத்தவ ளுந்தை, கனபரி புரண சுகத்தன்நின் தமையன் காரிய முதல்வன்நின் மாமன், வனசனு தியர்கள் பணிபத னிவர்கள் வளனெலா முனக்குரித் திதனால், வினவுசெல் வத்துட் செல்வன்நீ போரூர் வீறிவா ழாறுமா முகனே. (க)

அறுவகைத் தாயர் குடமுலை சுரப்ப அம்பிகை திருவுளங் களிப்ப, மறுவறு கங்கைத் தாய்நனி வாழ்த்தி வடிவெலாங் குளிர்ந்துபூ ரிப்ப, நறைகமழ் வனச மாமிகண் களிப்ப நடந்தவ ரெதிர்வரு குருந்தே, விறலுறு நினைவந் தடைந்தனன் போரூர் வீறிவா ழாறுமா முகனே. (உ)

ஓதியு முணர்ந்தும் பிறர்தமக் குரைத்து முளமுதற் றூனடங் காத, பேதையிற் பேதை யாரில ரென்ற பெரியவர் சொற்கிலக் கானேன், கோதறு மாறு கொடுமுடிப் பவளக் குன்றமொத் திலகுகட் டழகா, வேத கோடங்கள் முழங்கிய போரூர் வீறிவா ழாறுமா முகனே. (ங)

எங்குமென் சொரூப சச்சிதா னந்த விலகொளி யிருந்திடு மதனுள், தங்குபல் பொருள்கள் கானலிற் சலம்போற் றூழுறும் வேறிலை யென்றே, பொங்கருட் குருவாய் வந்துநீ யளித்தும் புலையனேன் மயங்குறு கின்றேன், வெங்கதிர் விலக்குந் தண்டலைப் போரூர் வீறிவா ழாறுமா முகனே.(ச)

காமவேள் கணையா லுளங்கலங் காதுன் கனைகழற் கமலத்தா ளிருந்த, சேமவா னந்த வாரிதி படிந்து சிறியனேன் வாழுநா ளுளதோ, பூமணம் வீசுங் கூந்தலங் கவுரி பொருப்பன தனத்தமு துண்டோ, ஓமெனும் பதத்தின் அருத்தமே போரூ ருத்தமா சத்திவே லவனே. (ரு)

நினதருட் பாத நினைதொறு மடியேன் நினைப்பொடு மாறுகொண் டெழுந்த, மனவழுக் கதனுல் வாடினே னதனை மாற்றிநின் னருள்சுரந் தளிப்பாய், கனைகடல் குமுறக் குலவரை யதிரக் கனவொலி கூவுசே வலனே, உனலருந் தவத்தோர் பரவிய போரூ ருத்தமா சத்திவே லவனே. (சு)

பித்தனே னெனினும் பேயனே னெனினும் பிழைபுரி பாவியே னெனினும், அத்தனே யெனைநீ யளிக்குதல் கடனே யறனெலா மோருருக் கொண்டோய், கொத்தலர் நீபத் தொடையணி மார்பா குமரநா யகவெனக் குறுதாய், ஒத்தவா முத்தர் பற்றிய போரூ ருத்தமா சத்திவே லவனே. (எ)

பயனில மொழிந்தும் பலதொழில் புரிந்தும் பரவையில் திரையென நினைந்துங், கயவரிற் பொழுது போக்குறு துனது கமலத்தாள் நினையவே தருவாய், இயலிசை யருணகிரிப்பெயர் நாதன் இயம்புபா மாலைசேர் புயத்தாய்,உயுநெறி யடியேற் குதவிய போரூ ருத்தமா சத்திவே லவனே. (அ)

ஒருபொரு ளிடத்தும் விழைவொடு வெகுளி யுறுதெலாஞ் சமமதாக் கண்டுன், திருவடி நிழற்கீ ழசைவற இருந்து சிறியனே னென்றினைப் பறுவேன், அருள்நனி சுரக்கும் பனிமலைப் பிறந்த அங்கொடி தந்தசெங் கனியே, தருணமாருத முருகனே போரூர்ச் சரவண பிரணவப் பொருளே.(௯)

மனவழுக் கனைத்து மாறிநின் மலமா மனத்தனாய் நசையின மறந்து, கனபரி புரண சுகக்கடல் படியுங் காலமுஞ் சிறியனேற் குளதோ, உனலரும் பொதியத் தூறுகுறு முனிவ னுளமகிழ்ந் திறைஞ்சுபொற் சரண, தனபதி யளகை வளனுறு போரூர்ச் சரவண பிரணவப் பொருளே. (௧௦)

நெஞ்சகத் துள்ளும் புறனுமாய் நிறைந்த நின்பரிபூரணம் நினைந்து, வஞ்சகச் சகப்பொய் யனைத்தையும் மறந்து வாழுநா ளெந்தநா ளடியேன், செஞ்சடைக் குழக னஞ்செவிக் கமுதாத் திகழ்மறை முடிவினைப் புகன்றோய், தஞ்செனப் பணிவோர்க் கருள்தரும் போரூர்ச் சரவண பிரணவப் பொருளே. (௧௧)

பரிதிபோல் ஞானச் சுடரொளி வீசும் பாழியங் களிற்றினுக் கிளையோய், சுருதியின் முடிவைச் சிறியனேற் களித்த சுந்தர மறப்பனோ அடியேன், அரிதுணர் பொருள்கள் நினதருளடைந்தோர்க் கரிதல என்பது மறிந்தே, கருதிய பொருள்கள் தருந்திருப் போரூர்க் காங்கெயா தேங்கொளி மணியே. (௧௨)

நதியின திருபாற் கரைகளில் திரிந்து நடைதளர்ந் துழன்றிடு பசுப்போல், மதிமருண் டுழன்ற சிறியனை யழைத்துன் மலர்ப்பதத் திருத்தியாண் டளித்தோய், அதிகநின் கருணைக் கடலினுக் குவமை யாதினை யெடுத்தினி துரைக்கேன்,

கதிதரு மறிஞர் பரவிய போரூர்க் காங்கெயா தேங்கொளி மணியே. (கங)

மனநினை வனைத்து மொழிந்துழு டறும்போய் மன்னு நின் னருளொளி புகுந்தாங், கினனிற வயிரக் கிரியென அசைவற் றிருக்குநா ளெந்நா ளடியேன், நனைமலர்க் கூந் தற் கவுரிகண் டுவப்ப நகைமுக மலர்ந்தெதிர் வருவோய், கனவினஞ் சுரந்து பொழிதிருப் போரூர்க் காங்கெயா தேங்கொளி மணியே. (கச)

உயிர்ப்பிணி தவிர்க்கும் மருத்துவ னென்கோ வுடற் பிணிக் கொருமருந் தென்கோ, மயக்குறு மனத்தின் னினை வெனும் பனியை மாற்றிய கதிரவ னென்கோ, வியப்புறு புரண சொரூபநின் னருளை யினையனே னேதெனப் புகல் கேன், கயத்துரி தரித்தோன் புதல்வனே போரூர்க் காங் கெயா தேங்கொளி மணியே. (கரு)

மாண்செறி யடியார் வேண்டிய வரங்கள் மாறிடா தளித்திடு முனைப்போற், காண்கிலே னொருதே மூன்றுல கிடத்துங் காட்சியாற் கேள்வியாற் றமியேன், சேண்படு முகிலான் மழைவரு வித்துச் சிற்றுயிர் காத்தினி தளித்தாய், கோண்படு சங்க முழங்குறு போரூர்க் குமரனே யமரர்நா யகனே. (கசு)

அறிவுதன் னினைவிற் கலந்துறு போதி லரும்பர முயிர்சக முளவாம், பிறிவிலவ் வறிவந் நினைவினை யகன்றூற் பேதாபே தங்களொன் றின்றி, நெறியுறத் தானே தன்னிடத் திருக்கு நிச்சய மென்றெனக் கிசைத்தான், பொறிமறு மார் பன் மருகவே ளெனையாள் போரிவா ழாறுமா முகனே.(கஎ)

பிணியுடல் வெறுக்கேன் பெண்சுக மறுக்கேன் பேணு மூறெணு றுக்கிலேன் நின்தாட், கணியநல் லடியார்க் கன்பு செய்திடிலேன் ஆதனேன் ஏதமென் றறுமே, கணிபடு நறும்பூஞ் சிறுகுவை யதனைக் கான்புலிக் குருளையென் றஞ்சி, மணிபடு மான்கன் றிரிதரு சாரல் மலிசம ராபுரிக் குகனே.

கட்டளைக் கலித்துறை

மறுமை குறித்த பயத்தாற் பணிபவர் மத்திமரே
சிறுமை குறித்துப் பணிவா ரதமர்கள் செப்புமிந்த
உறுமை குறித்தி லதன்பாயப் பணிபவ ருத்தமரே
பொறுமை குறித்தவர் சூழ்சம ராபுரிப் புண்ணியனே. (க)

நடிக்குமெய் யன்பரி னென்போ லிகள்நிற்க நம்பினர்க்கே
பிடிக்கு ளடங்கிடை யார்கட் செலாதுளம் பேணிநின்பொன்
அடிக்கு ளுருகுங் கண்ணீர்வார்ந் துரைதழுத் தங்கமெல்லாம்
பொடிக்குமு ரோமஞ் சமரா புரிவரு புண்ணியனே. (உ)

கோழிக் கொடியைநின் வேலை மயிலைக் குறித்தவரை
ஊழிக் கனலு மணுகா தெனினுனை யேயடைந்தேற்
காழிப் பவமு முளதோ அரிவைய ரப்புசந்தம்
பூழிக் குளுமணக் குஞ்சம ராபுரிப் புண்ணியனே. (ங)

முருகா வெனவுனை யோதுந் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வ மடைவார் வியாதி யடைந்துநையார்
ஒருகால முந்துன்ப மெய்தார் பரகதி யுற்றிடுவார்
பொருகால னுடு புகார்சம ராபுரிப் புண்ணியனே. (ச)

அருள்மேக மென்னகத் தூடெழு மானந்த வாரியுண்மைப்
பொருள்மா தவருளம் புக்குறை பூரணம் போதநல்குந்

தெருள்வாச வன்முதற் றேவரும்போற்றிய தெய்வசெஞ்சின்
மருள்மாசு தீர்க்குஞ் சமரா புரிவரு வானவனே. (௫)

விண்டலை கொண்டநின் சேவடிக் கன்புசெய் வித்தகரே
மண்டலை வாரிப் பவங்கடப் பார்மற்றை யோர்களெல்லாங்
கண்டலை மென்மொழி யார்கரு வாழி கடக்கறியார்
தண்டலை மண்டு சமரா புரிவரு சண்முகனே. (௬)

நாயேனுன் சேவடி வேண்டுகொ ளாது நலிபிணியால்
மாயாம லுன்னடி யென்றனைக் காத்தனை மற்றிதற்கோர்
பேயேன்பின் செய்யுங்கைம்மாறுள தோபெரி யாய்சிறியேன்
தாயே யெனதுற வேசம ராபுரிச் சண்முகனே. (௭)

நேரிசை வெண்பா

சும்மா இருவென நீசொல்லப் பொருளொன்றும்
அம்மா அறிந்திலமென் றன்றுரைத்த—எம்மான்
அருண கிரிநாத னநுபவநா யேற்குக்
கருணைபொழி போரூரா காட்டு. (௧)

உன்னடிமைக் கேவிரத முற்றசிறி யேன்மனமுன்
பொன்னடிமைக் காகாத பூணுமோ—நின்னடிமை
யாக்குதற்கும் போரூ ரணிநகராய் நாயேனைக்
காக்குதற்கு முன்றன் கடன். (௨)

ஆனந்தத் தேனிருக்கும் ஆறுமுகக் கற்பகமே
ஈனந்தீர் போத இரவியே—தேனுந்து
நீபத் தொடையாய் நிகழ்போரூ ரையாவென்
தாபத் திரயந் தவிர். (௩)

அடைக்கலப் பத்து

மணியே யனைவைங் கரற்கிளைய மன்னே பொன்னே வானமிர்தே, எணியே யிருவர் பணிந்தேத்து மீசனுவந்த சிறுமதலாய், நணியே யெனைவந் தாண்டுகொண்ட நாதா இனிநா யேனைவிடேல், அணியே சிறந்த போரூரா அடியே னுன்ற னடைக்கலமே. (க)

எளியேன் றனையோ ரன்பனென வன்றுகொண் டாண்டருள் செய்தோய், களியா லுனது புகழிகழ்ந்த கடையே னெனினும் விடேல்கண்டாய், வெளியே யொளியே யினனறிவே வேத நாலின் முடிமணியே, அளியா ரமிர்தே போரூரா அடியே னுன்ற னடைக்கலமே.

கண்ணின் மணியே யுயிர்க்குயிரே கரும்பின் சுவையே பெருந்தேனே, நண்ணுங் கதியே சுரர்பதியே நாதா அதிக சிவபோதா, எண்ணு மடியார் பெருவாழ்வே யென்று யகலு கியதேவே, அண்ணுங் கனியே போரூரா அடியே னுன்ற னடைக்கலமே. (ரு)

விருத்தக் கலித்துறை

மூதுணர் வொன்றும் வீடுற நண்ணு முனிவோர்காள்
பேதமை யுந்து நூல்களி னின்றும் பிறழாதீர்
மாதுமை மைந்தன் மான்மரு கன்றன் வளனீயும்
ஆதர வண்டும் போரியை வந்திங் கடைவீரே. (க)

ஊனை யிகழ்ந்து மூனை மறந்து முழல்வீர்காள்
மோன சுகஞ்சும் மாவரு மின்றென் மொழிநாடிக்
கானில் விலங்கு மாமயி லன்பன் கதிர்வேலன்
ஆனவர் துன்றும் போரியை வந்திங் கடைவீரே. (உ)

உ

குகமயம்

கந்தப்ப தேசிகர் அருளிச்செய்த

திருத்தணிகை சந்நிதிமுறை

தாலப் பருவம்

நாலு முகத்தவன் மாலை யழித்திடு நாதா வாதாபி
நாச முறச்செயு ஞான முனிக்கருள் போதா நீள்பாதா
பாலின் மொழிக்கனி வாயுமை தற்பரை பாலா மாசிலா
பாவை யெழிற்றெய்வ யானை யணைத்திடு மார்பா கூதாளா
கோல வனத்துறு வேடர் மகட்கிசை கோவே கூர்வேலா
கூட லரைத்தெறு கோழி மயிற்கொடி வீரா தேனூர்பூச்
சாலை மிருத்தாள சோலை மலைக்கிறை தாலோ தாலேலோ
தாவில் செருத்தணி மேவிய சிற்பர தாலோ தாலேலோ.(க)

சிற்றிற் பருவம்

வந்தித் திடுவோ முப்பொழுதும் வழுத்தி யிருப்போந் திருப்புகழை, வலம்வந் திடுவோம் நின்கோயில் மலருந் தருவோம் பூசனைக்குப்,—பந்தித் திடுவோ மைம்பொறியும் பரமென் றுனையே நினைந்திடுவோம், பாலும்பழமு முவந்தளிப் போம் பணிக்கு முனதே வலும்புரிவோஞ்,—சந்திற் புழுகுங் கப்புரமுந் தனிக்குங் குமமுங் கலந்தணிவோஞ், சலசத் திறையு மலையிறையுந் தண்ணந் திருப்பாற் கடலிறையுஞ்,— சிந்தித் திருக்குஞ் சீரடியாற் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, சேனூர் தணிகை மலைக்கிறைவா சிறியேஞ் சிற்றில் சிதை யேலே. (உ)

சிறுதேர்ப் பருவம்

காமக் குரோதமிகு லோபமொடு மோகமுங் கருதிமத மாச்சரியமுங், கட்டிப் பிணித்துநிரை யத்திலிடு மைம்புலக் காதலு மறத்துறந்து,—தாமுற் றிடுந்துற வறத்தினிலே தவ றுறு தலைகான கத்தடைந்து, சரக ருந்திப்பஞ்ச தழலிடை யிருந்துநற் றவமியற் றிடுமாதவர்,—தோமற்ற சிந்தனைக் கெட்டாத நின்திருத் துணைமலர்ப் பதநீழலில், துயரற விருத்தியெனை யாண்டருள் செருத்தணி சுடர்க்கிரி யமர்ந்த முருகா,—சேமித்த மறைநெறிக ளெங்கணும் விளங்கிடச் சிறுதே ருருட்டி யருளே, சிவஞான சித்திதர வருஞான சத்திதர சிறுதே ருருட்டி யருளே. (௩)

தயாநிதிமாலை

பிறந்திறந் துழலும் பெருவியா தியையும் பெரும்பசி நோய்சுடத் தளர்ந்து, நிறங்குலைந் தொருவர் பின்திரிந் துழ லும் நிரப்பெனுங் குறுவியா தியையுந், திறந்தருள் கடைக்கட் பார்வையா மருந்தாற் றீர்த்தருள் புரியுநா ளுளதோ, அறம் பொரு ளின்பம் வீடருள் தணிகை ஆறுமா முகதயா நிதியே. (௪)

விரிந்திடும் பிறவிக் கடலகத் தழுந்தி வினையெனுந் திரைகளா லலைந்து, திரிந்திடு காமச் சுறவினு லயருந் தீய னேன் துயர்களைந் திடுவாய், வருந்திடும் பகையை மாய்க்கு மன் னவர்போல் வனசரர் விதைத்தசெந் தினையை, அரிந் திடக் களிக ளலர்ந்திடுந் தணிகை ஆறுமா முகதயா நிதியே.

வேலாயுத சதகம்

நாளென்செயும் வினையென்செயும் நமனென்செயும் விதி யென்செயுங், கோளென்செயும் பிணியென்செயுங் குறை

யானவற் கடமென்செயும், ஆளென்றனக் கெழுதும்முறி யறியார்களோ வுலகோர்கள்செவ், வேளென்று நான்மறை யோதிடும் வேலாயுதா வேலாயுதா. (௬)

வானத்தினும் புவிமீதினும் மற்றெங்குநீ துணையென்று கொள், ஞானத்தினு வுறுவோர்க்கெலாம் நவிலொன்பதிற் குருவாகுவாய், ஈனச்செருக் கினைநண்ணியே யெண்ணு தமா னிடருக்கெலா, மீனச்சனி யெனநின்றிடும் வேலாயுதா வேலாயுதா. (௭)

கலம்பகம்

தாழிசை விருத்தம்

ஆறுமு கந்தனி லொருமுகந்தனை யடியனேற்குற வாக்கிடீர், அம்பகம்பனி ரண்டி லொன்றிலென் னுணவங்கெட நோக்கிடீர்,—வெறிகொள் பன்னிரு கையி லொன்றிலென் வெம்பவக்கடல் தடுத்திடீர், விளங்கு மாறுசெவ் வாயி லொன்றினில் வீடு சேர்மொழி கொடுத்திடீர்,—செறியு மாறிரு செவியிலொன்றிலென் செய்தி யாவையுங் கேட்டிடீர், செய்ய மார்பமோ ராறிலொன்றிலென் செந்தமிழ்த்தொடை பூட்டிடீர்,—தறுகண் வேடர்க ளுதவு மின்கொடி தனமு மன்பர்கள் மனமுநீள், தணிகை யங்கிரி முடியு நண்பு தழைத்த செங்கல்வ ராயரே. (அ)

நெடில் விருத்தம்

பெற்றாலு மினியொருவ ரெனத்தணிகை வரையகத் தேபெறவும் வேண்டும், உற்றாலு மருந்தவங்க ளவ்வரைக்கே யுறல்வேண்டு முயர்ந்த கல்வி, கற்றாலு முமதுதிருப் புகழுமே நாடோறுங் கற்கவேண்டுஞ், செத்தாலு மிவ்வுடல மத்தலமீ துறவேண்டுஞ் சேந்த னாரே. (௯)

வெண்பா

நேற்றிருந்தா ரின்றைக்கு நீறுவா ரென்னுமறம்
பார்த்துமுடன் மீதாசைப் பட்டாயே—தூர்த்தநெஞ்சே
என்று தணிகேச னிருகழற்கன் பாகுவையோ
நின்றெனக்குச் சற்றுரைசெய் நீ. (௧0)

மாதரையு மாதரையு மாதரையும் வேண்டுநம்போல்
ஆதரையும் பாடுமவப் புலவீர்—பூதரையாள்
சேயாந் தணிகைவரைச் செவ்வேளைப் பாடிலென்று
மாயாத செல்வ மருள்வான். (௧௧)

கலித்துறை

வான மளந்தது மாயோன் திருவடி மாயனுந்தித்
தான மளந்தது நான்முகன் சேவடித் தாழ்புவிபோம்
ஏன மளந்தது வெள்ளிவெற் போனடி யேனல்வளர்
கான மளந்தது தென்தணி காசலன் காலடியே. (௧௨)

ஏறும் புகழ்சேர் தென்தணி கைக்கோ னிருதாளுங்
கூறும் பெரியோர் சேவடி நெஞ்சு குறித்திட்டோர்
வீறுங் கமலத் தந்தண னறியா வீடெய்தி
நீறும் படிதீ வினையி னகன்றிடு நீராரே. (௧௩)

உ

குகமயம

பகழிக்கூத்தர் அருளிச்செய்த

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

செங்கீரைப் பருவம்

ஏர்கொண்ட பொய்கைதனில் நிற்குமொரு பேரசின் இலைகீழ் விழிற்பறவையா, மிதுநிற்க நீர்விழிற் கயலாமி தன்றியோ ரிலையங்கு மிங்கு மாகப்,-பார்கொண்ட பாதியும் பறவைதா னாகவப் பாதியுஞ் சேல தாகப், பார்கொண் டிழுக்கவது நீர்கொண் டிழுக்கஇப் படிகண்ட ததிசயமென,—நீர்கொண்ட வாவிதனில் நிற்குமொரு பேழ்வாய் நெடும்பூத மதுகொண்டுபோய், நீள்வரை யெடுத்ததன் கீழ்வைக்கு மதுகண்டு நீதிநூல் மங்காமலே,-சீர்கொண்ட நக்கீர னைச்சிறைவிடுத்தவா செங்கீரை யாடியருளே, திரையெறியும் அலைவாயுகந்தவடி வேலனே செங்கீரை யாடியருளே. (க)

வேறு

வரைபொரு புளகித மலைமுலை யரிவையர் வந்தார் பந்தாட, மறிகட லிறைதரு நவமணி வடமது வண்டார் தண்டார்பார்,--உரைபொரு கவிஞரு முனிவரு மமரரு முன்போலுண்டோதா, னுரையெமர் வழிவழி யடிமையி துளதென வுன்பா லன்பானார்,—கரைபொரு கடறிட ரெழுமயில் மிசைவரு கந்தா செந்தூரா, கழிமட வனமொடு முதுகுரு கொருபுடை கண்சாய் தண்கானல்,—திரைபொரு திருநகர் மருவிய குருபர செங்கோ செங்கீரை, செருவினி லெதிர்பொரு நிசிசரர் தினகர செங்கோ செங்கீரை. (உ)

வேறு

உரைசெய் வரையர மகளிர் முறைமுறை யுன்பேர் கொண்டாட, உலகு மிமையவ ருலகு மரகர வுய்ந்தோ மென்றாட,—வரைசெய் வனமுலை மகளி ரெழுவரும் வந்தே பண்பாட, மலய முனியொடு பிரம முனிதொழ வந்தார் கண் டாயே,—கரையின் மணலிடு கழியி னெடியக லஞ்சே ருஞ் சார்பிற், கரிய முதுபனை யடியில் வலைஞர்க ணஞ்சூழ் மென் கானில்,—திரையில் வளைதவழ் நகரில் வருகுக செங்கோ செங்கீரை, செருவி ளிசிசர திமிர தினகர செங்கோ செங் கீரை. (௧)

தாலப் பருவம்

மரகத வடிவஞ் செங்கதிர் வெயிலால் வாகாய் வாடா தோ, மதிமுக முழுதுந் தண்டுளி தரவே வார்வேர் சோரா தோ,—கரமல ரணைதந் தின்புறு மடவார் காணு தேபோமோ, கனமணி குலவுங் குண்டல மரைஞா ணோடே போனால் வார்,—பொருமிய முலையுந் தந்திட வுடனே தாய்மார் தேடா ரோ, புரவல ரெவருங் கண்டடி தொழுவார் போதாய் போதாரீள்,—சரவண மருவுந் தண்டமிழ் முருகா தாலோ தாலேலோ, சதுமறை பரவுஞ் செந்திலை யுடையாய் தாலோ தாலேலோ. (௧)

அரவுசிறு பிறையிதழி திரிபதகை பொதிசடிலர் பாலா வேலாதே, ரருணவெயி லிரவிசுழ லிமகிரியி லரிவைபெறு வாழ்வாய் வாழ்வோனே,—குரவருள மகிழுவுயர் குருவடிவு தருபெருமை கோடாய் தாடாளா, குமரகுரு பரமுருக குதலைமொழி தெரியவுரை கூறாய் மாறாதே,—இரவலரு முனி வர்களு மிமையவரு முனதடிமை யாமே யாமேகீ, எமை முனியி லொருதுணையு மிலையடிமை யடிமையென வீழ்வார்

சூழ்வார்பார்,—பரசமய குலகலக சிவசமய குலதிலக தாலோ தாலேலோ, பணிலமுமிழ் மணியையலை யெறியுநகர் வருகடவுள் தாலோ தாலேலோ. (௬)

வேறு

பங்கயன் முதலோ ரிந்திரன் இமையோர் பாரோ ரேனோர்பார்
பண்புட னுனையே சிந்தையில் நினைவார் பானீ மால்கூரரய்
வெங்கட கரிசூ ழெண்டிசை யுறைவார் வீணாள் காணாதே
மின்பரி புரதாள் பொன்புரை முடிமேல் வேய்வார் வீறாலே
செங்கனி மணிவாய் தங்கிய நகைதா தேவா சீறாதே
திண்டிறல் முருகா தண்டமிழ் விரகா சேரார் போரேறே
சங்கரி மருகா சங்கரி சிறுவா தாலோ தாலேலோ
சந்தத மியல்தேர் செந்திலை யுடையாய் தாலோ தாலேலோ.

சப்பாணிப் பருவம்

பரவரிய நவமணி யழுத்துகல னுக்கழகு பாலித்து வீறு பெற்ற, பன்னிரு புயங்குலுங் காமனீள் குழைதொறும் பருவயிர குண்டலங்கள்,—இரவியொளி மட்கநின் றசை யாம லமுதொழுகு மிந்துமுக மண்டலத்தில், எழுதரிய திரு நுதற் புண்டரங் குறுவெயர் விறைக்கச் சிதைந்தி டாமற்,— கரகமல மலர்விரல் சிவப்புறு மற்கடக கங்கண மொலித்தி டாமற், கழிவண் டலம்புங் கருங்குவளை யோடைசூழ் கழி தொறுங்கானல் தோறும்,—தரளமுமிழ் மணிநிலவு தருசெந் தில் வேலவா சப்பாணி கொட்டி யருளே, சமரமுக ரணவீர பரசமய திமிராரி சப்பாணி கொட்டி யருளே. (எ)

கருதிய தமனிய மணியரை வடமிடு கட்டுவ டத்தோடுங், கழலிடு பரிபுர மொலியெழ மணியுமிழ் கைக்கட கப்பூ ணும்,—இருசுட ரொளிபெற மருவிய தளர்நடை யிட்டும

திப்பாக, எழுமதி புரைதிரு முகமலர் குறுவெய ரிட்டுவ ரத்தாமஞ்,—சொருகிய நறுமலர் முகையவிழ் சிகையிடு சுட்டிறு தற்றுழத், தொழுதுனை வழிபடு மடியவ ரிளையவர் சொற்படி தப்பாமற்,—குருமணி யலையெறி திருநக ரதிபதி கொட்டுக சப்பாணி, குருபர சரவண பவசிவ மழவிடை கொட்டுக சப்பாணி. (அ)

முத்தப் பருவம்

கத்துந் தரங்க மெடுத்தெறியக் கடுஞ்சூ லுளைந்து வலம் புரிகள், கறையிற் றவழ்ந்து வாலுகத்திற் கான்ற மணிக்கு விலையுண்டு,—தத்துங் கரட விகடதட தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை, தரளந் தனக்கு விலையுண்டு தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்,—கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக் குளிர்முத் தினுக்கு விலையுண்டு, கொண்டல் தருநித் திலந் தனக்குக் கூறுந் தரமுண் டுன்கனிவாய்,—முத்தந் தனக்கு விலையில்லை முருகா முத்தந் தருகவே, முத்தஞ் சொரியுங் கடலலைவாய் முதல்வா முத்தந் தருகவே. (கூ)

தொழுதுந் துதித்துந் துயரகற்றிச் சுரருக் கிறையுஞ் சுரருமுடன், சூழ்ந்த கடம்பா டவியிலுறை சொக்கக் கடவுள் தனை முன்று,—பொழுதும் பரவி யெழுத்துச்சொற் போலப் பொருளும் புகல்கியெனப், புகலு மாறஞ் சிரட்டி திணைப் பொருட்சூத் திரத்தின் பொருள்மயங்கா,—தெழுதும் பனுவற் பரணன்முத லேழேழ் பெருமைக் கவிப்புலவர், இதயங் களிக்க விருப்பமுடன் இறையோன் பொருட்குப் பொருள் விரித்து,—முழுதும் பகர்ந்த கனிவாயால் முருகா முத்தந் தருகவே, மொழியுஞ் சமய மனைத்தினுக்கு முதல்வா முத்தந் தருகவே. (கo)

வேறு

பையரவி னுச்சிருழி யப்பொருங் குண்டகட் படு கடற் பணில முத்தம், பார்வையா னுஞ்சிறிது பாரோமி தன்றிப் பசுங்கழை வெடித்த முத்தஞ்,—செய்யசிந் தையினு மிது வேணுமென் றொருபொழுது சிந்தியோ முததிவட்டத், திரைமுழுங் கக்கொழுந் திங்கள்வட் டக்குடைச் செழுநிழற் சம்பராரி,—எய்யுமலர் வாளியை யெடுத்துத் தெரிந்துநா ணிறுகப் பிணித்த வல்லில், ஈன்றகுளிர் முத்தத்தை முத்தமென் றனுகோ மிதழ்க்கமல முகையு டைக்குஞ்,— துய்யமணி முத்தந் தனைத்தொடே முன்னுடைய துகிரில் விளை முத்தமருளே, தோகைமோ காரவா கனசெந்தி லாயுனது துகிரில்விளை முத்தமருளே. (கக)

வாரானைப் பருவம்

இறுகு மரைஞா ணிணிப் பூட்டே ணிலங்கு மகர குண்டலத்தை, எடுத்துக் குழையின் மீதணியே னினியுன் முகத்துக் கேற்கவொரு,—சிறுகுந் திலதந் தனைத்தீட்டேன் திருக்கண் மலர்க்கு மையெழுதேன், செம்பொற் கமலச் சிறடிக்குச் சிலம்பு திருத்தே னெறித்து விம்மி,—முருகு முலைப்பா லினிதூட்டேன் முகம்பார்த் திருந்து மொழிபக ரேன், முருகா வருக சிவசமய முதல்வா வருக திரை கொழித்து,—மருகு மலைவாய்க் கரைசேர்ந்த மழலைச் சிறுவா வருகவே, வளருங் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (கஉ)

பேரா தரிக்கு மடியவர்தம் பிறப்பை யொழித்துப் பெருவாழ்வும், பேறுங் கொடுக்க வரும்பிள்ளைப் பெரு மானென்னும் பேராளா,—சேரா நிருதர் குலகலகா சேவற்

கொடியாய் திருச்செந்தூர்த், தேவா தேவர் சிறைமீட்ட செல்வா என்றுன் திருமுகத்தைப்,—பாரா மகிழ்ந்து முலைத்தாயர் பரவிப் புகழ்ந்து விருப்புடனப், பாவா வாவென் றுனைப்போற்றப் பரிந்து மகிழ்ந்து வரவழைத் தால்,—வாரா திருக்க வழக்குண்டோ வடிவேல் முருகா வருகவே, வளரும் களபக் குரும்பைமுலை வள்ளி கணவா வருகவே. (கங)

அணிநெடு மவுலி யெறிசிறு புழுதி யழகுட னொழுக வருகவே, அடியிடு மளவி லரைமணி முரலு மரவொலி பெருக வருகவே,—பணிவிடை புரிய வருமட மகளிர் பரவினர் புகழ வருகவே, பலபல முனிவ ரனைவரு முனது பதமலர் பரவ வருகவே,—பிணிமுக முதுகி லரியணை யழகு பெறவரு முருக வருகவே, பிறைபொரு சடிலர் தமதிட மருவு பிடிபெறு களிறு வருகவே,—மணியித ழொழுகு மமுதுகு குதலை மழவிடை வருக வருகவே, வளையுமிழ் தரள மலையெறி நகரில் வரபதி வருக வருகவே. (கச)

அம்புலிப் பருவம்

கலையால் நிரம்பாத கலையுண் டுனக்குநிறை கலையுண் டிவன்தனக்குக், களங்கமரு குறமா னுனக்குண்டு குறமான் கருத்துண் டிவன்தனக்குத்,—தொலையாத கணமுண் டுனக்குமங் கலகணத் தொகையுண் டிவன்தனக்குத், துளியமுத முண்டுனக் கிவனுக்கு மாறாத சொல்லமுத முண்டுனக்குக்,—கொலையா டராவழிப் பகையுண்டு கடு விடங் கொப்புளிக் குங்கட்செவிக், கோளரா வைக்கொத்தி யெறியுமே காரமிக் குமரனுக் குண்டுகண்டாய்,—அலையாழி சூழ்திருச் செந்தில்வடி வேலனுடன் அம்புலீ யாடவாவே,

யரவின்முடி நெளியமயில் முதுகில்வரு குமரனுடன் அம்புலீ யாடவாவே. (கரு)

கடியவளி யெறியுந் தழைச்சிறைக் கூருகிர்க் கருடவா கனனு மிகல்கூர், கட்டைமுள் ளரைநாள நெட்டிதழுடுத்த பொற் கமலயோ னியுமெழுந்து,—கொடியவெங் கொலைபுரி வராகமென வொருவனெழு குவலய மிடந்துதேடக், குறித் தொருவன் எகினமா யண்டபகி ரண்டமுங் கொழுதிக் குடைந்துதேட,—முடியவிது காறுமவ ரறிவுறா வகைநின்ற முழுமுதற் கடவுளடியும், முடியுநீ கண்டனை யெனக்கருதி யின்றுதிரு முகமலர்ந் துனையழைத்தால்,—அடியவரை வாழ் வித்த செந்தில்வடி வேலனுடன் அம்புலீ யாடவாவே, யரு வரைகள் கிடுகிடென மயில்கடவு முருகனுடன் அம்புலீ யாடவாவே. (கசு)

சிறுபறைப் பருவம்

காவான பாரிசா தத்தருக் குலநிழற் கடவுள்தெரு வீதி தோறுங், கடிமணப் புதுமங் கலத்தொனி முழக்கமுகை கட்ட விழ்த் திதழுடைக்கும்,—பூவா ரிலைத்தொடைய லளகாபுரே சன் புரந்தொறுங் குளிருமுரசம், பொம்மென முழக்கமன் மதனுடைய பல்லியப் பொங்குதெண் டிரைமுழக்கப்,— பாவாணர் மங்கலக் கவிவாழி பாடிப் பரிந்துதிண் டிமமுழக் கப், பரவரிய திருவிழா வென்றுபல பல்லியம் பட்டினந் தொறுமுழக்கத்,—தேவாதி தேவருயர் சதுமறை முழக்கநீ சிறுபறை முழக்கியருளே, செருவிலெதிர் பொருதபர நிருதர் குல கலகனே சிறுபறை முழக்கியருளே. (கஎ)

சகரமக ரச்சலதி யுலகுதனி லிப்பொழுது சருவிய புறச்சமயரால், தலையழிய முத்திதரு சிவசமய முத்தர்பெறு

தவநெறி தழைத்து வரவே,—அகரவுக ரத்தில்விளை பொருளை டைவு பத்தியுறு மடியவர் தமக்கருளவே, அமரருல கத்தவரு மெவருமரு விப்பரவி யடியிணை தனைப்பணியவே,—பகரவு நினைத்திடவு மரிதுனது சொற்பெருமை பரகதி யளிக்குமெ னவே, பலபல முனித்தலைவ ரனைவரு முனக்கினிய பணி விடை தனைப்புரியவே,—சிகரபர வெற்பில்வரு முருககுமர க்கடவுள் சிறுபறை முழக்கியருளே, திரளுமணி முத்தை யலை யெறியுநக ருக்கதிப சிறுபறை முழக்கியருளே. (கஅ)

சிற்றிற் பருவம்

தையல் மடவா ரிழைத்தவண்டல் தன்னை யழிக்கு மதுக்கல்ல, தரள முறுத்தி யுனதுபொற்பூந் தண்டைத் திருத் தாள் தடியாதோ,—துய்ய தவளப் பிறைமுடிக்குஞ் சோதி யெடுத்து முகந்தணைத்துத், தோளி லிருத்தும் பொழுது மணித் தோளிற் புழுதி தோயாதோ,—வைய மனைத்து மீன்றெடுத்தும் வயது முதிரா மடப்பாவை, மடியி லிருத்தி முலையூட்டி வதனத் தணைக்கி லுன்கழற்காற்,—செய்ய சிறு தூள் செறியாதோ சிறியேஞ் சிற்றில் சிதையேலே, திரை முத் தெறியுந் திருச்செந்தூர்ச் செல்வா சிற்றில் சிதையேலே. (கக)

கூவிப் பரிந்து முலைத்தாயர் கூட்டியெடுத்து முலை யூட்டிக், குடுமி திருத்தி மலர்சொருகிக் கோலம் புனைந்து கொண்டாடிப்,—பூவிற் பொலிந்த திருமேனிப் புனிதா வண் டற் புறத்தெயிலிற், புகுந்தா லினியுன் னுடலேறப் புழுதி யிறைத்துப் போகாமற்,—காவிக் குறுந்தோட் டிதழ்நெருக் குங் கண்ணி தனைக்கொண் டோச்சிவளைக், கானற் றரளத் தொடையாலுன் கைத்தா மரையைக் கட்டிவிடோம்,—

ஆவித்துணையே வழியடிமை யடியேஞ் சிற்றி லழியேலே, அலைமுத் தெறியுந் திருச்செந்தூரரசே சிற்றி லழியேலே.(உ0)

பொய்யா வளமை தரும்பெருமைப் பொருநைத் துறையின் சீராட்டிப், பூட்டுங் கலன்கள் வகைவகையே பூட்டி யெடுத்து முலையூட்டி,—மெய்யா லணைத்து மறுகு தனில் விட்டாரவரை வெறுமனுன்னை, வெறுக்க வேறு கடனுமுண்டோ விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்துக்,— கையா லிழைத்த சிற்றிலின் காலா லழிக்கை கடனலக் காண், காப்பா னழிக்கத் தொடங்கிலெங்கள் கவலை யெவரோ டினியுரைப்போம்,—ஐயா வுனது வழியடிமை யடியேஞ் சிற்றி லழியேலே யலைமுத் தெறியுந் திருச்செந்தூ ரரசே சிற்றி லழியேலே. (உக)

க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ்

திருச்செந்தூர்

செந்திலம் பதியில்வந் தாறுன னத்திலொரு திருமுகத் தால்மகிழ்ந்தே, சிங்கனொடு தாருகன் சூரபத் மாமுதற் றெவ் வரையெ லாஞ்செ யித்தே,—இந்த்ரன்முதல் முப்பத்து முக் கோடி தேவர்களு மிருவருடன் முனிவ ரர்களும், எல்லாரு மகிழவே தேவர்சிறை மீட்டருளு மெந்தைதுக ளைப்பு ரக்கச்,—சந்த்ரா யுதங்கோடி யனையதிரு மேனியுஞ் சலராசி பொழிகும்பமேற், றுங்குசெங் கைகளு மபயமும் வரதமுந் தண்கருணை முகமிரங்க,—அந்திவண் ணன்சடா மௌலியுங் காசியு மடியர்கண் ணுங்கருத்தும், அகலாம னிறைகின்ற கங்கைநா யகியென்னு மானந்த அருள்வெள்ளமே.

உ

குகமயம்

வரகவி - மார்க்கசகாயதேவர் அருளிச்செய்த

திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ்

செங்கீரைப் பருவம்

தாறுடைய பைம்பூக மாதவர் வரும்போது சாமரை தருஞ் சோலைசூழ், தாழைமயி லின்சாயல் மாதரிடை மின் சோதி தானென மலர்ந்தேடெலாம்,—நாறுமண முங்கூடி நீறுபுனை யன்பாளர் ஞானவிழி யின்பாணிபோல், நாளுமரு வுந்தாது தேறல்சொரி யும்பாலி நாடுடைய கெம்பீரனே,— சீறுமர வம்பாதி மாமதி கருங்காவி சீதவன சந்தாதுசெந், தேனொழுகு மந்தாரை தாதகி செழும்பூளை தேவர்தலை யென் பாமையோ,—டாறணி விரிஞ்சேச னாருளி ளங்காளை யாடியருள் செங்கீரையே, ஆறுமுக முந்தோளு மேரொழு கிளங்காளை யாடியருள் செங்கீரையே. (க)

நீதிபெறு மன்பாளர் பாவவெயி லண்டாமல் நீழலரு ளுஞ்சோலையே, நீடிய கொடுஞ்சூர ராகிய கருங்காடு நீறெழ எழுந்தீபமே,—நாதமொடு கொண்டாடு வாரிரு ளிரிந்தோட நாடொறு மெழும்பானுவே, ஞானியர்கள் நெஞ்சான கோயிலு மடங்காத ஞானநிறை யம் பாரமே,—மேதினியில் நொந்தாரை யேழ்பிறவி யின்றீர மேவிட விடுந்தோணியே, மேதியில் வருங்கால னொரமை யடும்போது விடுதவு சஞ்சீவியே,—ஆதிய விரிஞ்சேச

ஞாரு ளிளங்காளை யாடியருள் செங்கீரையே, ஆறுமுக முந் தோளு மேரொழு கிளங்காளை யாடியருள் செங்கீரையே.(உ)

தாலப் பருவம்

மந்திர மறியா யாகம மறியாய் மாமறை நூலறியாய், வழிபட அறியா யின்றுன் பூசை வழுவா வகைசெயவே,— முந்திய காணியை யொற்றிவை யென்று மொழிந்திடு ஞாதி யர்தப், முடிசிறி யோனடி தீண்ட வவன்கை முன்புதன் முடிதீண்டக்,—குந்திய சிறுகால் நோவா ரச்சிவ கொள்கை யர் கொண்டாடக், கோதறு சீதள நீரபி டேகங் குறைவற வேபுரியச்,—சந்திர மௌலி வளைத்தவர் பாலக தாலோ தாலேலோ, சரவண பவகர புரியுறை யறுமுக தாலோ தாலேலோ. (ரு)

வேறு

செந்தமி ழாமலர் தூவிய வஞ்ச மிலாத தபோதனர் சிந்தையொ ராலய மாகிய பிமானே, செங்கதி ராரமு தூறிய வெண்கதிர் சூழ்தரு மாமலை செண்டென வேவிளை யாடிய கோமானே,—வெந்தழல் போல்வரு தானவர் செங்கறை வாரியின் மூழ்கிவெ றுங்குடன் மாலிகை சூடிய வேலோனே, விஞ்சையர் கேசரர் வாசவ னும்பர்கள் மாதவ ரோதிய மென்சிறு வாரிச மாமிரு தாளோனே,—அந்தரமாயுழ லாமலு னன்பர்க ளோடெனை யாளுமரு ளுந்துணை யேயமு தேகனி யேதேனே, யம்புய னுலறி யாமறை யின்பொரு ளானது காணுமோ ரஞ்சன மேயர சேயடி யார் வாழ்வே,—தந்தம தாசல மாமுக வெந்தை கணேசர் சகோதர சண்டமயூர குஞசல தாலேலோ, தண்டலை சூழ்கர னூருறை யுங்குமரா முருகா சிவசங்கர னருள் பாலக தாலேலோ. (சு)

சப்பாணிப் பருவம்

பொய்யா மொழிப்புலவர் மதுரையிற் சங்கம் புரக்க வெழு நாண்மறவனுய்ப், புறவுற வளைத்தெனது பெயர் முட்டை பாடெனப் பொன்போலு மென்றுபாட,—வெய் யான பாலைக்கு தேலாது நம்பெயர் விளம்பென விளம்ப அவர்மேல், விழுந்ததுளி யென்றெடுத் துப்பாடி யவர்நாவில் வேல்கொடு பொறித்த சதுரா,—மையான மஞ்சுதவழ் காவில்வா ழுதிர்புன்னை மலரரும் பைத்தரளமா, வடபால் நதிக்கரையில் வண்டலம் பாவைமுலை மார்பினி லணிந்து மகிழ்வாய்த்,—தையா விழிச்சியர்கள் விளையாடு கரனூர சப்பாணி கொட்டி யருளே, சங்கரி திகம்பரி சிதம்பரி தருங்குமர சப்பாணி கொட்டி யருளே. (ரு)

வேறு

துக்கமக லத்தினை நினைப்பவர் மனத்திருள் துரத்திய மணித்தீபமே, சுற்றிய பிறப்பினி லியற்றிய வினைத்திடர் துவைக்குமொரு சிற்றுளியே,—மைக்கடு வடக்கிய வழித் துணைவர் பொற்புய மலைக்கணியு முத்தாரமே, மற்றுநிக ரற்றசுரு திப்பொருள் கலைப்பொருள் மணக்குமொரு கர்ப் பூரமே,—நெக்குருகு சிட்டர்கள் குளித்திட அருட்புனல் நிறைத்தருளு நெட்டோடையே, நித்தமுத் திக்குளுத யப்பரிதி யிற்சுடர் நிகழ்த்திய மணிக்கோவையே,— குக்குட முயர்த்தருள் திருக்கர புரத்திறைவ கொட்டியருள் சப்பாணியே, கொட்டமொ டெதிர்த்தவ சுரக்குழுவை வெட்டுமுனி கொட்டியருள் சப்பாணியே. (சு)

முத்தப் பருவம்

மாலானவர் பாலாழியுள் வளர்கின்ற வளம்போல்
மழைமாமுகில் தவழுந்துய மணிமேடையி லேறப்
பாலார்மொழி மடவாரெறி செம்பந்துடல் பட்டே
பனிவான்மதி செம்மைப்படு பாலித்திரு நாடா
வேலாவுமை பாலாசிவ சீலா அனுகூலா
வேதாசுரர் நாதாமயில் வீரா கரனாரா
மூலாகம வாயாலொரு முத்தந்தனை யருளே
முருகாஅரி மருகாவொரு முத்தந்தனை யருளே.

உருகா மனத்திமிர முடையே னிரக்கமுட னொருபூத ருக்கு முதவேன், உலகோர் பழித்தசெயல் புரிவே னிடர்க் கடலி னுழல்வே னிரக்க வெழுவேன்,—மருவார் கறுத்த குழன் மடமாதர் கட்கடையின் மயலா லிளைத்து மெலிவேன், வழிபாடு மர்ச்சனையு மறியே னுளக்கமல மலர்மீ திருக்கு முருகா,—வருகார் வயற்குவளை யளிபாடி யிட்டபொழு தழகா யொழுக்கி யிடுதேன், அடியா ரிசைக்குருகி விழிநீர் துளித்தருளு மதுவா மெனத்திகழவே,—திருவார் செழித் தகர புரிவாழ் திருக்குமர திருவாயின் முத்த மருளே, சிறுதா மரைக்குநிக ராமா முகக்குழவி திருவாயின் முத்த மருளே.

வருகைப் பருவம்

உருகா மனமுஞ் சிவஞான முணரா அறிவு முனது புகழ், ஓதா நாவு மோதக்கேட் டுவந்தே யினிய நதிபோ லப்,—பெருகா விழியு முடையேனைப் பிறவிக் கடலில் வீழா மற், பேணி யெடுத்திங் கெனதுள்ளம் பிரியா விரிஞ்சைப் பதி வாழும்,—முருகா வருக சதுர்வேத முதல்வா வருக வினை தீர்க்கும், முனைவா வருக மலராறு முகவா வருக திரு

மாலின்,-மருகா வருக மயிலேறு மன்னு வருக அடியார்கள், வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வருகவே. (௯)

கண்ணு லுனது திருவடியைக் கண்டா தரவு பெருகி யிரு, கையாற் றெழுதுன் திருக்கோயில் காலால் வலஞ்செய் துனது புகழ்,—பண்ணு லுருகிப் புகழ்ந்து கண்ணீர் பாயா னெனையுந் தாயாகப், பரிந்து வளர்க்கும் பெருங்கருணை படைத்து விரிஞ்சைப் பதிவாழும்,—அண்ணுல் வருக உலக முழு தாண்டாய் வருக கதிதரும்மெம், ஐயா வருக ஆறு முகஅப்பா வருக விளங்குகதிர்,—வண்ணு வருக மயிலேறு மன்னு வருக அடியார்கள், வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வருகவே. (௧௦)

தேவே வருக திருவிரிஞ்சைச் சேயே வருக தெவிட் டாத, தேனே வருக சுவையமுதத் தெளிவே வருக கதிகொ டுக்குங்,—காவே வருக பெருங்கருணைக் கடலே வருக கலை பொழியுங், காரே வருக மரகதத்தின் கண்ணே வருக விண் ணோர்கள்,—கோவே வருக பெரியகுணக் குன்றே வருக வுப தேச, குருவே வருக சிவஞானக் கொழுந்தே வருக வொருக ரத்தின்,—மாவே லெடுத்த பரப்பிரம வடிவே வருக அடியார் கள், வாழ்வே வருக தெய்வசிகா மணியே வருக வருகவே.

அம்புலிப் பருவம்

பத்தியா யுலகை வட்ட மிட்டுவரு பரபரப் பினையு மாற்றுவான், பழுது பட்டகலை முழுது முற்றிலகு பண்மை யுந்தருவன் ஈதலால்,—நித்த மாயுடல முற்றிடுங் குறையை நீக்கியே கருணை நோக்குவான், நின்மலர்க்கருளு மூல மந்தி ரமு நின்செவிப் படவு மொழிகுவான்,—தத்து சாகரம தற்கு ளுஞ்சனன சாகரத்துமுதி யாமலே, தண்டை கிண் கிணிச தங்கை கொஞ்சமிரு தாமரைப் பதமு முதவுவான்,—

அத்தன் வேலன்விளை யாடுதற் கழைத அம்புலீ வருக வருகவே, அமரர் பரவுகர புரிய னுளமகிழ அம்புலீ வருக வருகவே. (கஉ)

இஞ்சிரு முருகனை யன்ப னன்புற இயம்பு பாடல்களை யறியலாம், எங்கள் கீரன்மொழி யும்பசுந் தமிழெ னுஞ்சொல் வேதநிலை தெரியலாம்,—விஞ்சு சூரர்களை வென்றி டுந்திறல் விளம்பு காதைகளை வினவலாம், வெந்த பூதியை யணிந்த தொண்டர்கள் விரும்பவே கவிதை புகலலாம்,—வஞ்ச மோடவரு தண்டை யங்கழல் வணங்கலா முலகை வலமதா, வந்து சூழ்வதிலு மின்றிவந்தனை வலஞ்செய் தேசிறவி யொழியலாம்,—மஞ்ச மார்வயல் விரிஞ்சை யம்பதி யமர்ந்த ஆறுமுக முடையவேள், அம்புலீ வருக என்றனன் கடுகி அம்புலீ வருக வருகவே. (கங)

சிற்றிற் பருவம்

வங்கத் தரங்கக் கடலன்று மாயக் கிரவுஞ்ச கிரியன்று, வானத் தருவு மாவன்று மருவா ருறையும் பதியன்று,—துங்கத் தசுரர் முடியன்று தொலையா அமரர் சிறையன்று, தாரகக் கொடுமா முகியன்று தொழுவார் பிறவித் துயரன்று,—சங்கத் தவறு மலரோனுந் தவளா சலத்தில் வருவோனுஞ், சரணஞ் சரண மெனும்புதியி தண்டை முழங்குஞ் சிறுதாளால்,—அங்கைக் கதிர்வே லுடையோனே அடியேஞ் சிற்றி லழியேலே, அரசே விரிஞ் சைப் பதிவாழ்வே அடியேஞ் சிற்றி லழியேலே. (கச)

மழலை தனிற்சிவ மறைகள் முழக்கியு மணியை முழக்கியு மணிவாயால், வயிரை முழக்கியு மொருகுழல் பற்றியு மகிழ்பறை கொட்டியு மணியாலே,—இழையு மலர்ப்பத கடன மியற்றியு மிசைகள் பயிற்றியு மகிழ்நாளு, விரத

மெனக்குல வரையை நடத்தியு மிறைவர் களிப்பது பெற வேழ்பார்,—முழுது மடிக்கடி யுலவிய மைக்குல முதலை நடத்தியு மருவார்மேன், முனியு மருப்பிரு பிறைநிகர் கைக் கய முனியை நடத்தியும் விளையாடி,—அழகிய பொற்கர புரியுறை யுத்தம அடியவர் சிற்றிலை யழியேலே, அழகொழு கப்புழு கொழுகிய பொற்புய அடியவர் சிற்றிலை யழியேலே. (கரு)

சிறுபறைப் பருவம்

மந்தமா ருதரதமு மந்திமா லைக்களிறு மாசுக மெனுந்துரகமும், வளர்மதிக் கவிகையுந் திரைகடற் படகமு மைக்கோகி லக்காளமுங்,— கந்தமா மோலையுஞ் சுரிகையும் பெற்றொரு கரும்பணி சுரும்பு சிலைநாண், கமழுமலர் வாளிகொண் டுலகமே மும்பொருத காமமத வேள்மைத்துனு,—தந்திவாழ் பழனியுங் கிரியினும் வெள்ளிமலை தன்னினும் அருணைதனினுஞ், சந்ததமு முக்குவளை மலர்மருத் தணியாச் செருத்தணி திருத்தணியினுஞ்,—செந்திமா நகரினும் பயில்குமர கரனார சிறுபறை முழக்கி யருளே, திருமழலை மொழியின் மறை பலபல முழக்குமுனி சிறுபறை முழக்கி யருளே. (கசு)

சிறுதேர்ப் பருவம்

கனககிங் கிணிகள்கல கலகலென் றொலிபரவு மிருதாமரைச் சரணனே, கடைபடுங் கடலிலெழு மமுதமுண் டவர் பரவு கருணை கரக்குரிசிலே,—மனமுமைம் புலனுமொரு வழிசெலும் படியெனது மலமா சொழித்த குகனே,—வளர் சிலம் பிடைபொழியு மழையெனும் படிசொரியு மதவாரணற்கிளையனே,—தனனதந் தனனவென வளிமுழங் கிய குவளை மணமாளிகைச் சதுரனே, தபனசெங் கதிருதய முலகறிந் துணரமுரல் சரணு யுதக்கொடியனே,—தின

கரன் சசியளவு திருவிரிஞ்சையின் முருக சிறுதே ருருட்டி யருளே, சிவசிதம் பரநடன மிடுதிகம் பரர்குமர சிறுதே ருருட்டி யருளே. (கள)

அகநெகிழ்ந் துருகியிரு விழிசலம் பொழியவுன திரு தாள்துதிக்க அறியேன், அனுதினங் கலைமறைகள் நெறிநடந் திடல்வழுவி யதிபா தகத்தை நினைவேன்,—இகபரந் தனை யறியு மறிவறிந் திடுமுனிவ ரிடநாடி யுற்றுமருவேன், எனையு மன் பினர்களுட னடிமைகொண் டருளியெழு பவவே ரொழிக்கு மரசே,—மகரகுண் டலமசைய முலைசுமந் திடையசைய மலைபோ லிருக்கு முலைமேல், மணிவடங் களுமசைய களபகுங் குமவிரக மடவார் நிருத்த மிட வாழ்,—சிகரமண் டபமருவு திருவிரிஞ் சையின்முருக சிறுதே ருருட்டி யருளே, சிவசிதம் பரநடன மிடுதிகம் பரர்குமர சிறுதே ருருட்டி யருளே. (கஅ)

க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்

திருவிரிஞ்சை

உவமைதா மானசிறு மறையோ ரனேகரி லொருவர் சிவ லோக முறவே, உம்பர்கோன் பூசைக் கவர்க்காளி லாமையா லூரிலுள ளாரவர்மனை,—யவள்முன்பு வந்துவந் துனதுமுறை பங்கிடென அன்னையாள் முன்போயழ, அமலன்வளர் பாலனுக் கருள்செய்து முன்னா லணிந்துநீ யின்று நம்மைக்,—குவலயத் தோர்முன்பு பூசைசெய் யென்னவே குழந்தையெட் டாமல் நிற்பக், குழந்தைவே லாயுத னுன்பூசை யென்னக் குனிந்தவன் பூசை கொண்ட, சிவன் வாழ் விரிஞ்சிபுரம் வருகுமர நாயகா சிறுபறை முழக்கி யருளே, செகதண்ட நின்று பணி தேவர்சேனைபதி சிறுபறை முழக்கி யருளே.

உ

குகமயம்

சிற்றம்பலநாடிகள் அருளிச்செய்த

திருச்செந்தூரகவல்

நந்தூ ரலைவாயில் நண்ணியுல கேத்தவொளிர்
செந்தூர்த் திருவகவல் செப்புவேன்—இந்தூருஞ்
செஞ்சடையான் யானைச் சிரமுடையான் அன்பிலிகள்
நெஞ்சடையான் பாத நினைந்து.

ஓமெனுந் தாரக வொண்பொருள் சிவனுக்
காமென மொழிந்தே அருட்குரு வானோன்
பொற்புறு பொதிய வெற்புறு முனிக்கு
நற்பொருள் விளக்கு ஞான தேசிகன்
பொய்வழிச் சமணப் புலையிருள் நீக்கிச்
சைவம் வளர்க்குஞ் சம்பந்த மூர்த்தி
முருகன் குமரன் மூவிரு முகன்மால்
மருகன் சிவனருள் மைந்தன் கந்தன்
மலைமகள் பாலன் வயங்கிளர் வேலன்
கலைபயில் புலவன் கார்த்தி கேயன்
வளையொரு மருப்பு வாரண முகவற்
கிளையவன் குகன்மயி லேறும் பெருமாள்
சூரசங் காரன் சுப்பிர மணியன்
வீரருள் வீரன் விரைகமழ் கடம்பன்
சேந்தன் வள்ளி தெய்வ யானை
காந்தன் செவ்வேள் காங்கேயன் சிலம்பன்

ஆயிர நாமத் தையன் துய்யன்
சேயருட் கோமான் சேவற் றுவசன்
வரங்கிளர் கருணைப் பரங்கிரி யுறைவோன்
மாவினம் விளங்கும் ஆவினன் குடியோன்
நந்து ரலைவாய்ச் செந்தூர்க் கடவுள்
பாரகம் விளக்கும் ஏரகத் தமர்வோன்
மாலய னிறைஞ்சுஞ் சோலைமா மலையோன்
குன்றுதோ றாடல் நன்றெனை மகிழ்ந்தோன்
பாசக் கங்குல் பசையறப் பருகி
நேசர்க் கின்ப நிறையொளி பரப்பித்
திருவளர் செழும்பொற் செந்தா மரைக்கு
மருவு மோர்சான்றாய் மலர்ந்த பொற்பதமும்
நினைப்பொடு மறப்பு நீங்கிடு மதித
மனைப்பர நாத மறையொலி யலம்பும்
பாந்தளஞ் சுடிகைப் பன்மணி யிழைத்த
காந்துசெஞ் சுடர்க்காற் கழற்பரி புரமுங்
கண்குளிர் கனகக் கவின்கிடந் திலங்குங்
கிண்கிணி யிசைக்குங் கிளர்திரு வரையும்
வட்டுடை வரிந்து தொட்டகூர் வாளுங்
கட்டுறு யோக பட்டிகைச் சிறப்பும்
இந்திர வில்லிரண் டெதிர்பொருத் துவபோற்
சுந்தர வாழி சூட்டுமங் குலியும்
மன்னிரு முகிலான் மணிதரு நிதிசேர்
பன்னிரு கமல பாணியு மவற்றிற்
சூலமும் வேலுந் துரோணமுஞ் சரமும்
பாலமுங் குலிசமும் பரிசையும் வாளும்
ஆழியும் மழுவும் அபயமும் வரதமுஞ்
சூழுமுன் கைகள் துலங்குபொற் கடகமும்
மந்தரந் தழுவும் வாசுகி யன்ன

சந்தத மொய்ம்பு தழைத்தகே யூரமும்
பரிதிமண் டலம்போற் பதக்கமுத் தாரந்
தருசரப் பணிகள் தயங்கு பூண்மார்பும்
அட்டிகை பணிநல் லக்கிருங் குவளை
விட்டொளி விரிக்கும் வியன்கந் தரமும்
மூவிரு திங்கள் முதிர்ந்தபூ ரணம்போல்
மேவுசண் முகங்கள் விளங்குநற் பொலிவும்
முளரிமுந் நான்கு மூவிரு குமுதம்
வளர்மதி யுதயத் திடைவளர்ந் தனபோல்
முகந்தொறுங் கருணை யுகந்தகண் களுஞ்சீர்
உகந்தபொற் குதலை யொழுகுவாய் வனப்புந்
தொட்டபொற் குழைகள் தூக்குகுண் டலமுஞ்
சுட்டியும் நுதலி லிட்ட வெண்ணீறும்
மன்னிரு மகளிர் மாட்டலால் வணங்காச்
சென்னிசேர்ந் தொளிருஞ் சேகரச் சிறப்பும்
மகபதி மகளும் வள்ளியந் திருவுஞ்
சுகமணஞ் சூட்டுந் தொங்கலுங் கடம்புங்
கோதைசூ ழன்னோர் கொங்கையாற் பூசும்
ஏதமில் சுகந்த லேபனப் பூச்சும்
மரகதப் பொருப்பும் வயிரவான் பொருப்பும்
நிரல்வல மிடமார் நெடியபொற் கிரிபோல்
அகிலமு மீன்ற அன்னைய ரிருவர்
மகிழ்வுற இருபால் மன்னிவாழ்ந் திருப்பப்
பன்னிறந் தளிர்க்கும் பச்சைவான் கிரிமேல்
துன்னிரு கோடி சூரிய ருதித்தாங்
கவரவ ரச்ச மடுதிறன் மயூரக்
குரகத மேறிக் குலவு காட்சியுங்
கரந்தெனை யாளுங் கருணையாற் புவிமேற்
சரந்தரு மானுடச் சட்டை சாத்தி

அழியா வொளிவந் தழியா மொழியை
வழியா மொழிய வந்தனங் குருவாய்
ஆணவக் கடற்கு ளலைபடு தாரும்
பூணுறு மாயைப் புலிவாய்ப் பசுவுங்
கருமச் சூறைக் காற்றுறு சருகுந்
தருமிச் சுழலைச் சார்ந்திடு மெளியநின்
வருத்தங் குறித்து வருந்தே லுனக்குத்
திருத்தகு முணர்வு செப்ப வேண்டி
வந்தன முத்தி வழங்குது மென்றான்
அந்தணன் மொழிகேட் டன்பொடுந் துதித்தேன்
கற்பக வனம்போற் கமழ்பூங் காவிற்
பொற்புற விளங்கும் பொலன்மணிக் கனகப்
பன்னக சாலையுட் பதுமபீ டிகைமேல்
துன்னுபூந் தருக்கள் சூழ்கற் பகம்போற்
சங்கமீ ருப்பட் டயங்குவெண் மதிபோல்
அங்கை கூப்பி யடியர்நின் றேத்த
இனிதெழுந் தருளி யென்முக நோக்கிப்
புனிதநீ ராடப் போகென மொழிந்தான்
நீரிடை மூழ்கி நெடுங்கலை யணிந்து
சார்தலு மோமச் சடங்குக ளியற்றி
வெண்ணீ றணிந்து விதியெழுத் தஞ்சுந்
தெண்ணீர் மையினிற் செவியிற் புகட்டி
அறுகெரு வுடன்கை யள்ளுநீ ருடனென்
மறுகுட லாவி வான்பொருள் கொண்டான்
பரவுசஞ் சிதநம் பார்வையா லொழிந்த
விரவுமுற் பவங்கள் வினையுடம் பளவில்
அத்த னருள்மே லாகா மியங்கள்
பற்றில நினது பண்புபோ லிருந்த
நம்பெரு வடிவை நாடுகென் றருளித்

தம்பொற் கரமல ரென்றலை நீண்டி
முழுநிலம் புரப்ப முடிசூட் டுவபோற்
செழுமணிப் பதமென் சிரமிசைப் பொருத்திப்
பாத தீர்த்தம் பரிகல சேடம்
ஆதரக் குழவிக் கன்னைபோ லருத்திக்
குருபதம் பணிதல் குஞ்சர முகனைக்
கருதல் சங்கற்பங் கங்கையின் பூசை
திருந்துமுத் திரைகள் திக்குபந் தனநீ
டருந்துயர் நீக்கு மத்திர சந்தி
தத்துவத் திரயந் தாளத் திரயஞ்
சுத்தா சமனந் தொடுமிடந் தொடுகை
கரமுட னங்கங் கருதிடு நியாசம்
விரவு தருப்பணம் விளங்குநீ றணிகை
அஞ்செழுத் தோதி யாதவற் பணிதல்
விஞ்சுமா கமத்து விதிமுறை முடித்துப்
பண்டையோர் நம்மைப் பரவுசொற் பாடல்
கொண்டுநீ துதிகள் கூறென விளம்பிப்
பத்திகூர் விரதம் பயின்றிடி னலாஞ்
சத்திநி பாதந் தருமெனப் பகர்ந்தான்
அன்னமிட் டெவர்க்கு மரும்பசி தீர்த்துப்
பன்னருஞ் சாலை படித்துறைத் தடாகம்
வந்தா ரருந்தும் வாசநீர்ப் பந்தர்
நந்தா வனங்கள் நலம்பெற அமைத்தே
ஈங்கிவை முதலா எண்ணான் கறமுந்
தீங்கிலா வண்ணஞ் செய்கென மொழிந்தான்
காலையி லெழுந்து கடிமலர் பறித்து
மாலிகை தொடுத்து மதிமுடிக் கடவுட்
பூசனைக் குதவிப் புனிதஆ லயத்தின்
வாசல் விளக்கிட் டலகொடு மெழுக்கிட்

டாறுகா லமுஞ்சென் றரன்பத மிறைஞ்சி
ஏறுளா னடியார்க் கேவல்பூண் டொழுகல்
இத்திற முதலா இயற்றுதல் சரியை
சுத்தசா லோக்கியந் துய்க்குமென் றிசைத்தான்
பொய்வகை நீக்கிப் பூத முதலா
ஐவகைச் சுத்தி மெய்வகை விளக்கி
மணம்பொலி கந்த வர்க்கமா மலர்கள்
இணங்குநற் றூப மெழில்குலாந் தீபந்
தருநை வேத்தியந் தாம்பூல முதலாய்
வருமுப சார வகைபல இயற்றி
அகந்தவி ருளத்தோ டகம்புற மிறைஞ்சிச்
சுகங்கிள ரங்கித் தொடுகடன் முடித்துப்
போற்றுறு மிலிங்க பூசனைக் கிரியை
சாற்றுசா மீப்பியந் தருமெனப் பகர்ந்தான்
கட்டளை கப்பணங் கட்டளை யிட்டுத்
தட்டுறு மலந்தீர் சாதன மொழிந்து
கடுங்கொலை வெறும்பொய் களவுகட் காமம்
படும்பெயர் பஞ்ச பாதகந் தீர்த்துக்
காமங் கோபங் கசடுறு முலோபந்
தீமன மோகஞ் சேர்மத மாற்சரியம்
ஈண்டிவை முதலா எண்ணில் பாவம்
பூண்டன வொழியப் புந்திதந் தருளி
மன்னுகீ ழரணி வருத்தமி லுணர்வாய்ப்
பின்னுமே லரணி பிரணவ மாகக்
கடையவே ஞானக் கனலெழு மென்றே
தடைபடாப் பாச தகனஞ் செய்தான்
அருளெனுந் தலத்தி லமர்ந்துகான் மடக்கி
இருளற விருக்கு மியற்கையும் விண்டான்
பன்னிரண் டங்குலம் பறிந்திடும் பிராணன்

பின்னதி னான்கும் பிரிந்துபோ மதனால்
ஆயுளுங் குறைந்திட் டாக்கையுந் தளர்ந்து
சாயுமென் றுரைத்துச் சாகா திருக்க
நாடியோர் பத்து நாடிநா டிகள்புக்
கோடிய வாயு வொருபதுந் தேர்ந்து
சொன்னநா டிகளிற் சுழுமுனை நடுவாம்
இன்னதின் பக்கத் திடைபிங் கலையாம்
அக்கினி திங்க ளாதவன் கலைகள்
புக்கமுச் சரமும் போய்மீண் டியங்கு
மூலகுண் டலியா முரகமுச் செறிந்து
வாலது மேல்கீழ் மண்டல மிட்டுப்
படந்தனைச் சுருக்கிப் படுத்துறங் குவது
நடந்துமே னோக்கி ஞானவீ டளிக்கு
மண்டல மூன்று மருவுதூண் புகவக்
குண்டலி யெழுப்புங் கொள்கையீ தென்றான்
முன்னதி ரேசக முப்பத்தி ரண்டு
பின்னது பூரகம் பேசுமீ ரெட்டுக்
கும்பக நாலோ டறுபதாக் கூறுந்
தம்பமாத் திரையின் தன்மையு முணர்த்தி
மூலமே முதலா முடிநடு வுச்சிப்
பாலள வினுநீள் படுதுளை நோக்கி
மூலாதா ரத்தின் முச்சுழிச் சுடரை
மேலாதா ரத்தின் மெல்லெனத் தூண்டி
இருவழிக் காலு மொருவழி நடத்திக்
கருவழி யடைத்துக் கமலமா றுருவிப்
பன்னிரண் டந்தம் பரிதியும் மதியும்
மன்னியொன் றான வண்ணமுந் தெரிந்து
கமடமைந் தடக்குங் கருத்தெனப் பொறியின்
மமதைக ளடக்கி மனோலய மாக்கி

மூலக் கனலான் முழுமதி யுருக்கிப்
பாலைப் பருகும் பண்புதந் தருளி
இட்ட காமியமு மெண்ணெண் கலையும்
அட்டமா சித்தியு மன்புறக் கொடுத்துப்
பன்னிரு பட்சியும் பறவா வண்ணம்
என்னுளே நிறுத்து மியற்கையும் விண்டான்
மூலமே முதலா மூவிரு தலத்தின்
கோலமும் பூதக் குறிகளு மதன்பால்
ஐம்பதோ டொன்று மக்கர விதமும்
பொன்பொலி கமலப் பூவிரு மூன்றுந்
தாரக வெழுத்துஞ் சார்பெழுத் தஞ்சும்
வாரண முகவன் மலரோன் திருமால்
வருத்தமி லுருத்திரன் மகேச்சுரன் சதாசிவன்
உருத்தெளிந் திடநம் முருவே யாகும்
ஆறு மாமுகத் தமர்ந்தது மிதுவே
வேறிலை யென்று மெய்ம்மொழி செப்பி
இலங்குமா யிரத்தெட் டிதழ்த்தா மரைமேல்
துலங்கிடு நடனச் சோதியுங் காட்டி
இருபத் தோரா யிரத்தறு நூறாய்
மருவிநா டோறும் வளர்சுவா சத்தைச்
சங்கென வாங்கிச் சமனுறக் கும்பித்
தங்கென் றெழுப்பு மசபையு மருளிப்
பொருளரு ளான்மாப் பொருந்திடும் திரோதை
மருவிரு மலமாய் வயங்குமஞ் செழுத்தில்
திரோதையு மலமுந் தீர்த்தத னிடத்தில்
வரோதய மான வாசியை நிறுவி
வளம்பொலி சிவாய வாசியென் றுளத்தில்
விளம்புக நின்னை விளக்கு மானந்த
முத்தியஞ் செழுத்து மொழிந்தன மிதனைச்

சித்தசாந் தியினிற் செப்பென மொழிந்தான்
வாசிவா வென்ன வழங்குமூன் றெழுத்தும்
பேசுதன் முதிர்ந்த பேறென மொழிந்தான்
இன்பமாம் வாசி யென்னுமீ ரெழுத்தில்
அன்புறு மகிமை யதிசய மென்றான்
சீயெழுத் தொன்றே சிந்தையிற் கருதத்
தூயநற் சுடராய்த் தோன்றுவை யென்றான்
விந்துவும் நாதமு மேவிய வெளியிற்
சிந்தையை நிறுவிச் சிவன்வடி வாகித்
தாக்குவை மூல நோக்குவை யதீதம்
போக்குவை பிறவி யாக்குவை யின்பெனத்
தராப்புகு நாப்போற் சமனுற நிற்கும்
இராப்பக லற்ற விடத்தே யிருத்தி
நலம்படர் சோதி நடனகுஞ் சிதத்தாட்
சிலம்பொலி கேட்குந் திறம்பா வித்தான்
மயற்பொறி புலன்வாய் மனம்புகு நனவில்
இயற்றிடு தவங்க ளியமநிட் டையதாஞ்
சார்பொறி விடுத்த சாக்கிரக் கனவு
சேர்தரு கருத்தாற் செய்தவ நியமம்
நீங்காக் கரண நீங்கவே நனவில்
தூங்காத் தூக்கச் சுழுத்தியா சனமாம்
அறிந்துதொண் ணூறு மாறும்வே றுக்கிப்
பிறிந்துதற் கண்டு பிரமமே தானாய்ச்
சாதனம் விடுத்த சாக்கிர துரியம்
பேதமற் றிருக்கை பிராணா யாமஞ்
சான்றுசாக் கிரம்போய்த் தானிருந் தமையுந்
தோன்றிடா துலகைச் சுழற்றுங் கால்போற்
பறந்திடுங் காலாற் பரமறந் தளவிற்
பிறந்திடு மதீதம் பிரத்தியா காரம்

வானெனு மகண்ட வடிவுகண் டெங்குந்
தானென் றிருக்கை தாரணை யாகுங்
காட்சிக ளனைத்துங் கண்ணதாய் விளங்கி
ஆட்சியி னமைந்த ததுவே தியானந்
தற்பதந் தொம்பதஞ் சார்ந்திடு முபாதி
கற்பனை தீரக் கண்டசி பதமாஞ்
சச்சிதா னந்த சமரச நிலைதேர்ந்
துற்றசிற் பதம்பெற் றுறங்குதல் சமாதி
மன்னிடு சாம மறையுப நிடதஞ்
சொன்னவாக் கியத்தின் தொகையிதே ஞான
யோகவெட் டங்க முண்மைநீ யுணர்தி
ஏகசா ரூப்பிய மிதுவென மொழிந்தான்
சரியை கிரியை தருக்கமா யோகஞ்
சுருதியின் முறையே தொடங்கிய அனைத்தும்
நானெனும் போத நாட்டமே யன்றி
ஈனமி லுணர்வுக் கின்பங் காணேன்
என்றுநான் வினவி யிறைஞ்சலு நகைத்து
நன்றென மொழிவான் ஞான முரைக்கிற்
பாச ஞானம் பகர்பசு ஞானம்
ஈச ஞான மென்னமூன் றுளவாம்
அதுகேள் பாச மாவ தாணவ
மதிமயற் கன்ம மாயை யிரண்டுந்
தெருமரல் காட்டுங் கருமமுந் திரோதையும்
மருவிடும் பஞ்ச மலங்கா ணிதனை
ஆசென வுணரா தகமென விருக்கை
பாச ஞானப் பண்பது வாகுந்
தரும்பசு ஞானஞ் சாற்றுதுங் கேண்மின்
வரும்பவ மூட்டு மலமைந் தவற்றின்
ஆணவ மொன்று மகலா மையினாற்

காணுறு விகடக் கருவிகள் தீர்ந்து
தன்னை யுணர்ந்து தானே பிரமம்
என்னக் கருதி யிருப்ப தாகும்
பதிஞா னத்தைப் பகருது மகங்கூர்
மதிஞா னத்தால் வரும்பவ மொழியா
தாகையா லருள்புக் காணவ மொழிந்திட்
டேகமா மின்பத் தெய்துவ தாகுந்
தத்துவ முழுதுஞ் சடமுனைக் காணு
றித்தைநீ நடத்தற் கிறைவனோ வல்லை
அறிவனு மல்லை யறியா னல்லை
செறியருள் காட்டத் தேர்ந்துகாண் பவனீ
யாதுசார்ந் திடினும் யானது வென்னும்
போதநின் றுணர்வு புகன்றிடிற் சிறிதா
மறைத்திடு மூல மலத்தினாற் பாசச்
சிறைக்குளே கிடந்து தேகநா னென்று
வல்வினை புரிந்து மயங்கினை யந்தத்
தொல்வினைப் பயன்கள் சூட்டின மிப்பால்
இருவினை யொப்பு மலபரி பாகந்
திருவருள் பதிக்கத் தேடிவந் தனம்யா
மேவொரு மலத்து விஞ்ஞா னகலர்க்
கோவறு முத்தி யுணர்வினின் றளிப்போம்
பெருகிரு மலங்கொள் பிரளயா கலர்க்கு
மருவுநன் மூர்த்தி வடிவுகொண் டருள்வோம்
மும்மல முடைய சகலனீ மொழியின்
அம்மல நீக்கி யாட்கொண் டருள
மானைக் காட்டி மான்பிடிப் பவர்போல்
மானுட வடிவாய் வந்தனந் தெண்ணீர்
மீனது போல விழியுற நோக்கி
யானதோர் கமடம் போலகத் துன்னிப்

பறவை போலப் பரிசுஞ் செய்து
திறமிகு மூன்றாற் றெளிவுரை பகர்ந்து
பக்குவத் தடைவே பாலித் தருள்நீ
புக்கிட வேண்டிப் போந்தனென் றிசைத்தான்
பல்பல சமயப் பகுதிசேர் நிலையுஞ்
சொல்வகை மறப்புந் துகளற மொழிந்தான்
தெய்வஞ் சிவமே சிவனருள் சமயஞ்
சைவஞ் சிவத்தொடு சம்பந்த மென்றான்
பூதம் பழித்துப் பொறியற வுணர்த்தி
வாதமாங் கரண வல்லப நீக்கிப்
பித்துறுங் கலாதிப் பிணக்கற விடுத்துச்
சுத்த தத்துவந் தூடண மாக்கி
முப்பது முப்பது முப்பதோ டாறெனச்
செப்புங் கருவிகள் சேரா தகற்றித்
துன்னிடு மத்துவா சோதனை கண்டு
தன்னை யுணர்ந்து தனித்திருள் நீக்கி
யாமா மூலக மனைத்தினுஞ் சாட்சி
நாமே யென்னு ஞானமுங் கடந்திட்
டண்ட பிண்டம் யாவுந் தோன்றா
துண்டெனு முணர்வூ டுறக்கமும் விட்டு
விசுவக் கிராசம் விரூப சாந்தம்
அசிபதங் குறிக்கு மாசையுந் தீர்த்துக்
கால்புகா விடத்திற் கறங்காத் தீபமும்
மேல்விசை தீர்ந்து வீழ்ந்தபம் பரமுஞ்
சித்திர வடிவுந் திரைதீர் புனலும்
ஒத்தவந் நிலைசார்ந் தொளியருள் நோக்கி
என்செய லேது மில்லையென் றெய்து
தன்செயல் நோக்கிச் சார்கென மொழிந்தான்
சும்மா விருக்கச் சொன்னதோர் வார்த்தை

அம்மா அதிசய மாருடன் புகல்வேன்
கரைசேர்த் தருள்வான் கருணையை நோக்கி
இரைதேர் கொக்கொத் தேசற விருந்தேன்
என்செய லகன்றேன் யானற வீசன்
தன்செயல் நடக்குந் தன்மையுங் கண்டேன்
ஆத்து மிகத்தோ டடைதரு பௌதிகம்
போற்றுதெய் விகமிவை புரிவதுங் கண்டேன்
புலக்கணக் கதவு பூட்டினேன் சிந்தை
அலக்கண் தீர்ந்த அறிவையுங் கண்டேன்
பொறிபுலன் கரணம் பொருந்திடுங் கலாதி
அறிகரு விகள்போ யடங்கிடங் கண்டேன்
தாழுமென் னிழப்பிற் றயங்குறு விளக்கிற்
சூழுறு மொளிபோற் றுலங்குதல் கண்டேன்
பஞ்ச வருணப் படாம்விரித் ததுபோல்
விஞ்சுபல் சோதி விளங்கிடக் கண்டேன்
சித்திர படத்திற் சேர்பல வடிவம்
ஒத்த அனேக மொளிக்குளே கண்டேன்
பஞ்சமூர்த் திகளும் பஞ்சசத் திகளும்
விஞ்சைபோ லொளிக்குள் வெளிப்படக் கண்டேன்
மண்ணெடுங் கடம்போல் வரைமா திரங்கள்
எண்ணில் புவனமு மென்னுளே கண்டேன்
எழுவகைத் தோற்றத் தியைந்த பல்லுயிரும்
வழுவறச் சோதி வானிடைக் கண்டேன்
தன்னுளே சகமுஞ் சகத்துளே யானும்
பின்னமற் றிருக்கும் பெற்றியுங் கண்டேன்
பளிங்கு போலப் படரொளி விந்து
விளங்குவெண் மதிபோல் வெளிப்படக் கண்டேன்

பரிதி போலப் படரொளி தோன்றி
ஒருபது நாத மொலிக்கவுங் கண்டேன்
அக்கினி போலு மனந்தமீன் போலுந்
தக்கபே ரொளியாய்ச் சராசர மனைத்தும்
புரந்தரு ளகண்ட பூரண மாகிப்
பரந்தசெஞ் சுடரைப் பரையெனக் கண்டேன்
அருட்பரை யொளிக்கு ளழுந்துமந் நேரம்
உருக்கமுங் கண்ணீ ரொழுக்கமுந் திகைப்புங்
கம்பமும் புளகமுங் களிப்புடன் நகையுஞ்
சிம்புள்போல் வலியுஞ் சித்தியுங் கண்டேன்
மேலுள விஞ்சை விதிநெறி விடுத்த
பாலனுன் மத்தன் பக்குவங் கண்டேன்
ஓங்கும் பரைக்கு ளுள்ளொளி யாகித்
தேங்குமா னந்தச் செழுஞ்சுடர் கண்டேன்
உள்ளொளிக் குவமை யொன்றுங் காணேன்
விள்ளவுந் தரமோ மீமிசை விளங்கித்
தெளிபடுஞ் சுடரைச் சிவமென் றுணர்ந்து
களிபடு ஞானக் கண்ணிற் கண்டேன்
பார்த்திடு மென்னைப் பசையற விழுங்க
வார்த்ததில் வீழ்ந்துற் றானந்த மானேன்
தன்னைத் தந்தா னென்னைக் கவர்ந்தான்
பின்னைப் பெறுமோர் பேற்றையுங் காணேன்
சுயம்பிர காசஞ் சொரூபா னந்தம்
இயம்புதற் கரிதா மின்பப் பெருக்கந்
தாடலை போலுங் கால்தலை போலுங்
கூடலை யென்றுற் கூறவும் படுமோ
பேய்பிடி யுண்டான் பெற்றி போலச்

சாய்படு கருவிச் சங்கமு நானும்
பகலோன் வெயிலிற் பாயிருள் விண்மீன்
சகசமாய்க் கலந்த தன்மையும் பெற்றேன்
காந்த மிரும்புங் கனல்படு மிரும்பும்
வேய்ந்தஇந் தனமும் வெந்நீ ருப்பும்
குளிகைபோன் மதுரங் கொண்ட நாவென்னத்
தளிவிடா தென்னைத் தடுத்தாட் கொண்டான்
விண்டேன் பிறப்பை வேதா கமத்தோர்
சண்டை தீர்ந்து சமரச மானேன்
திருமலி செந்தூர்ச் சேவற் பெருமான்
நிருமல ஞான நிகழ்த்தியாட் கொண்ட
திவ்வணந் தமியேற் கிருநிலப் பரப்பின்
அவ்வவர்க் களிக்கு மருள்நெறி யுணரேன்
ஆகையா லிந்த அருள்பெறல் வேண்டின்
ஓகையாற் றிருச்செந் தூரிடத் தேகிக்
குமரவேள் சரணங் குறித்துமா தவத்தீர்
நிமலமெய்ஞ் ஞான நீவிரும் பெறுவீர்
உத்தம ராவீ ருண்மையீ தென்று
சிற்றம் பலவன் செய்யுளாற் புகன்றான்
கருத்துற இதனைக் கற்போர் கேட்போர்
திருத்தகு மன்பாற் றினந்தொறுந் துதிப்போர்
பெறும்பல னிதனைப் பேசுதுங் கேண்மின்
உறும்பலன் வேண்டு முலகத் தோரே
பாவந் தீரும் பார்மிகு தரும
மேவிளம் பிறைபோல் மேன்மேல் வளருந்
துட்டதே வதைகள் தொட்டதும் வஞ்சர்
இட்ட பில்லி யிடர்களுந் தீரும்
வாதம் பித்தம் வலிபடுங் காசஞ்
சீதம் வெதுப்புத் தீரா நோய்கள்

வேதனை யிருந்த வியாதிக ளெல்லாம்
ஆதவற் கண்ட பனிபோ லகலுஞ்
சாகா வரமுந் தந்திடு முடம்பிற்
போகாப் பீடை போக்கி ரட்சிக்கும்
வறுமை நீங்கும் வாழ்வுண் டாகுஞ்
செறிதரு மட்டமா சித்தியுங் கொடுக்குஞ்
சரியை கிரியை சார்ந்திடு மியோகந்
தெரிதரு ஞானமுஞ் செறிந்து வாழ்குவரே.

கந்தர் சரணப்பத்து

அருளா ரமுதே சரணஞ் சரணம்
அழகா அமலா சரணஞ் சரணம்
பொருளா வெனையாள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணஞ் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணஞ் சரணம்
மயில்வா கனனே சரணஞ் சரணம்
கருணா லயனே சரணஞ் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

வேதப் பொருளே சரணஞ் சரணம்
விண்ணோர் பெருமான் சரணஞ் சரணம்
போதத் திறனே சரணஞ் சரணம்
புனைமா மயிலோய் சரணஞ் சரணம்
நாதத் தொலியே சரணஞ் சரணம்
நவையில் லவனே சரணஞ் சரணங்
காதுக் கினிதாம் புகழோய் சரணங்
கந்தா சரணஞ் சரணஞ் சரணம்.

—இராமலிங்க சுவாமிகள்

உ

குகமயம்

கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
வைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ வீரா நமோநமோ
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொலி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈரறு செவியில் இலகுகுண் டலமும்

ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்கப்
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்கப்
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்கக்

கதிர்வே லிரண்டு கண்ணிணைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்கப்
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்கச்
செப்பிய நாவைச் செவ்வேல் காக்கக்
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்கச்
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்கப்
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்கப்
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்கச்
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அருள்வேல் காக்கப்
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்கப்
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்கக்
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்கக்
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்கப்
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க

ஏப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்கத்
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்கக்
காக்கக் காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்கத்
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்கப்
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபடப்
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேறி இத்துணைச் சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணையும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிடக்
காலதூ தர்களெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அகன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற்செதி லாகச்
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரிவயப் போத்தொடு நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடா தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை

கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யளித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா.
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி

உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்